# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28

சுடர் 31 | கதிர் 281 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 17, வெள்ளிக்கிழமை 02.09.2016




பொறுத்திருங்கள் எண்டு மட்டும் சொல்லப்போடாதீங்க சேர்...

# இந்து சமுத்திர அரசுகளுக்கு இடையே பாதுகாப்பு இணக்கப்பாடு வேண்டும்

## சிங்கப்பூர் மாநாட்டில் பிரதமர் ரணில் வலியுறுத்து

(சிங்கப்பூரிலிருந்து திலீப்)

இந்து சமுத்திர அரசுகளுக்கு இடையில், பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குப் பொது இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தினார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

'இந்து சமுத்திர மாநாடு - 2016' இன் முதன்மை நிகழ்வு நேற்று மாலை 5 (இலங்கை நேரப்படி) மணிக்கு சங்கிரில்லா ஹோட்டலில் ஆரம்பமானது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க >> 25ஆம் பக்கம்



# கடற்படைக்குக் காணி வழங்குவது குறித்த தீர்மானம் ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, செப். 2

முல்லைத்தீவு–வட்டுவாகல் கடற்படைத் தளம் அமைந்துள்ள காணிகள் தொடர்பில் அடுத்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தீர்மானத்தின் பின்பே மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதுவரை நில அளவைகள் இடை நிறுத்தப்படும்.

இவ்வாறு நேற்று முல்லைத்தீவு மாவட்டச் செயலரின் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

வட்டுவாகல் கடற்படைத்தளம் அமைந்துள்ள 617 ஏக்கர் தனியார்காணிகளைக் கடற்படையினரின் பாவனைக்காக அபகரிக்கும் நோக்கில், மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி அந்த நிலப் பரப்பை >> 23ஆம் பக்கம்

## இருவேறு இடங்களில் பெண்கள் இருவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், செப். 2

கிளிநொச்சியில் இருவேறு பகுதிகளில் இருந்து நேற்றைய தினம் மீட்கப்பட்ட பெண்கள் இருவரின் உடல்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

முழங்காவில் - குமுழமுனையைச் சேர்ந்த பானுசா (வயது - 25) என்ற திருமணமாகிய இளம் குடும்பப் பெண் ஒருவர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார். அந்தப் பெண் >> 24ஆம் பக்கம்

# இன்று யாழ். வரும் பான் கீ மூனுடன் முத்தரப்புச் சந்திப்புகள்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 2

உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் இன்று யாழ்ப்பாணம் வருகை தருகிறார். எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குழுவினர், வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலான வடக்கு மாகாண அமைச்சர்கள் குழுவினர் ஆகி யோரை அவர் தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

கொழும்பிலிருந்து விமானம் மூலம் பலாலிக்கு வரும் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் முற்பகல் 11.30 மணியளவில் யாழ்ப்பாணத்தை வந்தடைவார். >> 23ஆம் பக்கம்



## பரவிப்பாஞ்சான் மக்களின் போராட்டம் தொடர்கிறது

கிளிநொச்சி, செப். 2

காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி நேற்று முன்தினம் மீண்டும் போராட்டத்தை ஆரம்பித்த பரவிப்பாஞ்சான் காணி உரிமையாளர்கள் நேற்று இரண்டாவது நாளாகவும் >> 23ஆம் பக்கம்



## மகிந்தவின் மலேசிய வருகையை எதிர்த்து மக்கள் போராட்டம்


### உருவப்படமும் எரிப்பு

கோலாலம்பூர், செப். 2

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மலேசியா சென்றுள்ள நிலையில், அவருக்கு எதிராக அங்கு நேற்று ஆர்ப்பாட்டம் >> 25ஆம் பக்கம்

# இலங்கை அரசுக்கு இந்தியா பாராட்டு

(சிங்கப்பூரிலிருந்து திலீப்)



நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்காக இலங்கை அரசு அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளும் பணிகளை மெச்சுவதாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் தெரிவித்தார் இந்தியாவின் அயலுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் எம்.ஜே.அக்பர்.

'இந்து சமுத்திர மாநாடு - 2016' இல் பங்கேற்பதற்காக சிங்கப்பூருக்கு வருகை தந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, நேற்றுப் பி.ப. 2.30 (இலங்கை நேரப்படி) மணியள >> 25ஆம் பக்கம்



## நல்லிணக்கம் குறித்து மைத்திரி - மூன் பேச்சு

கொழும்பு, செப். 2

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்றுச் சந் தித்துக் கலந்துரையாடினார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்றிரவு 7 மணி முதல் 7.30 மணிவரை நடைபெற்ற 30 நிமிட இரு தரப்புச் சந்திப்பில் முக்கிய விடயங்கள் >> 25ஆம் பக்கம்

## மூனின் வருகையை எதிர்த்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்



>> 24ஆம் பக்கம்


உங்கள் சேமிப்பிற்கு கவர்ச்சிகரமான வட்டி வீதம்

வர்தன எக்ஸ்றீம் சேவர்

ரூ.1000 தொடக்கம் ரூ.50 மில்லியனுக்கு மேல் நீங்கள் தொடர்ச்சியாக சேமிக்கும் எந்தவொரு தொகைக்கும் அதிகபட்ச வட்டி வருமானமாக 6.75% (AER 6.96%) முதல் 9.25% (AER 9.65%) வரை கவர்ச்சிகரமான வருடாந்த வட்டி வீதத்தினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

24 மணிநேர அழைப்பு மையம்: 0112350000

இச்சலுகைகளை இன்றே அனுபவித்திட அருகிலுள்ள DFCC வங்கி கிளைக்கு விரைந்து வர்தன எக்ஸ்றீம் சேவர் கணக்கினை ஆரம்பியுங்கள்.

www.dfcc.lk

*நிபந்தனைகள் உண்டு.

DFCC வங்கி ஃபிச் ரேட்டிங் லங்கா லிமிட்டெட்டின் AA- (lka) தரப்படுத்தலைப் பெற்றுள்ளது.

DFCC வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி

உங்கள் வளர்ச்சிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் இன விகிதாசாரத்தைக் குழப்பும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன

## நல்லாட்சி மீது சாடுகிறார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

வவுனியா, செப். 2
முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயா பிரதேசத்தின் மூவாயிரத்து 696 வாக்காளர்களை நெடுங்கேணி பிரதேசத்தின் பட்டிக்குடியிருப்பு கிராமத்துடன் இணைத்து இனவிகிதாசாரத்தைக் குழப்ப நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தமிழர் நிலத்தை அபகரித்து, வெலிஓயாவைத் தனிப் பிரதேச செயலாளர் பிரிவாக மாற்ற திரை மறைவில் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

இவ்வாறு குற்றஞ்சாட்டுகிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன். வவுனியா, நெடுங்கேணி - மருதோடை கிராமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:

ஆட்சி மாற்றத்தின் பின்னரும், கடந்த அரசின் அரசியல் நிகழ்ச்சி நிரலையே குடியேற்றம், காணிப் பறிப்புகள் போன்றவை இடம்பெறுகின்றன. இன்றைக்கு முல்லைத்தீவு மாவட்டத்திலே வெலிஓயா பிரதேசத்தில் இருக்கின்ற 5 கிராம சேவையாளர் பிரிவுகளுக்குரிய கிராமங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 696 வாக்காளர்களை வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கின் நெடுங்கேணிப் பிரதேசத்திலுள்ள பட்டிக்குடியிருப்புக் கிராமத்துக்குள்ளே கொண்டு வந்து இணைக்கின்றார்கள். ஏற்கெனவே இருக்கின்ற பட்டிக்குடியிருப்புக் கிராமம் என்பது 245 தமிழ் வாக்காளர்களைக் கொண்ட ஒரு கிராம சேவையாளர் பிரிவாகும். ஒரு மாவட்டத்தில் இருக்கின்றவர்களை இன்னுமொரு மாவட்டத்தின் வாக்காளர் இடாப்பிலே இரகசியமாகப் பதிவு செய்கின்றார்கள். அவ்வாறு பதிவதன் மூலம் என்ன செய்ய நினைக்கின்றார்கள்? என்ன செய்ய யோசிக்கின்றார்கள்? ஆகவே, தொடர்ந்தும் கடந்த அரசின் நிகழ்ச்சி நிரலையே இந்த அரசும் நடைமுறைப்படுத்துவதற்குப் பார்க்கின்றது.

வெலிஓயாவுக்குள் வருகின்ற கஜபாகு மொனராவெவ, கவியாணபுர கிராமம், எத்தாவெட்டுவ, நுவவெவர, சம்பத்நுவர, நிக்வெவ என்ற ஐந்து கிராமங்களின் வாக்காளர்களை பட்டிக்குடியிருப்பு கிராம சேவையாளர் பிரிவுக்குள்ளே உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நாங்கள் இவ்வளவு இழப்புக்கள் மற்றும் அழிவுகளைச் சந்தித்ததற்குப் பின்னரும் கூட இன்னும் இந்த நிலை தொடர்கிறது. குறித்த விடயங்கள் தொடர்பாக பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களோடு நேரடியாகப் பேசவேண்டிய தேவை இருக்கின்றது. அவர்களோடு கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டிய ஒரு தேவை இருக்கின்றது.அவற்றை விடுத்து, வெறுமனே நாடாளுமன்றத்தில் இருந்து எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனத்தைத்தான் ஏற்படுத்துகின்றன. இதை நான் காணாமற்போனோர் அலுவலகம் சட்டவரைவு மீதான விவாதத்தின் போதும் தெரிவித்திருக்கின்றேன்.

தமிழர் நிலத்தை அபகரித்து வெலிஓயா பகுதியை விஸ்தரித்து அதனை தனிப்பிரதேச செயலாளர் பிரிவாக மாற்ற திரை மறைவில் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

எனவே இந்தப்பகுதியைச் சேர்ந்த போரால் பாதிக்கப்பட்ட மக்களாகிய நீங்கள் உங்கள் நிலங்களில் குடியேறுங்கள். அவற்றைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உங்களுடையது. உங்கள் காணிகளில் நீங்கள் வாழ்வாதாரத் தொழில்களைச் செய்து அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு இருப்பதன் மூலம் அவற்றை பாதுகாத்துக் கொள்ள முடியும் - என்றார். (வ-21)

## முன்னாள் போராளி இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்

கிளிநொச்சி, செப். 2
கிளிநொச்சியில் கைது செய்யப்பட்ட முன்னாள் போராளி இன்று வவுனியா நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னாள் போராளியான மனோகரசீலன் நிசாந்தன் கிளிநொச்சி தொண்டமான் நகர் பகுதியில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை இனம் தெரியாத நபர்களால் வெள்ளை வானில் ஏற்றி செல்லப்பட்டார். அவரை அழைத்துச் சென்றமைக்கான காரணம் தெரியாது உறவினர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு அலைக் கழிந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்துள்ளதாக நிசாந்தனுடைய தாயாருக்கு வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் நேற்று காலை நீதிமன்றில் நிசாந்தன் முற்படுத்தப்படுவார் என்றும் மன்றுக்கு வருமாறும் தாயாரிடம் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

எனினும் நேற்றையதினம் முன்னாள் போராளியான நிசாந்தன் பொலிஸாரால் வவுனியா நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவில்லை.

இன்று (நேற்று) எனது மகனை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உள்ளதாகவும், என்னை வருமாறும் பொலிஸார் கூறியிருந்தனர். நான் அங்கு சென்றபோது, எனது மகனை நீதிமன்றுக்கு கொண்டுவரவில்லை. பொலிஸாரிடம் கேட்டபோது நாளை (இன்று) நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என அவர்கள் கூறினார்கள்' என நிசாந்தனின் தாயார் தெரிவித்தார். (வ-21)

## கிளிநொச்சி கல்வி வலயத்தில் குண்டுச் சிதறல்களுடன் 67 மாணவர்கள் வாழ்வு

கிளிநொச்சி, செப். 2
கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் கடந்த கால போர் காரணமாக 67 மாணவர்களின் உடலில் குண்டுச் சிதறல்கள் உள்ளதாகக் கிளிநொச்சி கல்வி வலயத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டம் ஒரேயொரு கல்வி வலயத்தினைக் கொண்டது. இங்குள்ள 104 பாடசாலைகளிலும் மொத்தமாக 67 மாணவர்கள் குண்டுச் சிதறல்களுடன் வாழ்வதாக கல்வி வலயத்தின் புள்ளி விவரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இதேவேளை, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டத்தில் 132 மாணவர்கள் உட்பட 410 பேர் குண்டுச் சிதறல்களுடன் வாழ்வதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். (வ-101)

## சாவகச்சேரிப் பிரதேச செயலகக் கூரைக்குள் குரங்குகள் அட்டகாசம்

சாவகச்சேரி, செப்.2
சாவகச்சேரிப் பிரதேச செயலக தட்டைக் கூரைக்குள் (லெவல் சீற்) குரங்குகள் நுழைந்ததால் பல இடங்களில் அவை உடைந்து வீழ்ந்தன.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் பொதுமக்கள் தினம் என்பதால், பல்வேறு தேவைகளுக்காக பொதுமக்கள் கூடியிருந்த வேளையில் குரங்குகள் தட்டைக் கூரையில் பாய்ந்து சென்றன. அந்த வேளையில் சில இடங்களில் அவை உடைந்து கீழே நின்ற பொதுமக்களுக்கு அருகில் வீழ்ந்தன. பொதுமக்களுடன் உரையாடிக் கொண்டிருந்த கிராம அலுவலர் ஒருவரின் தலையில் உடைந்ததகடுவீழ்ந்தபோதிலும், பாதிப்பு ஏற்படவில்லை.தகடுகள் கீழே வீழ்ந்ததால் அங்கு நின்ற பொதுமக்கள் சிதறி ஓடினர். மின் விளக்கு ஒன்று சரிந்தபோதிலும் கீழே விழவில்லை.

பிரதேச செயலக கட்டடத்துடன் அமைந்திருந்த தண்ணீர்த் தாங்கி அருகே காணப்பட்ட துவாரத்தின் ஊடாக குரங்குகள் உள்ளே நுழைவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## முதிரை மரக்குற்றிகள் கடத்தலை முறியடித்தனர் பளைப் பொலிஸார்

கிளிநொச்சி, செப். 2
எருவைக் கொண்டு சென்ற லொறி ஒன்றில் சட்டவிரோதமாக யாழ்ப்பாணத்துக்குக் கடத்தப்பட்ட 15 லட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகளைக் கைப்பற்றியதோடு, ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று கிளிநொச்சி, இத்தாவில் பகுதியில் இடம் பெற்றது.

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு லொறி ஒன்றில் பல லட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் கடத்தப்படுவதாகப் பளைப் பொலிஸ் நிலையத்துக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதனால் நேற்று காலை பளைப்பகுதியில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



இதன்போதே இந்த முதிரை மரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டன. லொறிக்குள் சாதுரியமான முறையில் எரு மூடைகளை ஏற்றி, அதற்கிடையில் மரக்குற்றிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு கொண்டுவரப்பட்ட மரக்குற்றிகள் 15 லட்சம் ரூபா பெறுமதியானவை. சாரதி சம்பவ இடத்தில் வைத்துக்கைதுசெய்யப்பட்டதுடன் லொறி தடுத்துவைக்கப்பட்டது.

சாரதி இன்று கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார். லொறியும் மற்றும் முதிரை மரக் குற்றிகளும் நீதிமன்றில் பாரப்படுத்தப்படும் என பொலிஸார் தெரிவித்தனர். (வ-21,27)

## உடுவில் நீதிவான் முகாம் ஒக்டோபருடன் மூடப்படுகிறது

யாழ்ப்பாணம், செப். 2
உடுவில் நீதிவான் முகாம் மக்கள் அடுத்த மாதத்துடன் முகாமில் வாழ்பவர்களின் இணக்கத்துடன் மூடப்படும் என மல்லாகம் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

உடுவில் நீதிவான் முகாமில் வசிக்கும் 13 குடும்பங்களையும் வெளியேற்றி, தமது காணியை வழங்குமாறு காணி உரிமையாளரால் கோரி மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த முகாமில் வசித்ததாகக் கூறப்பட்ட 13 குடும்பங்களில் 7 குடும்பங்கள் மட்டுமே தற்போது வரை முகாமில் இருப்பதனால் அவர்களுக்கு மட்டுமே அழைப்பாணை அனுப்பப்பட்டது. அவர்கள் வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து சமார் 20 வருடங்களாக அந்த முகாமில் வாழ்கின்றார்கள்.

இதில் 6 குடும்பங்களும் தற்போது முகாமில் இல்லை என்று மன்றில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் ஏனைய ஏழு குடும்பங்களும் தாம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதியுடன் அங்கிருந்து வெளியேறுவதாக இணங்கிக் கொண்டனர் என மல்லாகம் நீதிமன்றில் தெரிவிக்கப்பபட்டது. (வ-4,101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடைகளைப் பிடித்து வைத்துள்ளது கடற்படை

## வட்டுவாகல் மக்கள் கொதிப்பு

யாழ்ப்பாணம், செப். 2

மக்களின் வாழ்விடத்தினை மட்டுமல்ல, எமது வாழ்வாதாரத்திற்கான கால்நடைகளையும் வட்டுவாகல் கடற்படையினர் அடாத்தாகப் பிடித்து வைத்துள்ளனர். அவற்றை விடுவித்து மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துங்கள்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டச் செயலரிடம் கோரினர் மக்கள்.

வட்டுவாகல் கடற்படைத் தளம் அமைந்துள்ள 617 ஏக்கரையும் கடற்படையினரின் பாவனைக்காக அபகரிக்கும் நோக்கில் அந்தப் பிரதேசத்தை அளவீடு செய்ய மேற்கொள்ளப்படும் முயற்சிக்குத் தீர்வுகாணும் நோக்கில் நேற்றைய தினம் மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே மேற்படி கோரிக்கையும் விடப்பட்டது.

முல்லைத்தீவு, வட்டுவாகல் பகுதியில் மக்களின் வாழ்விடத்தை மட்டும் கடற்படையினர் அபகரிக்கவில்லை. அந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்திற்கான கால்நடைகளைக்கூட அடாத்தாகப்பிடித்து முட்கம்பி வேலிகளுக்குள் வைத்து, அவற்றின் வருமானங்களை ஈட்டுகின்றனர். ஆனால் அவற்றின் உரிமையாளர்களாகிய நாம் விலை கொடுத்துப் பால் வாங்கும் நிலையில் உள்ளோம். எமது நூற்றுக் கணக்கான கால்நடைகளை அபகரித்துள்ளவர்களுக்குப் பெயர் பாதுகாப்புப் படைகளாம். இதை எவ்வாறு ஏற்கமுடியும் என மக்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த கடற்படை அதிகாரி ஒருவர், அங்கு நூற்றுக் கணக்கான கால்நடைகள் இல்லை. 30 கால்நடைகள் மட்டுமே உள்ளன. அவற்றை அடுத்த வாரம் மீள ஒப்படைக்கின்றோம் -என்றார்.

(வ-101)

## வவுனியா இளைஞன் மலேசியாவில் சாவு

தொழில் நிமிர்த்தம் மலேசியாவுக்குச் சென்ற வவுனியா இளைஞன் உயிரிழந்தார். அவரது சடலம் மலேசிய தூதரகத்தால் நேற்று வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

வவுனியா கற்பகபுரம் பகுதியைச் சேர்ந்த ரதீசன் (வயது - 23) என்ற இளைஞனின் சடலமே நேற்று அனுப்பிவைக்கப்பட்டது.

இந்த இளைஞன் கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் தொழில் வாய்ப்பைப் பெற்று மலேசியா சென்றிருந்தார். எனினும் கடந்த 25ஆம் திகதி இறந்து விட்டதாக வவுனியாவிலிருக்கும் வீட்டாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. என்ன காரணம் எனத் தெரியாது நேற்று சடலம் தூதரகத்தின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது என உறவினர்கள் தெரிவித்தனர்.

(வ-21)

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 544
சீட்டிழுப்பு திகதி 2016.09.01
வியாழக்கிழமை
W 20 46 52 58
ரூ.48,452,720/=

UDUVIL GIRLS' COLLEGE
ANNOUNCEMENT REGARDING
OPENING OF THIRD TERM - 2016

All students and staff are hereby informed that the school will commence **third term session on Thursday, 8th September 2016** with the assembly at **8.00 a.m.**

The staff members are requested to be present at the JDCSI Cathedral, Vaddukoddai on **Wednesday, 7th September 2016 at 8.00 a.m.** for staff retreat.

**Please note the change of dates of these two.**

*Manager,*
*Uduvil Girls' College.*

## தனிநாயகம் அடிகளாரின் 36 ஆவது நினைவு தினம்





தனிநாயகம் அடிகளாரின் 36 ஆவது நினைவு தினம் நேற்று இடம்பெற்றது. வவுனியா மணிக்கூட்டுக்கோபுரத்திற்கு அருகிலிருக்கும் அவரது உருவச்சிலை முன்றிலில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவரும், நகர வரியிறுப்பாளர் சங்கத் தலைவருமான சந்திரகுமார் தலைமையில் நினைவு தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினரும் அன்னாரின் திருவுருவச் சிலையை நிறுவியவருமான ஜி. ரி. லிங்கநாதன், நகர சபை முன்னாள் உப தலைவர் சந்திரகுலசிங்கம், வன்னிமாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவநாதன் கிஷோர், மாவட்ட சமூகசேவைகள் உத்தியோகத்தர் எஸ். எஸ். வாசன், சமூக ஆர்வலர்கள், பொது மக்கள், வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, ஆசிரியர்கள், மாணவர்கள், எனப் பலர் கலந்து கொண்டனர்.

(வ-4)

# அச்சுவேலி முக்கொலை வழக்கில் சந்தேகநபரின் பிணை மனு நிராகரிப்பு

யாழ்ப்பாணம், செப். 2

அச்சுவேலி முக்கொலை வழக்கில் கொலைக்குற்றம் சாட்டப்பட்டுள்ள பொன்னம்பலம் தனஞ்செயனின் பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் மேல் நீதிமன்று நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் பிணை மனு பரிசீலிக்கப்பட்டது. பிணை மனு தொடர்பான விசாரணைகள் கடந்த ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மூன்று பேர் கொலை செய்யப்பட்டுள்ள வழக்கின் எதிரிக்கு அவசரமாகப் பிணை வழங்க முடியாது எனத் தெரிவித்து, முற்று முழுதான பிணைக் கட்டளை வழங்குவதற்காக வழக்கு ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

அச்சுவேலி கதிரிப்பாயில் 2014 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் திகதி நித்தியானந்தன் அருள்நாயகி, நித்தியானந்தன் சுபாங்கன், யசோதரன் மதுஷா ஆகிய மூவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் மறுநாள், பொன்னம்பலம் தனஞ்செயன் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றின் உத்தரவிற்கமைய விளக்கமறியலில் இருந்து வருகின்றார்.

இந்த வழக்கில் 3 கொலைகள் இடம்பெற்றிருக்கின்றன. இது பாரதூரமான சம்பவமாகும். இந்த வழக்கில் கொலைக்குற்றம் சாட்டப்பட்டவரை பிணையில் செல்ல அனுமதித்தால், அவர் நாட்டை விட்டுத் தப்பியோடக் கூடிய சூழல் இருக்கின்றது. அதேநேரம் சாட்சிகளை அச்சுறுத்தக்கூடிய சூழ்நிலையும் மேல் நீதிமன்ற கொலை வழக்கு விசாரணையில் முன்னிலையாகாமல் தலைமறைவாகக் கூடிய வாய்ப்பும் இருக்கின்றது.

இந்த மூன்று கொலைகளுக்கும் குற்றவாளியாக ஒருவர் காணப்பட்டால், தண்டனைச் சட்டக் கோவை 296 ஆம் பிரிவின் கீழ், அவருக்கு 3 சாவுத் தண்டனைகள் விதிக்க முடியும். அந்த அளவுக்கு இது பாரதூரமான குற்றச் செயலாகும்.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவருக்குப் பிணை கோரும் விண்ணப்பமானது பிணைக் கட்டளைச் சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் பரிசீலிக்கப்பட வேண்டும். அந்தச் சட்டத்தின் படி குற்றம் சாட்டப்பட்டவருக்கு, பிணை வழங்க வேண்டுமா இல்லையா என்பது மேல் நீதிமன்ற நீதிபதியின் தற்துணிவு அதிகாரத்தைக் கொண்டதாகும். அதுவும் நீதி நியாயம் சார்ந்ததாக இருக்க வேண்டும். அதனால் பிணை நிராகரிக்கப்படுகிறது என்று நீதிபதி கட்டளை வழங்கினார்.

(வ-4)

ஓம் விராட் விஸ்வபிரமனே நமக

பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த (25.08.2016) வியாழக்கிழமை மல்லாகம் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் சமாதான நீதிவான்களாக சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்ற சங்கானை மத்தியஸ்தர் சபையைச் சேர்ந்தவர்களான
திரு.இ.புரந்திரதேவன் (J.P)
திரு ஆ.கனகரத்தினம்(J.P)
திரு.சி.சுந்தரலிங்கம் (J.P)
திரு.த.பஞ்சநாதன் (J.P)
ஆகியோரை மனதாரப் பாராட்டுவதோடு அவர்களின் சேவைகள் இன்னும் பல்லாண்டு தொடரவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : த.ரவீந்திரன் (J.P)
சங்கானை நிகரை வாழ் மக்கள்.

ஓம் விராட் விஸ்வபிரமனே நமக

உளமார வாழ்த்துகின்றோம்



சின்னத்துரை சுந்தரலிங்கம் (JP)

(நிகரை ஞான வைரவர் ஆலய பரிபாலன சபையின்முன்னாள் தலைவரும் நிகரை அம்பாள் சனசமூக நிலைய தலைவரும், J/179 முதியோர் சங்க தலைவரும்)

கடந்த (25.08.2016) அன்று மல்லாகம் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்ற எமது சி.சுந்தரலிங்கம் (JP) ஐயா அவர்களை மனதாரப் பாராட்டுவதோடு அவரின் சேவைகள் எமது கிராமத்திற்கு தொடர வேண்டுமென நிகரை ஞானவைரவப் பெருமானை வேண்டுகின்றோம்.

நிகரை ஞான வைரவர் ஆலய பரிபாலனசபை,
நிகரை இந்து இளைஞர் மன்றம்,நிகரை அம்பாள் சனசமூகநிலையம்.



உ
அம்பிகை துணை
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

புங்குடுதீவு 04 பிட்டியம்பதி
அருள்மிகு ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி
அம்பாள் ஆலய
முக்கிய பொதுக்கூட்டம்

**இடம்: ஆலய முன்றல்**
**காலம்: 05.09.2016 திங்கள்**
**நேரம்: காலை 10.00 மணி**

ஆலய வளர்ச்சி சம்பந்தமான முக்கிய விடயங்கள் ஆராயப்பட வேண்டியுள்ளதால் நிர்வாகசபை உறுப்பினர்கள், மாகாசபையினர், அம்பிகையின் மெய்யடியார்கள் அனைவரும் நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு ஆலய வளர்ச்சி தொடர்பான தங்களின் கருத்துக்களை முன்வைக்கமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு மாங்குளம் சந்தைக் கட்டடத்தின் கடைகளுக்கான வைப்புப்பண மீள்கேள்வி அறிவித்தல்

புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் ஒட்டுசுட்டான், ஒலுமடு உபஅலுவலக எல்லைக்குட்பட்ட நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட மக்களிடமிருந்து 2016 ஒக்ரோபர் முதலாம் திகதி தொடக்கம் கீழ்குறிப்பிடப்படும் மாதாந்த குத்தகையின் அடிப்படையில் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு ஏதுவாக கடைகளுக்கான திறப்புப்பண கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 02.09.2016 -22.09.2016 அலுவலக நாள்களில் பிற்பகல் 03.00 வரை

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 23.09.2016 நண்பகல் 12.00 மணி வரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 23.09.2016 பிற்பகல் 12.30 மணி

கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை **செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு** என்னும் முகவரிக்கு அரக்கு(சீல்) முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 23.09.2016 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறு பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு** என்ற முகவரிக்கு 23.09.2016 நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் ஒட்டுசுட்டான், ஒலுமடு உப அலுவலக எல்லைக்குள் நிரந்தரமாக வதியும் இடத்தின் வதிவிடச்சான்றிதழ் மற்றும் கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப்பிரதியுடன் நேரடியாக புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்கள் கீழ் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணங்கள், மீளளிக்கக் கூடிய வைப்புப்பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக்கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.
4. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த் கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
6. கேள்வி நிபந்தனைகள் , அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரமுண்டு.
7. வாடகை வருடா வருடம் சபையால் நிர்ணயிக்கப்படும் கால ஒழுங்கில் வாடகையின் அடிப்படையில் 10% அதிகரிக்கப்படும்.
8. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்பட வேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடத்த அனுமதிக்கப்படமாட்டார்.இருந்தும் அவரது வாரிசு நடத்த அனுமதிக்கப்படுவார். (உதாரணம் :- மகன், மகள்)
9. சபையின் அனுமதியின்றி எதுவித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
10. நிராகரிக்கப்பட்ட கேள்விதாரரின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.
11. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.
12. பெற்றுக்கொள்ளும் கடைகளில் ஏற்படும் பாதிப்புக்களுக்கு குத்தகைக்கு எடுத்தவரே பொறுப்பாவார்.
13. குத்தகைக்கு பெற்ற கடைக்கான மின்சார செலவு குத்தகைக்கு பெற்றவரையே சார்ந்ததாகும்.
14. வாடகைப்பணம் மாதாந்தம் இறுதி வேலை நாளுக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும்.தவறின் 10% தண்டமும் சேர்த்து அறவிடப்படும் என்பதுடன் வாடகைப்பணம் இரு மாதங்கள் தொடர்ந்து கட்டத் தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.
15. சபையின் செயலாளரின் இந்த ஒப்பந்தம் தொடர்பாக எவ்வித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாகச் சபைக்கெதிராகவோ/ செயலாளருக்கு எதிராகவோ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.
16. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | கடை இலக்கம் | மாதாந்த வாடகை (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக்கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம். | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை. |
|---|---|---|---|---|---|
| 01 | G.F - 04. | 5,250.00 | 1,000.00 | 33,000.00 | 315,000.00 |
| 02 | G.F - 06. | 1,750.00 | 1,000.00 | 11,000.00 | 105,000.00 |
| 03 | G.F - 07. | 1,750.00 | 1,000.00 | 11,000.00 | 105,000.00 |
| 04 | G.F - 08. | 1,750.00 | 1,000.00 | 11,000.00 | 105,000.00 |
| 05 | G.F - 09. | 1,750.00 | 1,000.00 | 11,000.00 | 105,000.00 |
| 06 | G.F - 10. | 1,750.00 | 1,000.00 | 11,000.00 | 105,000.00 |
| 07 | U.F - 01 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 08 | U.F - 02 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 09 | U.F - 03 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 10 | U.F - 05 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 11 | U.F - 06 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 12 | S - 01 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 13 | S - 02 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 14 | B - 05 | 1,250.00 | 1,000.00 | 8,000.00 | 75,000.00 |
| 15 | B - 06 | 1,250.00 | 1,000.00 | 8,000.00 | 75,000.00 |
| 16 | B - 07 | 1,250.00 | 1,000.00 | 8,000.00 | 75,000.00 |
| 17 | B - 08 | 1,250.00 | 1,000.00 | 8,000.00 | 75,000.00 |
| 18 | B - 09 | 1,250.00 | 1,000.00 | 8,000.00 | 75,000.00 |
| 19 | B - 10 | 1,250.00 | 1,000.00 | 8,000.00 | 75,000.00 |
| 20 | B - 11 | 1,250.00 | 1,000.00 | 8,000.00 | 75,000.00 |

**திரு.ந.ஜெயராஜா,**
**செயலாளர், பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.** **2016.08.31**

# மீனவர்களை விடுவிக்கக் கோரி தொடர் போராட்டம் நடத்தப்படும்

## ராமேஸ்வரம் மீனவர்கள் அறிவிப்பு

ராமநாதபுரம், செப்.2
ராமேஸ்வரம் மீனவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தித் தொடர் போராட்டங்களை நடத்தவுள்ளனர். ராமேஸ்வரம் அக்னி தீர்த்தக் கடலில் இறங்கிக் கண்டன ஆர்பாட்டம் நடத்தப்படும் என்றும் அறிவித்துள்ளனர்.
ராமேஸ்வரம் துறைமுகத்தில் மீனவப் பிரதிநிதிகள் மற்றும் பாதிக்கப்பட்ட படகு உரிமையாளர்களின் அவசர ஆலோசனைக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் இலங்கைக் கடற்படையினரின் தொடர் தாக்குதல் மற்றும் கைது நடவடிக்கைகளுக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.
சிறைபிடிக்கப்பட்ட 4 மீனவர்களையும் 114 விசைப்படகுகளையும் விடுதலை செய்யவேண்டும். நான்காம் கட்டப் பேச்சு உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் பாரம்பரிய கடற் பகுதியில் இழந்த மீன்பிடி உரிமையைப் பெற்றுத்தர வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டம் நடத்துவது என்றும் அதில் தீர்மானிக்கப்பட்டது. எதிர்வரும் 12 ஆம் திகதி ராமேஸ்வரம் பஸ் நிலையத்துக்கு எதிரே காத்திருப்பு உணவுதவிர்ப்புப் போராட்டம் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.
தொடர்போராட்டங்களுக்கு தமிழகத்திலுள்ள விசைப்படகுகள் மற்றும் நாட்டுப்படகு மீனவர்களின் ஆதரவைப் பெற்று தமிழகம் தழுவிய தொடர் போராட்டங்கள் நடத்துவது எனவும் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற மீனவ சங்கப் பொறுப்பாளர்கள் தெரிவித்தனர். (ந-4)

# கால்வாயில் தேங்கும் கழிவு நீரால் வீதியில் பயணிக்க முடியா நிலை

## நடவடிக்கை எடுக்குமாறு வவு. மக்கள் கோரிக்கை



வவுனியா, செப். 2
வவுனியா நகரின் மத்தியிலிருந்து புகையிரத நிலையம் செல்லும் வீதியிலுள்ள கால்வாயிலிருந்து கடும் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் அந்த வீதியூடாக போக்குவரத்துச் செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது.
இவ்வாறு பொதுமக்கள் குற்றஞ்சாட்டினர்.
வவுனியா நகர் மத்தியிலிருக்கும் இந்தக் கால்வாயில் கழிவு நீர் தேங்கியுள்ளது. பாடசாலை மாணவர்கள் பெருமளவானவர்கள் இந்த வீதியால் பயணிக்கின்றனர். கடும் துர்நாற்றம் வீசுவதால் வீதியால் பயணிக்க முடியவில்லை. கால்வாயில் தேங்கியுள்ள நீரால் நுளம்புகளும் அதிகளவில் உற்பத்தியாகின்றன. வவுனியா நகர சபையினர் இது குறித்து அதிக கவனம் எடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் தெரிவித்தனர்.
வவுனியா நகரப் பகுதியிலுள்ள குறிப்பாக வவுனியா பஸ் தரிப்பிடத்திலிருந்து புகையிரத நிலையம் செல்லும்வீதியிலுள்ள கால்வாய்கள் சரியான முறையில் சீரமைக்கப் படவில்லை. அதனாலேயே தண்ணீர் தேங்கியுள்ளது. வாய்க்கால் சிமெந்திட்டு செப்பனிடப்படவில்லை. தாண்டிக்குளம் பகுதியிலும் இதேபோன்ற பிரச்சினைகள் காணப்படுகின்றன. இது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்–என்று வவுனியா நகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார். (ந-4)

# திண்மக் கழிவகற்றலுக்கு சமூக அமைப்புக்கள் ஒத்துழைப்பு

யாழ்ப்பாணம், செப். 2
யாழ். மாநகராட்சியின் திண்மக் கழிவகற்றும் செயற்பாடுகளுக்கு சமூக சேவைகள் அமைப்புக்களும் ஒத்துழைப்பதற்கு முன்வந்துள்ளன.
இவ்வாறு மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கழிவகற்றும் செயற்பாடுகளுக்கு பொது மக்கள் கூடிய ஒத்துழைப்புத் தர வேண்டும். சமூக அமைப்புக்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளன. மாநகராட்சி மன்றப்பகுதியில் எமது கழிவகற்றும் நடவடிக்கைகள் 23 வட்டார ரீதியாகவும் முழுவீச்சில் இடம்பெற்று வருகின்றன.
குடியிருப்பாளர்கள் தமது குடியிருப்புக் கழிவுப் பொருள்களை அதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் இடவேண்டும். இது பற்றிய விழிப்புணர்வுகளை மக்களுக்கு வழங்கப்படவுள்ளன– என்றார். (ந-17)

**சிறீக்குமரன் இசைமன்றம்**
யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அருகில் ஓகன், வீணை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. தங்கள் நேரத்துக்கு ஏற்றபடி வகுப்புக்களுக்கு வரலாம். தனிப்பட்ட வகுப்புக்களும் சென்று கற்றுக் கொடுக்கப்படும். மற்றும் மேற்படி வகுப்புக்கள் புதிதாக ஆரம்பிப்பதற்கு யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் அறை வாடகைக்குத் தேவை.
077 533 0442

**வேலைவாய்ப்பு**
கிளிநொச்சியில், A9 வீதியில்.பழைய வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள "நியூ சன்ஸ் செறமிக் பிறைவேற் லிமிட்டெட்" நிறுவனத்திற்கு விற்பனையாளர்கள் தேவை, (Sales Man), O/L, A/L படித்த ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 0212283872
0729532598

**பணியாளர் தேவை**
யாழ்.நகரில் இயங்கும் பிரபல ஆடைக்காட்சி அறைக்கு ஆண்/ பெண் பணியாளர்கள் தேவை. ஆடை வியாபாரத்தில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (யாழ்.நகர்ப் பகுதியில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
077 018 5471

**வேலை ஆள்கள் தேவை**
யாழ் நகரில் இயங்கி வரும் ஐஸ்கிறீம் கடைக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை. உடன் வரவும்.
01. தேநீர் தயாரிப்பவர் (Tea maker). 03. கிளீனர்
02. உணவு பரிமாறுபவர். 04. சமையல் உதவியாளர்(ஆண்)
திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.
No.442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7885/ 075 979 8053

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டதாரி மற்றும் டிப்ளோமா தர ஆயிரத்து 38 ஆசிரியர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், செப். 2

பட்டதாரி மற்றும் டிப் ளோமா தர ஆசிரியர் நியமனம் அண்மையில் மஹரகம கல்வியியற்கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. ஆயிரத்து 38 ஆசிரியர்களுக்கான நியமனம் அதில் வழங்கப் பட்டது. அவர்களில் 103 பேர் மாத்திரமே தமிழர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுச்சாமி இராதாகிருஷ்ணன், கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் ஆகியோர் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

பட்டதாரிப் பயிலுநர், தொழில்நுட்பப் பட்டதாரிகள், டிப்ளோமா தாரர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

இந்தப் பெரிய வேறுபாடு குறித்து கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் கல்வி அமைச்சு அதிகாரிகளிடம் அறிக்கை கேட்டுள்ளார் என்றும், கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ற-50)

## பொலிஸாரின் சமிக்ஞையை மீறியவருக்கு தண்டம்

தென்மராட்சி, செப்.2

வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் தமது கடமைகளைச் செய்யும் போது அதற்கு ஒத்துழைக்க வேண்டியது ஒவ்வொரு சாரதியின் பொறுப்பாகும். போக்குவரத்துப் பொலிஸாரின் சமிக்ஞையை மீறி வாகனம் செலுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனத்தை நிறுத்துமாறு வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் சமிக்ஞை செய்த போது, நிறுத்துவதுபோல் பாசாங்கு செய்து வேகமாக வாகனத்தைச் செலுத்தி தப்பியோட முயன்ற சாரதியைத் துரத்திப்பிடித்த பொலிஸார் சோதனையிட்ட போது, சாரத்திய அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகன வரிப் பத்திரம் போன்றவை இல்லாத நிலையில் வாகனம் செலுத்தியமை கண்டு பிடிக்கப்பட்டது.

சாரதிக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கு விசாரணையின்போது சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டார். ஆவணங்கள் இல்லாமல் வாகனம் செலுத்தியமை, பொலிஸாரின் சமிக்ஞையை மீறியமை ஆகிய குற்றங்களுக்காக சாரதியை எச்சரிக்கை செய்த நீதிவான் சாரதிக்கு 20 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தார்.


காப்புறுதிப் பத்திரம் மற்றும் வாகன வரிப் பத்திரம் ஆகியவை இன்றி வாகனம் செலுத்திய இரு சாரதிகளுக்கு தலா 13 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார். (ற-9)

இலங்கையின் புகழ் பூத்த, முன்னணி
ஆங்கில மொழி பயிற்சிக் கல்லூரி





இந்த வருடம் A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான.....
ஆங்கில டிப்ளோமா பாடநெறிகள் ஆரம்பமாகின்றன.
03.09.2016 முற்பகல் 10.00 மணி
(சனி/ஞாயிறு தினங்களில் 3/6 மாதங்கள்)
(பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு 20 % கட்டண சலுகை)
E - CITY COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT
இல. 372D, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(வீரமாகாளி அம்மன் கோயில் அருகில்)
Tel: 021 221 7106 / 077 061 0271/ 077 340 0418 / 077 492 4166

LANKA NIPPON
NIPPON



PURE LED LIGHTS
White / Warm
குறைந்த வோல்ட்டேஜில் உங்கள் வேலைகள்






85V / 265V
Output 230 V
- உயர்தர PURE WHITE LED's CLEAR / FROSTED
- ACCURATE WATTS
- COMPARE THE LIGHTING OF NIPPON BULBS WITH OTHER BRANDS

| | | |
|---|---|---|
| T5 - | Light Fixture | 790 /= |
| T8 - | LED BULB Glass | 570/= |
| T8 - | LED BULB Pc | 660/= |
| | Fixture | 190/= |

- வர்த்தக தள்ளுபடி வழங்கப்படும்.

காட்சியறை:
91, Nuge Road, Peliyagoda. (Near Kandy Road)
LANKA NIPPON ANTENNA (PVT) LTD
Quality is Our Pride
18, Keyzer Street, Colombo-11.
Tel: +9411 243 7735 /+9411 523 0975, Fax: +9411 243 7687
E-mail: info@lankanippon.com
Web: www.lankanippon.com

சர்வதேச புலவர் திருமணசேவை
1962இல் இருந்து இன்றுவரை சேவையாற்றி உலக சாதனை படைத்த நிலையத்துடன் தொடர்பு கொண்டு நீங்கள் விரும்புகின்றபடி உள்நாட்டு , வெளிநாட்டுத் திருமணங்களை செய்து கொள்ளுங்கள். திருமண உலகின் நம்பிக்கைக்கு உரிய சர்வதேச புலவர் திருமணசேவை உங்கள் திருமணங்களை நிறைவேற்றித் தரும்.
இயக்குநர்:
புலவர் செ.து.தெட்சணாமூர்த்தி
*"மதுரகானம்", 238, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 7147, 077 573 7301, 071 335 2215
*57, ஸ்ரேசன் வீதி, கிளிநொச்சி (கச்சேரிக்கு அருகில்)
021 228 3247, 071 355 2215

அங்குரார்ப்பண ஒன்று கூடல்
காங்கேசன்துறைப் பிரதேசத்தில் தையிட்டி வடக்கு, தெற்கு, கிழக்கு பகுதி கிராம மக்களுக்கான "ஒன்றிணைந்த தையிட்டி கிராம மக்கள் புனர்வாழ்வு அமையத்தினை" லண்டன் மற்றும் ஏனைய நாடுகளில் வாழும் தையிட்டி மக்கள் அனுசரணையுடன் அங்குரார்ப்பணம் செய்யப்படுகின்றது.
திகதி :- 03.09.2016 சனிக்கிழமை
நேரம் :- பிற்பகல் 3 மணி
இடம் :- வேதபாராயண சன சமூக நிலையம், கே.கே.எஸ்.வீதி, உப்புமடச் சந்தி, கோண்டாவில் மேற்கு.
பிரதான விடயம் :- மீள் குடியமர்வும், புனர்வாழ்வும்.
மேற்குறிப்பிட்ட பகுதி கிராம மக்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.
- நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் -
077 640 6966, 077 419 0305, 077 678 7341

The Annual General Meeting of Jaffna College Alumni Association
The above meeting will be held on the **03.09.2016 at 4.00 pm in Ottley Hall.**
Your presence is very much appreciated.
**Annual General Meeting Agenda**
- Prayer
- Minutes of the last Ex.Co Meeting
- Secretary's report
- Treasurer's Report
- Principal's Report
- Election of new office bearers.
- Any Other Business.

K.SELVARAJAH
Hony. Secretary.

P.P.T Express இன் மற்றும் ஒரு விரிவாக்க சேவை






☑ பகல் இரவு சேவையாக விஸ்தரித்துள்ளது
☑ காலை 6.30 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து யாழ் நகர் வந்து, காலை 7.30 மணிக்கு கொழும்பு நோக்கிப் பயணிக்கும்.
☑ கொழும்பு வெள்ளவத்தையிலிருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு கொட்டாஞ்சேனை ஊடாக யாழ்ப்பாணம் வந்து பருத்தித்துறை செல்லும்.
☑ காங்கேசன்துறையிலிருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் ஊடாக கொழும்பு நோக்கிப் பயணிக்கும்.
☑ வழமைபோன்று இரவு சேவைகளும் நடைபெறுகின்றன.
மேலும் இலங்கையின் முதற்தர துரித வெளிநாட்டு பொதிகள் சேவைகளுடாக உங்கள் உறவுகளின் இல்லங்களுக்கு பொதிகள் துரிதமாக கையளிக்கப்படும்.
☑ யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் பொதிகள் சேவை நடைபெறுகின்றன.
email : info@ppttravel.com web : www.ppttravel.com



இலங்கையில் சுற்றுலா பயணத்துக்கு உரிய பஸ்சேவைகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

| Colombo - 06 | Colombo - 12 | Jaffna | Point Pedro |
|---|---|---|---|
| #296 A1, Galle Road, Wellawatte, Colombo - 06. | #182, Central Road, Colombo-12, | #183, K.K.S. Road, Jaffna. | Arasadi Lane, Point Pedro. |
| 076 6036204 / 011 2364999. Fax: 011 2361144 | 077 5755175 / 011 4375790 | 077 5731318 / 0214923240 | 021 4923724 / 077 573 6003 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



அமரர் குமாரசாமி
யோகேந்திரா
(பொறியியலாளர்)

கடந்த 20.07.2016 சனிக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் பிரிவு கேட்டு உள் நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் நேரில் வந்து எமது துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


இன்று (02.09.2016) வெள்ளிக்கிழமை அவரது கொழும்பு இல்லத்தில் வீட்டுக்கிருத்தியங்கள் நடைபெற்று ஆன்மா சாந்திப் பிரார்த்தனையும் நடைபெறும்.

80/10, சற்றிஸ்காரா அவனியூ,
ரெம்பிள்ஸ் றோட், மவுண் லெவனியா.

குடும்பத்தினர்.
சகோதரி- கொக்குவில்

## பதினேழாம் ஆண்டு நினைவலைகள்

குணசிங்கம்
ஞானேந்திரன்
(குட்டிக்கண்ணா)
(கோபிகா ஆடை அகம் – உரிமையாளர்)
5/4, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.



மகிழ்வில்
07.01.1977

துன்பத்தில்
10.09.1999

ஞான ஒளியே ஞானேந்திரா......
கண்ணைக்கவரும் அழகினைக் கொண்டவனே!
கண்ணா என எல்லோராலும் அழைக்கப்பட்டவனே!
நல்லூர்கந்தனின் தேர் சுமந்த வீதியில் உலா வந்தவனே!
அன்று பூங்காவன திருநாளிலே உன் உயிரை தொலைத்தோமடா
ஏங்கித் தவிக்கின்றோம் கண்ணா!
எமது உயிருள்ள வரைக்கும்

உனது பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அக்கா,
தங்கை, மச்சான், மருமகள்,
மருமகன்மார், உறவினர்,
நண்பர்கள்.

40/6, புகையிரத வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## 19ஆம் ஆண்டு மனதை விட்டகலா மகளின் நினைவு

கண்மகிழ
16 . 12 . 1980

மண்நெகிழ
02 . 09 . 1997



### செல்வி சின்னையா கவிதா

திதி: பிரதமை (02.09.2016) வெள்ளிக்கிழமை

கவிதா எங்கள் செல்லமே
எங்கள் உளம் நிறைந்த வரவாகி
உயிரில் நிறைந்தவளே! உன் பிரிவால்
கலங்கித் துடிக்கின்றோம் கவிதா
"கவிதாலயா"
நிமிர்ந்து நிற்கின்கிறது வானுயர - வண்ணமாய்
என்றும் உன்
நினைவாலயமாக
'கவிதாலயா'

இல.15, நொத்தாரிஸ் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

என்றும் உன்னைமறவாத
அம்மா, அப்பா,
மற்றும் குடும்பத்தினர்.
(Oep. 4227) (13.18)

# தர்மலிங்கத்தின் 31ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.02

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் 31ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 07 மணிக்கு நடைபெறவுள்ளது என நினைவுக் குழுவினர் அறிவித்தனர்.

தாவடி நினைவுத்தூபியில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் விழாக்குழுத் தலைவர் த.திருஞானசம்பந்தர் தலைமை வகிக்கவுள்ளார்.

நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமாகிய இரா.சம்பந்தன் நினைவுப் பேருரை ஆற்றவுள்ளார் என்று தெரி விக்கப்பட்டது. (ற-ரி)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் விஞ்ஞான பிரிவு ஆசிரியர்
திரு.ச.கிருஸ்ணானந்தம் அவர்களின் தந்தையார்

**நவரத்தினம் சச்சிதானந்தம் (ஓய்வுபெற்ற வைத்தியர்)**

அவர்கள் 29.08.2016 திங்கட்கிழமை காலமாகிவிட்டார். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்- யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் உயர்தர கணித - விஞ்ஞான பிரிவு ஆசிரியர்
திரு.இ.இரமணன் அவர்களின் தந்தையார்

**பொன்னம்பலம் இராமச்சந்திரன் (ஜனாதிபதி விருது பெற்ற இ.போ.ச.சாரதி)**

அவர்கள் 23.08.2016 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்- யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் விஞ்ஞான பிரிவு ஆசிரியர்
திருமதி உ.கன்னியாகுமாரி அவர்களின் மாமனார்

**பொன்னம்பலம் சுப்பிரமணியம்**

அவர்கள் 17.08.2016 புதன்கிழமை காலமாகிவிட்டார். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்- யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

# கும்பாபிசேகம்

தென்மராட்சி, செப். 2

மட்டுவில் தெற்கு ஸ்ரீதேவி-பூமிதேவி சமேத மகாவிஷ்ணு ஆலய மகா கும்பாபிசேகம் நாளை மறுதினம் நடைபெறும். அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் நாளை காலை 9 மணி தொடக்கம் இடம்பெறும்.

மகா கும்பாபிசேகம் காலை 7.04 தொடக்கம் இடம்பெறும். மகா கும்பாபிசேகக் கிரியைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. தேசமான்யசிவாகம ஜோதி சிவஸ்ரீ தி.கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் தலைமையில் கும்பாபிசேகக் கிரியைகள் இடம் பெறும். (ற-9)

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

இறப்பு
03 . 08 . 2016



பிறப்பு
26 . 04 . 1943

### அமரர் தம்பையா இலங்கநாதன் பாலசுந்தரம் -சமாதான நீதிவான்

(அரச கட்டட ஒப்பந்தகாரர், பாலினி எஞ்ஜினியர்ஸ், கோப்பாய் லயன்ஸ் கழக உறுப்பினர், ஆசிமட அரசடி விநாயகராலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர், தேசிய நிர்மாணிகள் வடமாகாணக் கிளை முன்னாள் உபதலைவர், வர்த்தக தொழிற்றுறை மன்ற ஆளுநர் சபை அங்கத்தவர்)

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும், 03.08.2016 இல் காலமானவருமான எம் குலவிளக்கு த.இ.பாலசுந்தரம் J.P அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (02.09.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதமாய் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது குடும்பத் தலைவர் சிவபதமடைந்தவேளை ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், யாழ்.போதனாவைத்தியசாலை வைத்தியர், தாதியர், சிற்றூழியர்கள் அனைவருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர்வளையம், கண்ணீர் அஞ்சலிகள் மூலம் அஞ்சலி தெரிவித்தோருக்கும், அஞ்சலி உரை நிகழ்த்தியோருக்கும், தேவார பாராயணம் செய்தோர், இறுதிக்கிரியைகளின்போது பல வழிகளில் எல்லா உதவிகளும் வழங்கிய அன்பர்களுக்கும், அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.

[illegible] தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
(Oep/4175)(11.18.)

குடும்பத்தினர்.

### ஆண்டு நிறைவை முன்னிட்டு விளையாட்டுக்கள்

நவாலி வை.எம்.சி.ஏயின் 125 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு வலி. தென்மேற்குப் பிரதேச மட்டத்தில் கால் பந்தாட்டம், சதுரங்கம், பட்டமேற்றல் உட்பட 8 போட்டிகளை நடத்தப்படவுள்ளன என்று வை.எம். சி.ஏ. விழாவுக் குழுத் தலைவரும் யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான பீட பேராசிரியருமான கலாநிதி ஜெ. பிறின்ஸ் ஜெய ரட்ணம் தெரிவித்தார். (ற-50)

## வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம்,செப்.2

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்குக்கொடியேற்றத்துடன்ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் இடம் பெறவுள்ளன.

எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 12 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 10 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளனஎன்று ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்தனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி. மாவட்டத்தில் 6 ஆயிரம் பெண் தலைமைக் குடும்பங்கள்

யாழ்ப்பாணம், செப். 2

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் 42 ஆயிரத்து 991 குடும்பங்களில் 6 ஆயிரத்து 483 குடும்பங்கள் பெண் தலைமைக் குடும்பங்கள் என்று புள்ளி விவரங்கள் தெரிவித்தன.

6 ஆயிரத்து 483 பெண் தலைமைக் குடும்பங்களில் நேரடியாக போரால் குடும்பத் தலைவர்களை ஆயிரத்து 192 குடும்பங்கள் இழந்துள்ளன.

கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் 3 ஆயிரத்து 552 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன. அவற்றில் 348 குடும்பங்கள் நேரடியாக போரால் குடும்பத் தலைவரை இழந்துள்ளன.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 061 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன. அவற்றில் 373 குடும்பங்கள் நேரடியாக போரால் குடும்பத் தலைவரை இழந்துள்ளன.

> “மாவட்டத்தில் வாழும் மொத்தக் குடும்பத்தின் 15 வீதமான குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாக உள்ளன. 20 சதவீதமான பெண் தலைமைக் குடும்பங்கள் நேரடியாகப் போரால் குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்களாகும்.”

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 157 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன. அவற்றில் 288 குடும்பங்கள் நேரடியாக போரால் குடும்பத் தலைவரை இழந்துள்ளன.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 713 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன. அவற்றில் 160 குடும்பங்கள் நேரடியாக போரால் குடும்பத் தலைவரை இழந்துள்ளன.

மாவட்டத்தில் வாழும் மொத்தக் குடும்பத்தின் 15 வீதமான குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்ங்களாக உள்ளன. 20 சதவீதமான பெண் தலைமைக் குடும்பங்கள் நேரடியாகப் போரால் குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்களாகும்.

(ற-101)



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிறந்தநாளை முன்னிட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் கண்களுக்கான வெண்திரை நீக்க மருத்துவ முகாம் நேற்று நடைபெற்றது. நாளை சனிக்கிழமை ஜனாதிபதியின் பிறந்ததினமாகும். அதை முன்னிட்டு ஆயிரம் கண்களுக்கான வெண்திரை நீக்கும் செயற்பாடு நாடளாவிய ரீதியில் நடைபெறுகின்றது. யாழ். போதனா வைத்திய சாலையில் கண்சத்திர சிகிச்சை நிபுணர் எம்.மலரவன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வை வைத்தியசாலைப் பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் எஸ்.பவானந்தராஜா ஆரம்பித்தார். நாளையும் இந்தச் சிகிச்சை இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-106)

# யாழ். வரவுள்ள பான் கீ மூனின் கவனத்தை ஈர்க்கப் போராட்டம்

யாழ்ப்பாணம், செப்.2

ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன் இன்று யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொள்ளும் போது அவரது கவனத்தை யீர்க்கும் வகையில் யாழ்.பொது நூலகம் முன்பாக முற்பகல் 11.30 மணிக்கு போராட்டம் நடத்தப்படும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்தது.

போர் முடிவடைந்து 7 வருடங்களாகியும் இன்றுவரை எமது மக்கள் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்படவில்லை. போரின்போதும் அதற்குப் பின்னரும் காணாமல் ஆக்கப் பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்று அறிய வலியுறுத்தியும் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு கோரியும் போர்க்குற்றச் சாட்டில் பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணையை நடத்த வேண்டும் என கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் நடத்தப்படவுள்ளது- என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-4,ரி)

# மின்தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், செப்.2

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் கீழ்க்குறிப்பிடப் படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.

யாழ். பிரதேசத்தில் மயிலங்காடு ஒரு பகுதி, புன்னாலைக்கட்டுவன், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, குரும்பைசிட்டி, வயாவிளான், மஸ்கன் வீதி, அச்செழு பிரதேசம், கறுக்காய் பிரதேசம், வாழைத்தோட்டம், விக்கிரமரட்ண பிறைவேற் லிமிட்றெட் ஆகிய இடங்களிலும், கிளிநொச்சி பிரதேசத்தில் பூநகரி நகரம், தம்பிராய், செல்விபரம், தரணிக் குடியிருப்பு, கறுக்காய்த்தீவு, பரமங்கிராய், செம்மண் தீவு, கௌதாரிமுனை, பிரமந்தனாறு, மயில்வாகனபுரம், தொட்டியடி, புத்தடி ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில் தாண்டிக் குளத்திலிருந்து சின்னவலயன் கட்டு வரை, நொதேர்ண் பாம், ICT பயிற்சி பாடசாலை, நீர்ப்பாசன சபை, வரண் அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும்.

(ற-ரி)

# மாமுனை, வெற்றிலைக்கேணி வெளிச்ச வீடுகள் சீராக்கப்படும்

யாழ்ப்பாணம், செப். 2

வடமராட்சி கிழக்கு மாமுனை மற்றும் வெற்றிலைக் கேணி பகுதியில் உள்ள வெளிச்ச வீடுகள் விரைவில் சீரமைக்கப்படவுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கிகளின் உதவியுடன் கரையோர பாதுகாப்புத்திணைக்களத்தால் இவற்றைச் சீரமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பிரதேச செயலர் தெரிவித்தார்.

குறித்த இரண்டு வெளிச்ச வீடுகளையும் சீரமைத்துத் தர வேண்டும் என்று வடமராட்சி கிழக்கு மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர். ஆழ்கடல் சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் இருள்சூழ்ந்து காணப்படுவதால் திசை மாறி வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டி உள்ளது என்று சுட்டிக் காட்டப்பட்டது.

சம்பந்தப்பட்ட கலங்கரை விளக்குகளின் புனரமைப்புக் குறித்து ஏற்கனவே பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டது. (ற-17)

# பாதுகாப்பான படகுச் சேவைக்கான திட்டங்கள் பல இன்று ஆரம்பிப்பு

யாழ்ப்பாணம் செப். 2

யாழ்ப்பாண மாவட்டத்தில் பயணிகள் சேவையில் ஈடுபடும் படகுகளுக்கான தரப் பரிசோதனை மற்றும் பாதுகாப்பான பயணிகள்படகுச்சேவைக்கான வசதிகளை மேற்கொள்ளும் பொருட்டு இன்று துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப் படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் நிரந்தரமாக வணிக கப்பல் துறை செயலகத்தின் அலுவலகம் அமைச்சரால் ஊர்காவற்றுறை சுருவில் பகுதியில் திறக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள படகுகள் பரிசோதிக்கும் தளத்துக்கான நிர்மாணப் பணிகள் ஊர்காவற்றுறை கடற்கரை பகுதியிலும், வணிக கப்பல்துறை செயலகத்தின் யாழ்ப்பாண அலுவலகத்துக்கான நிரந்தர கட்டடம் அமைத்தல் போன்ற திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எதிர்காலத்தில் யாழ். மாவட்டத்தில் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் படகுகளின் உரிமையாளர்கள் தங்களது படகுகளை பரிசோதிக்கவும் தரமேம்பாட்டை மேற்கொண்டு பாதுகாப்பானபயணிகள் படகுச் சேவையை மேற்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-ரி)

## சுதுமலை வடக்கில் உள்ள

# கள் விற்பனை நிலையத்தை இடமாற்றுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப், 2

சுதுமலை வடக்கில் உள்ள கள் விற்பனை நிலையம் விதிகளை மீறி அமைக்கப்பட்டுள்ளது. அதனை மூன்று மாத காலத்துக்குள் வேறிடத்துக்கு நகர்த்த வேண்டும் என்று மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்துக்கு அறிவுறுத்தப்பட்டது.

நேற்றுக் காலை வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச மட்ட அபிவிருத்திக்குழுக்கூட்டம் இணைத்தலைவர்களான இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ. சரவணபவன், மாவை சேனாதிராசா, இ.அங்கஜன் மற்றும் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

அதன்போதே மேற்கண்டவாறு அறிவுறுத்தப்பட்டது.

மூன்று மாதங்களுக்குள் மாற்று நடவடிக்கை எடுக்கவேண்டும். மூன்று மாதங்களுக்குப் பின் அது இயங்கமுடியாத நிலை ஏற்படும். இங்கு இருக்கும் அத்தனை இணைத் தலைவர்களும் ஏக மனதாக இந்த முடிவெடுத்துள்ளனர் – என்று நாடாளுமன்ற உறுப்பினரும் இணைத் தலைவருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

கள் விற்பனை நிலையத்தை மாற்றுவதற்கு காக்கைதீவில் அரச காணி ஒன்றை கேட்டிருந்தோம். நில அளவைத் திணைக்களத்துக்கு அரசால் ஒதுக்கப்பட்ட காணியை அளவிடுவதற்கான பணம் மூன்று வாரத்துக்கு முன்னர் கட்டப்பட்டு விட்டது. இன்னமும் அவர்கள் காணியை அளவீடு செய்யவில்லை. அதனால் ஆறுமாத கால அவகாசம் தர வேண்டும் என்று மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் கோரிக்கை முன்வைத்தார்.

எந்தெந்த திணைக்களங்கள் சம்பந்தப்படுகின்றனவோ அவற்றுக்கு அனுப்பிய கடிதங்களின் பிரதியை எங்களுக்கு அனுப்புங்கள். அவர்களுடன் பேசி உரிய காலத்துக்குள் இடம் மாற்றுவதற்கான சகல ஒழுங்குகளை நாம் செய்கின்றோம்- என்று இணைத்தலைவர்கள் தெரிவித்தனர். (ற-ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டோ சேவைகள் தொடர்பான சிக்கல்களை தீர்க்க நடவடிக்கை

## வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் தகவல்

யாழ்ப்பாணம், செப். 2
அரச மற்றும் தனியார் பஸ் போக்குவரத்துத் தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. ஓட்டோக்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் ப.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் சேவையில் உள்ள ஓட்டோக்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் அண்மையில் யாழ்ப்பாணத்தில் வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது–
வடமாகாணத்துக்கான போக்குவரத்து நியதிச் சட்டத்தில் ஆளுநர் ஒப்பமிட்டுள்ளார். வடக்கு மாகணத்தில் போக்குவரத்து தொடர்பான அனைத்து அதிகாரங்களும் போக்குவரத்து அமைச்சராகிய என்னிடம் வழங்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக பஸ் போக்குவரத்து சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டது. இலங்கை போக்குவரத்துச் சபைக்கும், தனியார் போக்குவரத்துச் சங்கத்துக்குமிடையில் இணைந்த நேர அட்டவணை வருகின்ற 7ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றது. தற்போது ஓட்டோக்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஓட்டோ சேவையை பல உரிமையாளர்களும் சங்கங்களும் சிறப்பாக செய்துவருகின்ற வேளையில் சிலரின் அசமந்தப்போக்கால் சில முறைப்பாடுகளும் பொதுமக்களிடமிருந்து கிடைத்துள்ளன.

சில ஓட்டோ சங்கங்கள் பதிவு செய்யப்படாமலும், முறையான தரிப்பிட வசதி இல்லாமலும், நிர்வாகத் தெரிவு புதுப்பிக்கபடாமலும் உள்ளன. சிலவற்றில் நிர்வாக சிக்கல் மற்றும் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்று முறையிடப்பட்டுள்ளது.

சில ஓட்டோக்கள் பதிவு செய்யப்பட்டு உரிமம் பெறப்படாமல் சேவையில் ஈடுபடுகின்றன என்றும் அறியமுடிகின்றது.

இவற்றுக்குத் தீர்வு காண்பதற்கும், சில ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் மாவட்ட ரீதியான கலந்துரையாடல்கள் இடம்பெற உள்ளன. அவற்றில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளன. இதன் மூலம் பயணிகளும் ஓட்டோக்களின் உரிமையாளர்களும் பயன்பெற முடியும்.

அந்தந்த மாவட்டங்களில் கலந்துரையாடல் நடைபெறும் திகதி, இடம் என்பன பத்திரிகைகள், ஏனைய ஊடகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சங்கங்கள் ஊடாக அறிவிக்கப்படும். அனைத்து ஓட்டோக்களின் உரிமையாளர்களும் அதில் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும் – என்றார். (ந-21)

# இருளில் மூழ்கியுள்ள வீதிகளால் பயணிக்க முடியாத நிலமை

## நடவடிக்கை எடுக்குமாறு வலி.கிழக்கு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 2
வலி. கிழக்குப் பிரதேசத்துக்கு உட்பட்ட, பருத்தித்துறை வீதியில் கோப்பாய், இருபாலை, நீர்வேலி, அச்சுவேலி, சிறுப்பிட்டி, புத்தூர் போன்ற பகுதிகளும் இராசவீதியும் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன. வீதிகளில் பயணிப்பது பெரும் சிரமமாக உள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இரவு வேளைகளில் விபத்துக்கள் அதிரித்துள்ளன. வீதியால் பயணிக்கும் வாகனங்கள் அதிக ஒளிப் பிரகாசத்துடன் செல்வதாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டது. வீதிகள் இரவில் இருளில் மூழ்கிக் கிடப்பதால் திருடர்களும் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வீதி விளக்குகளை அமைப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பொது மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வலி. கிழக்குப் பிரதேசத்தில் முக்கிய வீதிகளுக்கு மின்சார விளக்குகள் விரைவில் அமைக்கப்படும். வடமாகாணசபை உறுப்பினர்களான அ. பரஞ்சோதி, கே. சர்வேஸ்வரன் ஆகியோரது நிதி ஒதுக்கீட்டின் கீழ் வீதி விளக்குகளை பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மின்சார சபையின் உதவியுடன் பிரதான வீதிகளுக்கும் பருத்தித்துறை பிரதான வீதிக்கும் மின்சார வீதி விளக்குகள் பொருத்தப்படும் – என்று வலி. கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார். (ந-17)

# மன்னார் ஓட்டோ சங்கம் குறித்து நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

## வடக்கு போக்குவரத்து அமைச்சருக்கு சங்க உறுப்பினர்கள் கடிதம்

மன்னார், செப். 2
மன்னார் மாவட்ட ஓட்டோ சங்கத்தில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. அவை குறித்து உயர் அதிகாரிகளுக்கும் குறிப்பாக வடமாகாண போக்குவரத்து அமைச்சுக்கும் பல தடவைகள் அறிவித்தோம். இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வில்லை.

இவ்வாறு மன்னார் மாவட்ட ஓட்டோ சங்க உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரனுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர்.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது–
மன்னார் மாவட்ட ஓட்டோ சங்கம்கடந்த7வருடங்களுக்குமேலாக எந்த விதமான பொதுக்கூட்டமும் நடத்தாது கணக்கு அறிக்கைகளும் இல்லாமல் தான் தோன்றித்தனமாக செயற்படுகின்றது. 15 நாள்களுக்கு முன்னர் மன்னார் ஓட்டோ சங்கத்தில் அங்கம் வகிக்கின்ற 30 அங்கத்தவர்கள் இணைந்து கையொப்பமிட்டு சங்க நிர்வாகத்தைக் கூட்டுமாறு வேண்டுகோள் விடுத்தோம்.

இதுவரை எந்த விதமான முடிவுகளும் எட்டப்படவில்லை. அங்கத்தவர்களாகிய நாங்கள் வேண்டி நிற்பது கடந்த 7 வருடங்களாக ஒரு தலைவர் மட்டும் இயங்கும் சங்கத்தை இனி வரும் காலங்களில் புதிய நிர்வாக அமைப்புடன் புதிய நிர்வாகத் தெரிவுடன் இயங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

தற்போதுள்ள பழைய நிர்வாகத்தை மாற்றுவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன – என்றுள்ளது. (ந-21,56)

# போதையில் சாரத்தியம் ஒரு மாத கடூழியச் சிறை

யாழ்ப்பாணம்,செப். 2
மதுபோதையில் மோட்டார் சைக்கிளை செலுத்திய குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இரண்டு இளைஞர்களுக்கு யாழ்ப்பாணம் நீதிமன்று தண்டப் பணத்துடன் ஒரு மாத கால கடூழிய சிறைத் தண்டனையும் விதித்தது.

யாழ்ப்பாணம் போக்குவரத்துப் பிரிவு பொலிஸாரால் மது போதையில் மோட்டார் சைக்கிளை செலுத்திய குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு கடந்த திங்கட் கிழமை நீதிமன்றில் இரு வேறு வழக்குகளில் முற்படுத்தப்பட்டனர். பின்னர் அவர்கள் நீதிமன்றால் பிணையில் விடப்பட்டு வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அவர்கள் இருவரும் குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதை அடுத்து நீதிவான் சி.சதீஸ்தரன் மேற்கண்டவாறு உத்தர விட்டார். (ந-103)

# காலாவதியான பொருள் விற்பனை வர்த்தகர்களுக்கு தண்டம்

காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த இரு வர்த்தகர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 9 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகார சபையால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குகளை தனித்தனியாக விசாரித்த நீதிவான் வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தண்டம் விதித்தார். (ந-9)

# வடக்கு மீனவர் பிரச்சினைகள் தொடர்பில் கருத்தாய்வுக்களம்

## பல்வேறு விடயங்கள் நேற்று ஆராயப்பட்டன

யாழ்ப்பாணம், செப். 2
வடமாகாண மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், துறைமுக அபிவிருத்திகள், தடை செய்யப்பட்ட மீன்பிடி நிலமைகளை மாற்றுதல், மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துதல், கடல்வளங்களைப் பாதுகாத்தல், மீன்பிடி அபிவிருத்திக்கான தடைகள் குறித்து நேற்று ஆராயப்பட்டது.

இந்த ஆராய்வு கடந்த ஜூலையில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் தற்போதைய நிலை தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது. ஆய்வு அறிக்கை எதிர்வரும் ஜனவரியில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் பின்னர் அறிக்கையின் படி அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படும் என்று அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

வடமாகாண நிலைத்தகு மீன்பிடித்துறை அபிவிருத்திக் கருத்திட்ட பயிற்சிப்பட்டறை யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நேற்று ஆரம்பமானது. சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்நிர்மாணம், மீள்குடியேற்றம், இந்துமத கலாசார அலுவல்கள், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவை இணைந்து இதனை ஏற்பாடு செய்தன.

இந்த கருத்தாடல் களத்தில் வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலர்களான சுந்தரம் அருமைநாயகம் மற்றும் ரூபவதி கேதீஸ்வரன், வடமாகாண சபை பிரதம செயலாளர் பத்திநாதன், ஆசிய அபிவிருத்தி வங்கியின் அபிவிருத்தி அதிகாரி மஞ்சுளா அமரவீர, ஆசிய அபிவிருத்தி வங்கியின் உத்தியோகத்தர்கள், கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பலர் அதில் கலந்து கொண்டனர்.

அதில் முக்கியமாக மீன் பிடித் துறைமுகங்கள் அபிவிருத்தி செயற் திட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பருத்தித்துறை, குருநகர் ஆகிய இடங்களும், மன்னார் மாவட்டத்தில் பேசாலை துறைமுகமும் அடையாளப் படுத்தப்பட்டன.

நங்கூரமிடும் இடங்களும் கரைசேரும் தளங்களையும் தீரமைத்தல், நவீனமயப்படுத்தல், கடல் நீரியல் வளம் வாழ்வாதாரத்துடன் தொடர்புடையதாக கடல் நீரியல் வளத்தை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகள், சந்தைத் தொடர்புகள், திறன்களை கட்டியெழுப்புதல்களில் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்துதல், கடனுதவிகளை வழங்குதல், முயற்சியாண்மைத் திறன்களை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், கரையோர மற்றும் மீன்பிடிவள முகாமைத்துவத்தில் வடமாகாண மீனவர்களின் நிலைத்தகு வாழ்வாதாரத்துக்கு மீன்பிடி வளம் மற்றும் கரையோர முகாமைத்துவ மேம்படுத்தும் நடவடிக்கைகள் போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டன. (ந-4,106)

# தமிழ் மொழி தின விழா கண்டி நகரில்

தேசிய தமிழ் மொழித்தின விழாவை கண்டி நகரில் எதிர்வரும் 23ஆம் திகதி வெகு விமரிசையாக கொண்டாடுவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தேசிய தமிழ் மொழித் தினமன்று கண்டி நகரில் காலை மாபெரும் கலாசார ஊர்வலம் ஒன்று நடைபெற உள்ளது. அதில் சகல மாகாணங்களையும் சேர்ந்த பாடசாலை மாணவர்களின் கலாசார நிகழ்வுகள் நடைபெறுவதுடன் அந்தந்த பிரதேசங்ளுக்குரிய பண்பாட்டு நிகழ்வுகளும் தொடர்ந்து வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பும் கலை நிகழ்வுகளும் நடைபெற உள்ளன.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஜனாதிபதி கலந்துகொள்ள உள்ளார். ஒன்பது மாகாணங்களினதும் முதல் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் அமைச்சர்கள் உட்பட பலர் கலந்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடுக் குள சீரமைப்பை துரிதப்படுத்துமாறு வலியுறுத்து

## மழை ஆரம்பித்தால் குளக்கட்டுக்கு ஆபத்து எனவும் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, செப்.2

இரணைமடுக் குளத்தை உடன் சீரமைக்க வேண்டும். அல்லது குளத்தை முன்னிருந்த நிலைக்கு மாற்றுங்கள். குளக் கட்டுக்கு அரணாக இருந்த கற்கள் அகற்றப்பட்டுள்ளன. மழை வெள்ளம் தேங்கினால் குளம் உடைப் பெடுக்கலாம். இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் சம்மேளனம் அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

சம்மேளனத்தின் செயலாளர் சிவமோகன், உபதலைவர் சு.கணபதிப்பிள்ளை ஆகியோர் தெரிவித்ததாவது:

இரணைமடுக் குளச் சீரமைப்புக்காக குளத்தில் தேங்கியிருந்த நீர் முழுமையாக வெளியேற்றப் பட்டது. அதனால் 2016ஆம் ஆண்டுக்கான சிறுபோகம் தடைப்பட்டது. குளத்தின் சீர மைப்புக்காக அதை மனப்பூர்வமாக ஏற்கிறோம்.

தற்போது அதிகாரிகள் சிலரின் அசமந்தப் போக்கால் குளச் சீர மைப்பு தடைப்பட்டுள்ளது. இது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும் என்று வடக்கு விவசாய அமைச்சர், ஆளுநர், ஜனாதிபதி போன்றோருக்கு மனு அனுப்பினோம். அதன் பயனாக கிளிநொச்சி மாவட்ட செயலாளர் நேரில் வந்து நிலைமைகளைப் பார்த்தார். முல்லைத்தீவு மாவட்டச் செயலாளருடன் கலந்துரையாடி இதற்குத் தீர்வு வழங்கப்படும்– என்றார். முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் பணி நிமித்தம் மாவட்டத்துக்கு வெளியே உள்ளதால், குறித்த கலந்துரையாடல் நடைபெறவில்லை.

> மாரி காலத்துக்கு முன்னர் குளச் சீரமைப்புப் பணிகளை முடிவுறுத்தாவிட்டால் குளக்கட்டு முழுமையாக அடித்துச் செல்லும் அபாயம் உள்ளது. அணைக்கட்டின் பாதுகாப்புக்காக போடப்பட்டிருந்த பெரும் கருங்கற்கள் அகற்றப்பட்டுள்ளன. வாய்க் கால்களும் ஆழமாக்கப் பட்டு, நீர் வரத்து வேகப்படுத்தப்பட்டுள்ளது.

மாரி காலத்துக்கு முன்னர் குளச் சீரமைப்புப் பணிகளை முடிவுறுத்தாவிட்டால் குளக்கட்டு முழுமையாக அடித்துச் செல்லும் அபாயம் உள்ளது. அணைக்கட்டின் பாதுகாப்புக்காக போடப்பட்டிருந்த பெரும் கருங்கற்கள் அகற்றப்பட்டுள்ளன. வாய்க்கால்களும் ஆழமாக்கப்பட்டு, நீர்வரத்து வேகப்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றைக் கருத்தில் கொண்டு குளச் சீரமைப்புப் பணிகளுக்கான இடையூறுகளை நீக்க வேண்டும். அதைச் செய்ய முடியாத நிலையில் குறைந்தபட்சம் குளத்தை முன்னிருந்தநிலைக்குக் கொண்டுவர வேண்டும். இந்த ஆண்டும் 25 ஆயிரம் ஏக்கர் சிறுபோகச் செய்கையை இழக்க முடியாது - என்றனர்.

விவசாயிகளின் நிலைமை தொடர்பாகவும் குளச் சீர மைப்புத் தொடர்பாகவும் எனது கவனத்துக்கும் கொண்டு வரப் பட்டது. இது தொடர்பில் முடிவை மேற்கொள்ள ஓர் இணைந்த கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இருப்பினும் அவசர நிமித்தம் கொழும்பில் இடம்பெறும் கலந்துரையாடலில் பங்குகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் - என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (ற-101)

# உற்பத்தி அளவை வழங்கினாலே வரி விதிப்பைச் செயற்படுத்தலாம்

## வலி.மேற்குப் பிரதேச மட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப்.2

எதிர்பார்க்கும் உற்பத்தியை விவசாய சம்மேளனங்கள் விவசாயத் திணைக்களத்துக்கு உரிய காலத்தில் வழங்குவதன் ஊடாக வரி விதிப்பு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு விவசாய உற்பத்திகளுக்கு உரிய சந்தை வாய்ப்பைப் பெற்றுத்தர முடியும்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் நடைபெற்ற வலி.மேற்குப் பிரதேச மட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார்.

விவசாய அமைப்புக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கை ஒன்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

எமது பிரதேச விவசாயத்துடன் தொடர்புடைய பிரதேசம். இங்குள்ள அனைத்து விவசாயிகளின் வாழ்வாதாரம் நலிவடைந்து கொண்டே செல்கின்றது. உற்பத்திப் பொருள்களின் அறுவடைக்காலங்களில் உரிய சந்தை வாய்ப்பு கிடைப்பதில்லை. அதிகூடிய விலைகளில் வெங்காய விதைகள் வாங்கப்பட்டு செய்கை செய்யப்பட்டன. தற்போது அறுவடை நேரத்தில் வெங்காயத்தின் விலை படுவீழ்ச்சி கண்டுள்ளது. இறக்குமதியை நிறுத்தி அல்லது வரியை அதிகரித்து விவசாயிகளுக்குச் சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் - என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

விவசாய சம்மேளனங்கள் விவசாயத் திணைக்களத்துக்கு உரிய தகவல்களை வழங்குவதில்லை. எதிர்பார்க்கப்படும் உற்பத்தியின் அளவைத் தெரியப்படுத்தினால் மட்டுமே வரி விதிப்புச் செய்யப்படும் என்பது திறைசேரியின் நடைமுறை. மாவட்டச் செயலாளரால் கடந்த மாவட்ட மட்ட விவசாய சம்மேளனக் கூட்டத்திலும் இது தெரிவிக்கப்பட்டது. கடந்தமுறை அறுவடை இடம்பெற்று நீண்ட காலத்துக்குப் பின்னரே உற்பத்தியின் அளவு அறிவிக்கப் பட்டது. விவசாய சம்மேளனங்கள் எதிர்பார்க்கப்படுகின்ற உற்பத்தி அளவை உரிய காலத்தில் அறிவித்தால் மட்டுமே மாவட்ட செயலாளரால் வரி விதிப்புக் குறித்த நடவடிக்கையை எடுக்க முடியும். இதை நடைமுறைப் படுத்துவதற்கு விவசாயிகள் உரிய நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும் - என்று விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர் இணைத்தலைவர்களுக்குத் தெரியப்படுத்தினார்.

இது தொடர்பாக கடந்த மாதம் யாழ்ப்பாணம் வந்த அமைச்சர் துமிந்த திஸநாயக்க வடக்கு விவசாய அமைச்சருடன் பேசினார். மாகாண சபை விவசாய அமைச்சு ஊடாகத் தகவல்களைத் தந்தால் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார் - என்று இணைத்தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் தெரிவித்தார். (ற-ரி7)

## இசை வகுப்புகள் மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம் செப். 3

ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் நடைபெற்று வந்த இலவச மிருதங்க, வயலின், சங்கீத மற்றும் பண்ணிசை வகுப்புக்கள் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு தற்காலிகமாக இடை நிறுத்தப் பட்டன.

அவை மீளவும் வழமைபோல் நளை சனிக்கிழமை தொடக்கம் நடைபெறும். புதிய யோகாசனப் பிரிவுகளும் ஆரம்பமாகும். இந்த வகுப்புக்கள் அனைத்தும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இலவசமாக நடத்தப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி1)



வடமாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவால் வவுனியா மாவட்டத்தில் உள்ள வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்காக கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் நடைபெற்றது. 2016ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இடங்களில் உள்ள குடும்பங்களுக்கு இவை வழங்கப்பட்டன. (ற)

## யாழ். மாவட்ட பகிரங்க ஓய்வூதியர் சங்கத்துக்கு புதிய தலைவர்

அச்சுவேலி, செப்.2

யாழ்ப்பாண மாவட்ட பகிரங்க ஓய்வூதியர் சங்கத்தின் தலைவராக ஓய்வுபெற்ற அதிபர் பொன்னுத்துரை கமலநாதன் தெரிவு செய்யப்பட்டார். மாவட்ட பகிரங்க ஓய்வூதியர் சங்கத்தின் தலைவரான கணக்காளர் தி. சுதந்திரபாலன் காலமானதை அடுத்து, உப தலைவராக இருந்த பொ. கமலநாதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

உப தலைவராக என். சிவரஞ்சன் தெரிவு செய்யப்பட்டார். நிர்வாகக் குழு உறுப்பினராக எஸ். எஸ். சந்திரசேகரன் தெரிவு செய்யப்பட்டார். (ற-11)

# கசூரினா வருவோரிடம் அறிவிடப்பட்ட பணத்தில் கடற்கரை அழகாக்கப்படும்

## காரைநகர் பிரதேச சபைச் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.2

காரைநகர் கசூரினா கடற்கரை அழகுப்படுத்தப்படவுள்ளது. அங்கு சுற்றுலா செல்லும் பயணிகளிடம் இதுவரை அறிவிடப்பட்ட பணத்தைக் கொண்டே அழகு படுத்தும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு காரைநகர் பிரதேச சபைச்செயலாளர் தெரிவித்தார். கடந்த திங்கட்கிழமை காரைநகர் பிரதேச செயலகத்தில் நடத்தப் பட்ட பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கசூரினா கடற்கரையைப் பார்க்க வரும் ஒவ்வொருவரிடமும் 20 ரூபா அறவிடப்படுகின்றது. பஸ்ஸில் 50 பேர் வந்தால் ஆயிரம் ரூபாவும், பஸ்ஸுக்கு 100 ரூபாவும் அறிவிடப்படுகின்றது. முன்னர் மோட்டார் சைக்கிளில் வருவோரிடம் 20 ரூபாவும், ஓட்டோவில் வருவோரிடம் 30 ரூபாவும், காரில் வருவோரிடம் 50 ரூபாவும் அறவிடப்பட்டது. காங்கேசன் துறைக் கடற்கரைக்குச் செல்வோரிடம் இவ்வாறு பணம் அறவிடப் படுவதில்லை. இந்த அற வீட்டை உடனடியாக நிறுத்த வேண்டும்– என்று கூட்டத்தில் காரைநகர் சமூக அமைப்பு கோரிக்கை ஒன்றை முன்வைத்தது.

பிரதேச செயலாளர் இதுகுறித்துப் பதிலளிக்க வேண்டும் என்று இணைத் தலைவர்களான இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் ஆகியோரால் கேட்கப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் சுற்றுலா வரும் பஸ்களுக்கு எந்தக் கட்டணமும் அறவிடப்படுவதில்லை. ஆய்வுகளை மேற்கொள்ள வரும் பல்கலைக் கழக மாணவர்கள் எம்மோடு தொடர்பு கொண்டால், அவர்களிடமும் பணம் அறவிடப்படுவதில்லை. கடந்தமே மாதத்தில் இருந்தே இவ்வாறு கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. இதுவரை 11 இலட்சம் ரூபா அறவிட்டுள்ளோம். இந்த நிதி காரைநகர் பிரதேச அபிவிருத்திக்கே பயன்படவுள்ளது. கசூரினா கடற்கரையை அழகுபடுத்தும் வேலைத்திட்டம் தற்போது முன்னெடுக்கப்படுகின்றது– என்று பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ற-ரி7)

## ஆன்மிக பிரசாரகர்களுக்கு பயிற்சிகள்

இந்துசமய கலாசார அலுவல்களின் திணைக்களம் நடத்தும் ஆன்மிகபிரசாரகர்களுக்கான பயிற்சி கற்கை நெறி ஆனைப்பந்தியில் அமைந்துள்ள குருகுலத்தில் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம் பெறும்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர்கள் மா.வேதநாதன், நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் சிறப்பு உரையாற்றுவர். (ற-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிங்கப்பூர் சங்கிரிலா விடுதியில் நேற்று ஆரம்பமான 'இந்து சமுத்திர மாநாடு - 2016' இல் பங்கேற்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை 5 மணிக்கு (இலங்கை நேரப்படி) சிங்கப்பூரை வந்தடைந்தார். பிரதமருக்கு ரிட்ஸ் கால்ரன் விடுதியில் வரவேற்பு வழங்கப்பட்டது. (ந-5)

# தமிழ்க் கைதியை சுட்டுக் கொன்ற அதிகாரிக்கு ஒத்திவைத்த சிறை

கொழும்பு, செப்.2

பருத்தித்துறை இராணுவ முகாமில் தடுப்பில் இருந்த கைதியைக் கொன்ற முன்னாள் இராணுவ லெப்டினன்டுக்கு கொழும்பு மேல் நீதிமன்று நேற்றுமுன்தினம் 10 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட இரு ஆண்டு கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. கொல்லப்பட்டவரின் குடும்பத்துக்கு 20 லட்சம் ரூபா நட்டஈடு செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி குஸலா சரேஜினி வீரவர்தன குற்றவாளியான லெப்டினன்ட் பிமல் விக்கிரமகேவுக்கு இவ்வாறு தீர்ப்பளித்தார். குற்றவாளிக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிபதி, தண்டப் பணத்தை செலுத்தாவிடின் மேலும் மூன்று மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

வழக்கின் பிரதிவாதியாக இருந்த லெப்டினன்ட் பிமல் விக்கிரமகேவின் சார்பில் மன்றில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி வழக்கின் பிரதிவாதியான தனது தரப்பைச் சேர்ந்தவர், ஏற்கெனவே 18 மாதங்களாகச் சிறையில் இருந்துள்ளார். அவர் தனது கடமையை செய்யும் போதுதான் குற்றமிழைத்தார். அவர் றொபேர்ட் வெலின்டனை கொல்லும் நோக்கில் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளவில்லை. பயங்கரவாத இயக்கமான விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த புலி உறுப்பினர் ஒருவர் தப்பியோட முயன்ற போது சுட்டதால் இந்த இறப்புச் சம்பவித்தது - என்று தீர்ப்பளிப்பதற்கு முன்னர் மன்றில் தெரிவித்தார்.

1998 ஆம் ஆண்டு ஜூலை 20 திகதியன்று றொபேர்ட் சுட்டுக் கொல்லப்பட்டார். (ந-4)

# கோத்தா உட்பட எட்டுப் பேர் மீது கொழும்பு நீதிமன்றில் வழக்கு

## சட்டவிரோத ஆயுதக் களஞ்சியம் வைத்து இயக்கிய குற்றச்சாட்டில்

கொழும்பு, செப். 2

சட்டவிரோதமான முறையில் மிதக்கும் ஆயுதக் களஞ்சியங்களை வைத்திருந்து இயக்கிய குற்றச்சாட்டில் கோத்தபாய ராஜபக்ச உட்பட முன்னாள் கடற் படைத் தளபதிகள் மூவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அவன்ட் கார்ட் பாதுகாப்பு நிறுவனம் மூலம் மிதக்கும் ஆயுதக் களஞ்சியங்களை சட்டவிரோதமாக இயக்கினர் என்று இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, நேற்றுமுன்தினம் கொழும்பு பிரதம நீதிவான் மன்றத்தில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தது.

வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளவர்களில் மூவர், இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதிகளாவர். அட்மிரல் சோமதிலக திசநாயக்க, அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே, அட்மிரல் ஜெயந்த பெரேரா ஆகிய மூன்று முன்னாள் கடற்படைத் தளபதிகளுமே இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டனர்.

> "வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளவர்களில் மூவர், இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதிகளாவர். அட்மிரல் சோமதிலக திசநாயக்க, அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே, அட்மிரல் ஜெயந்த பெரேரா ஆகிய மூன்று முன்னாள் கடற்படைத் தளபதிகளுமே இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப் பட்டனர்."

இவர்களை விட பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலர் தமயந்தி ஜெயரத்ன, மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ, மேஜர் ஜெனரல்கே.பி.எகொடவெல, மேஜர் நிசங்க சேனாதிபதி ஆகியோருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சட்டவிரோதமான முறையில் மிதக்கும் ஆயுதக் களஞ்சியங்களை இயக்கி அவன்ட் கார்ட் நிறுவனம் 11.4 பில்லியன் ரூபா வருமானம் பெற்றுள்ளது என்று இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ந-4)

# மக்களை வறுமையிலிருந்து விடுவிக்கும் ஆண்டு - 2017

## ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி



கொழும்பு, செப்.2

இலங்கையை வறுமையில் இருந்து விடுவிக்கும் ஆண்டாக 2017ஆம் ஆண்டைப் பிரகடனப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு அமைவாக வறுமையில் இருந்து மக்களை விடுவித்தல் தொடர்பாகச் சிறப்புக் கவனம் செலுத்தப்படவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்வைக்கப்பட்ட இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

குறித்த வேலைத்திட்டத்தின் அவசியத்தை உணர்ந்து சகலரையும் ஒன்றிணைக்கும் வகையில் 2017ஆம் ஆண்டை வறுமையில் இருந்து விடுவிக்கும் ஆண்டாகப் பிரகடனப்படுத்தல், ஜனாதிபதி - பிரதமர் தலைமையிலும் அமைச்சர்கள், அதிகாரிகள் பங்குபற்றுதல்களுடனும் கூடிய குழு ஒன்றின் மூலம் இந்த வேலைத் திட்டத்தை மேற்பார்வையிடுதல் என்பவை இந்த யோசனையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ந-4)

# இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்தப்படும் விவசாய இரசாயனம்!

கொழும்பு, செப்.2

அரசால் தடை செய்யப்பட்ட க்லைபோசட் என்ற பெயருடைய விவசாய இரசாயனம் வட மத்திய மாகாணத்தில் விற்பனை செய்யப்படுகின்றது என்று கூறப்படுகின்றது. இந்த இராசாயனப் பொருள் இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாகச் சட்டவிரோதமாக இலங்கைக்குக் கடத்தப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ராஜரட்ட பல்கலைக் கழகத்தின் மருத்துபீடத்தின் மூத்த விரிவுரையாளர் மருத்துவர் சன்ன ஜனசுமன இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விவசாய இரசாயனம் அதிக வலுக் கொண்டதுடன், புற்று நோயை ஏற்படுத்தக் கூடியது என்றும் அவர் குறிப்பிட்டார். (ந-4)

# மொஹமட் கொலை விவகாரத்தில் இதுவரை எழுவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, செப். 2

பம்பலப்பிட்டி வர்த்தகர் மொஹமட் சகீப் சுலைமான் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்குடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 7 பேர் பொலிஸ் குற்ற விசாரணைப் பிரிவால் கைது செய்யப்பட்டனர்.

வர்த்தகர் கொல்லப்பட்ட பின்னர் சடலத்தை மாவனல்லை பகுதிக்கு கொண்டு செல்ல உதவிய குற்றச்சாட்டில் கூலித் தொழிலாளிகள் 2 பேர் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

கொலை செய்யப்பட்ட வர்த்தகரின் கொடுக்கல், வாங்கல்களுடன் தொடர்புடைய அவரது சேவையாளர் ஒருவர், சகீபின் தந்தையிடம் கப்பம் பெறும் நோக்கில் இந்தக் கொலையை செய்திருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டது.

இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட சகீப்பின் சடலத்தை எடுத்துச் சென்ற குற்றச்சாட்டில் கிராண்ட்பாஸ் மற்றும் சேதவத்தை பகுதியைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

இருவரும் பலமுறை அழைக்கப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இன்னும் சிலர் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படுகின்றது என்று பொலிஸ் விசாரணைப் பிரிவு தெரிவித்தது.

கொலையாளிகளைக் கண்டு பிடிப்பதற்காக கொழும்பிலிருந்து மாவனெல்ல, ஹெம்மாத்தகம பகுதி வரையுள்ள சீ.சீ.ரிவி கமராக்களைச் சோதனை செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். அதற்கு முன்னதாக கொழும்பு, பம்பலப்பிட்டிய சன நெரிசல் மிக்க இடங்களிலுள்ள சீ.சீ.ரிவி கமராக்களில் பதிவான காட்சிகளை சோதனை செய்தனர். வியாபாரியின் தந்தையிடம் கப்பம் கோரி கேகாலையிலிருந்து கிடைத்த அலைபேசி அழைப்பை மேற்கொண்ட நபரை துல்லியமாக அடையாளம் காணுவதற்கான நடவடிக்கையில் பொலிஸார் தீவிரமாக இறங்கியுள்ளனர்

சுலைமான் கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 11.30 மணியளவில் பம்பலப் பிட்டியில் அமைந்துள்ள அவரது வீட்டுக்கு முன்பாக வைத்து இனந் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு, படு கொலை செய்யப்பட்டார். அவரது சடலம் கெம் மாத்தகம பிரதேசத்திலிருந்து 24ஆம் திகதி புதன்கிழமை இரவு மீட்கப் பட்டது.

வர்த்தகர் சுலைமானின் இறப்பு தொடர்பில் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வரும் வர்த்தகர்கள் ஐவர், இந் நாட்டை விட்டு வெளியேற முடியாத வகையில் கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸ் தடையுத்தரவு பிறப்பித்துள்ளார். (ந-4)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த கஞ்சாப் பொதி சிக்கியது

கொழும்பு, செப். 2

தமிழ் நாடு, இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த கஞ்சா தொகுதி ஒன்று புதைத்து வைக்கப்பட்ட நிலையில் நேற்று மீட்கப்பட்டது என்று தமிழக கடலோர பொலிஸார் தெரிவித்தனர்.

பொது மக்களிடம் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 17 கிலோ எடை கொண்ட கஞ்சா பொதி மீட்கப்பட்டது.

ராமேஸ்வரம் கடற்கரை மணலில் அது புதைத்து வைக்கப்பட்டிருந்தது என்றும் - இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி நகரத் திட்டத்தைப் பயன்படுத்தி இருதரப்பு உறவை முறிக்க முடியாது

## இலங்கைக்கான சீனத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 2

கொழும்பு நிதி நகரத் திட்டத்தைப் பயன்படுத்தி சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளைக் கெடுப்பதற்கு எவரையும் சீனா அனுமதிக்காது.

இவ்வாறு இலங்கைக்கான சீனத் தூதுவர் யி ஷியான்லியாங் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சீன நிறுவனங்களால் கட்டப்படவுள்ள நிதி நகரத்தை, உலகின் எந்தப் பகுதியில் உள்ள நிறுவனங்களும் தமது வெளிப்படையான வர்த்தக நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த திட்டத்தில் ஏற்கனவே சில இந்திய நிறுவனங்களும் தொடர்பு பட்டுள்ளன. இந்தியாவின் பங்களிப்பு அவசியமானது. எந்த மூன்றாவது தரப்பினதும் பங்களிப்பை நாம் வரவேற்கிறோம்.

மூலோபாய, அரசியல் மற்றும் கலாசார உறவுகளைவிட, வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை அனைத்துலக அளவில் கட்டியெழுப்புவது இலங்கைக்கு மிகவும் முக்கியமானது.

இருதரப்பு உறவுகள் மற்றும் உறுதிப்பாடுக்குப் பொருளாதார உறவுகள் மாத்திரமே, உறுதியான அடித்தளமாக இருக்கும் -என்றார். (ற-4)



## மலேசியா புறப்பட்டார் மகிந்த

கொழும்பு, செப். 2

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நேற்றுக் அதிகாலை மலேசியா நோக்கிப் பயணமானார். ரணில் சிங்கப்பூர் சென்றுள்ள நிலையில், மகிந்த மலேசியா பயணமானார். யூ.எல் 318 என்ற சிறிலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தினூடாக மகிந்த மலேசியாவுக்குச் சென்றார்.

அவருடன் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் சென்றுள்ளனர். (ற-4)

# இராணுவப் பேச்சாளராக பிரி. றொசான் நியமனம்

கொழும்பு, செப். 2

இலங்கை இராணுவப் பேச்சாளராக பிரிகேடியர் றொசான் செனிவிரத்ன நியமிக்கப்பட்டார். கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில், இந்த நியமனம் வழங்கப் பட்டுள்ளது என்று இலங்கை இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.



இராணுவப் பேச்சாளராகப் பணியாற்றிய பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர வெளிநாட்டுப் பயிற்சி ஒன்றுக்குத் தெரிவு செய்யப் பட்டுள்ள நிலையில் 'அந்தப் பதவிக்கு பிரிகேடியர் றொசான் செனிவிரத்ன நியமிக்கப்பட்டார்.

இவர், இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர்' பாதுகாப்பு அமைச்சில் பிரதி இராணுவ இணைப்பதிகாரியாகப் பணியாற்றினார்.

கவசப் படைப் பிரிவில் 30 ஆண்டுகள் பணியாற்றியவரான பிரிகேடியர் றொசான் செனிவிரத்ன, யாழ். அதிரடிப்படைத் தலைமையகம், மற்றும் காலாட் படைப்பிரிவுகள், றெஜிமெண்ட்களில் முக்கியமான பல பதவிகளை வகித்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4)

# வேறுபாடு இன்றி அனைவரும் ஆட்சியில் பங்கேற்க வேண்டும்

## சு.கவின் மாநாட்டில் பிரகடனம்

கொழும்பு, செப். 2

நாட்டில் உள்ள சகலரும் இன வேறுபாடுகள் இன்றி ஆட்சி அதிகாரத்தில் பங்குகொள்ள வேண்டும் என்ற பிரகடனம் சுதந்திரக் கட்சியின் 65 ஆவது ஆண்டு பூர்த்தி விழாவில் முன்வைக்கப்படவுள்ளது.

இவ்வாறு சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறிசேன வடக்கு மக்களின் வாக்குகளால் தெரிவானவர் என்று பலரும் குறிப்பிட்டனர்.

இருப்பினும் கடந்த காலங்களை விட இறுதியாக இடம்பெற்ற தேர்தலில் வடக்கு மக்களிடமிருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்வுக்குக் கிடைத்த வாக்குகளின் தொகை அதற்கு முன்னரான தேர்தல்களில் அவர் பெற்ற வாக்குகளை விடவும் அதிகமாகவே இருந்தது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ற-4)

## ஐ.நா. சபை அலுவலகத்துக்கு கொழும்பில் கடும் பாதுகாப்பு

கொழும்பு, செப்.2

கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்துக்குக் கடும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. பாதுகாப்புக்காக மேலதிகமாக விசேட அதிரடிப் படையினரும் நிலைகொண்டுள்ளனர். ஐ.நா. பொதுச் செயலாளர் பான்கீ-மூன் மூன்று நாள் பயணம் மேற்கொண்டு நேற்றுமுன்தினம் இரவு இலங்கை வந்தார்.

அவரது வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், சர்வதேச விசாரணைக்கான அழுத்தங்களைப் பிரயோகிக்கக்கூடாது என்று வலியுறுத்தியும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளது. அதேவேளை, போரால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு நீதி வழங்கக் கோரி ஐக்கிய சமாதான முன்னணியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளது. (ற-4)

# சட்டவிரோத சிறுநீரக வர்த்தகம் எழுவரின் மீது வழக்குத் தாக்கல்

கொழும்பு, செப். 2

சட்டவிரோதமாக சிறுநீரக வர்த்தகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 7 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குற்றச்சாட்டில் எட்டு பேர் வெள்ளவத்தையில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார். அவர் இன்னமும் கைது செய்யப்படவில்லை. ஏனைய ஏழு பேருக்கு எதிராகவும் நுழைவு விசைவுச் சட்டத்தை மீறினர் என்று தெரிவித்து குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளது.

சிறுநீரக வர்த்தகம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்கள் தற்போது மிரிஹானை வெளிநாட்டவர் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய கொடியேற்றம் இன்று



ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
இன்று (02.09.2016)
வெள்ளிக்கிழமை
கொடியேற்றத் திருவிழா

கொடி ஏறுதே நம்மனக்
கோணல் நிமிர்வதற்காய் கொடி ஏறுதே
படிமேல் "நான்" என்னும் பாவச் சுமையாலே
மடிந்தே முறுகிய மனக்கூனல் நேராக
கொடி ஏறுதே
தெல்லிநகர் துர்க்கை தேவி மகாசக்தி
மெல்லியலாள் கோயில் மேலான உற்சவத்தில்
எல்லையில்லா ஆற்றல் எடுத்தவள் கருணை நம்
பொல்லா வினை நீக்க புண்ணியமாய் இன்று
கொடி ஏறுதே

உபயகாரர்: க. பொன்னுத்துரை குடும்பம் தெல்லிப்பழை

அனுசரணை: தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.

(C/254241)(13.18)

செல்வச் சந்நிதியான் ஆலய இரண்டாம் திருவிழா



செல்வச்சந்நிதியானுக்கு
இன்று (02.09.2016)
வெள்ளிக்கிழமை
இரண்டாம் திருவிழா

செல்வத்தை அள்ளியே செழிப்புற தந்திடும்
செல்வச் சந்நிதி உறைந்துள்ள முருகா
செழிப்பாக உந்தன் இரண்டாம் திருவிழா
சிறப்புறவே வாழ்த்துகின்றோம் சிந்தையிலிருத்தி

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :

Rasi Collections
No.199, Power House Road, Jaffna
T.P. 021 222 5571

நல்லூர் பூங்காவனத் திருவிழா



நல்லைக்கந்தனுக்கு
இன்று (02.09.2016) வெள்ளிக்கிழமை
திருக்கல்யாணம்

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :

அன்னை முத்துமாரி பஸ்சேவை
கொழும்பு ⇄ யாழ்ப்பாணம் ⇄ பருத்தித்துறை
12.08.2016 முதல் பகல் சேவை ஆரம்பம்
நான்கு புதிய A/C பஸ்களுடன்
இரு வழிச் சேவையை பகல், இரவு என விஸ்தரித்துள்ளது
BUS BOOKING

| | | | காலை | இரவு |
|---|---|---|---|---|
| கொழும்பு | + 94 77 544 9251 | | | |
| யாழ்ப்பாணம் | + 94 77 544 8503 | பருத்தித்துறை | 7.00 am | 7.00pm |
| வல்வெட்டித்துறை | + 94 21 226 1977 | யாழ்ப்பாணம் | 8.00 am | 8.00pm |
| | + 94 77 544 7359 | வெள்ளவத்தை | 7.30 am | 7.30pm |
| நெல்லியடி | + 9477 285 0285 | கொட்டஹேனா | 8.30 am | 8.30pm |
| பருத்தித்துறை | + 9477 555 2973 | | | |

Web www.annaimuthumari.com
www.valvaitourism.com
Bus booking || Courier || Boating

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மலையகத் தமிழர் கல்வி மேம்பாட்டை தடுக்க முயலும் போக்கு நியாயமா...?

கம்பஹா மாவட்டம், வத்தளைப் பிராந்தியத்தில் அமைந்துள்ள, ஒலியாமுல்லைப் பிரதேசத்தில் தமிழ்ப் பாடசாலை ஒன்றை அமைக்கும் அமைச்சர் ஜோன் அமரதுங்காவின் உத்தேச திட்டத்துக்கு அங்குள்ள பெரும்பான்மை இனத்தவர்கள் எதிர்ப்புக் காட்டி, தடுத்து நிறுத்த வேண்டும் என்று கெம்பி எழுகின்றார்கள். அதற்கு அடி எடுத்துக் கொடுத்துள்ளவர்கள் பௌத்த குருமார்களே என்பது தகவல்.

அது குறித்துக் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் கடும் கண்டனம் வெளியிட்டிருக்கின்றார். அது மட்டுமன்றி, ஒலியாமுல்லைப் பிரதேசத் தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு, தேவையான உதவிகளை வழங்குவதாகவும் உறுதி அளித்துள்ளார்.

கல்வி, நாட்டின் ஒவ்வொரு குடிமகனதும் அடிப்படை உரிமையாகும். அதனை அறிந்தும், தமிழ் மாணவர்களது கல்விக்குத் தடைபோட்டு நாசமாக்கும் போக்கு எழுந்துள்ளமை கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

நவீன யுகத்தில், கல்விக்கு இடையூறாக இருப்பதோ, பாகுபாடு காட்டுவதோ, கண்டிக்கப்பட வேண்டியது மட்டுமன்றி, காட்டுமிராண்டித் தனமும் ஆகும்.

அனைத்துலகப் பரிமாணத்தின் பிரகாரம், மிகக் குறிப்பாக, ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேண் அபிவிருத்தித் திட்டத்தில் (Sustainable Development) மொத்தம் உள்ள குறிக்கோள்களில் நான்காவது இடம் வகிப்பது, தரமான கல்வி வழங்கப்பட வேண்டும் என்பதாகும்.

ஆனால், இந்த நாட்டில், கல்விக்கு ஆப்பு வைக்கும் செயலில் கூச்சம் எதுவும் இன்றி, பல தரப்பினரும் ஈடுபடுகிறார்கள்.

அத்தகைய செயலில் ஈடுபடுவோரை, இந்த நாட்டில் சட்டத்தைக் கையாளுவோரும் கண்டும் காணாதிருப்பதும் பெரும் சாபக்கேடாகும்!

இத்தனைக்கும், இளையோருக்கு, கற்றலுக்கு உகந்த சூழ்நிலையை அரசே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பது, ஐ.நா. சபையின் கல்விசார் கூறுகளில் பிரதானமான ஒன்று.

நல்லாட்சி என்று தனக்குத் தானே மகுடம் சூட்டி மகிழும் இப்போதைய அரசு, ஐ.நா. போன்ற அனைத்துலக நியமங்களைக் கடாசி எறிந்து வருவது வருந்தத்தக்கதும்--

பாதிப்புறுவோரை ஏறிமிதிப்பது போன்றதும் ஆகும்.

மேலும், வன்செயல்களை ஊக்குவிப்பதற்குத் துணை போகும் சர்வாதிகாரப் போக்கின் பிம்பமும் எனலாம்!

கூட்டிக் கழித்துப் பெருக்கிப், பிரித்துப் பார்த்தால், தமிழ் மக்களை, மிகக் குறிப்பாக மலையகத் தமிழ் மக்களை எந்த வழியாலும் கல்வியில் தறுக்கணிக்க வைக்கும் அதே வேளை, நல்ல பிள்ளை வேடம் போடுவோரே, தென்னிலங்கை அரசியல் தலைவர்களும் மதத் தலைவர்களும் என்பது நாட்டின் வாய்ப்பாடாகி விட்டது.

நாம் என்ன செய்வோம் பராபரமே, என்று தமிழர்கள் தமக்குள்ளே சிணுங்க வேண்டியது தானோ?



சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
ரெங்கன்

மகிந்த ராஜபக்சவின் விசுவாசிகளான பலர், மாவட்ட மற்றும் தேர்தல் மாவட்ட அமைப்பாளர் பதவிகளில் இருந்து மைத்திரிபால சிறிசேனவால் நீக்கப்பட்டு விட்டதைத் தொடர்ந்து, கூட்டு எதிர்க்கட்சியினர் பல்வேறு எதிர் நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசித்து வருகிறார்கள். இந்தப் பதவி நீக்கம் தொடர்பாகத் தனது பிரதிபலிப்பை வெளியிட்டபோது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கூறினார், செப்ரெம்பர் 4ஆம் திகதி நடைபெறவிருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாடு குறித்து என்ன செய்வது என்று பல அமைப்பாளர்கள் என்னிடம் கேள்வி கேட்டார்கள். அவர்களைத் திரும்பிச் சென்று தங்கள் காரிய சபைகளிடம் கேள்வி எழுப்புமாறு நான் கூறினேன். அவர்கள் திரும்பி வந்து மாநாட்டில் தாங்கள் கலந்து கொள்ளப்போவதில்லையென்று தெரிவித்துள்ளார்கள். அனைத்தையும் ஐ.தே.கவிடம் ஒப்படைத்துவிட்டு, கட்சித் தலைவர்கள் ஓரம் கட்டப்படும் முறை குறித்து அவர்கள் கவலை கொண்டிருக்கிறார்கள் என்று கூறினார்.

அமைப்பாளர்களை நீக்கியது மட்டுமன்றி, புதிய கட்சி ஆரம்பித்தால் அவர்களின் இரகசியங்களையெல்லாம் அம்பலப்படுத்துவார் என்று ஜனாதிபதி விடுத்துள்ள எச்சரிக்கை குறித்து உங்கள் பிரதிபலிப்பு என்ன என்று கேட்டபோது, "எல்லோரிடமும் தான் இரகசியங்கள் உள்ளன. அவர்கள் கூறுகின்ற இரகசியங்கள் என்ன?" என்று கேட்டார். மைத்திரிபால சிறிசேன தமக்குக் கீழே விவசாய அமைச்சராக இருந்தபோது, ஆஸ்திரேலிய நிறுவனத்துடனான ஓர் ஊழல் நடைபெற்றதாகவும், அதில் சிறிசேனவின் பெயரும் இணைக்கப்பட்டுச் செய்திகள் வந்திருப்பது குறித்தும் ராஜபக்ச சுட்டிக்காட்டினார். குறித்த ஊழல் சம்பவத்துடன் தமக்கு எந்தவித சம்பந்தமும் கிடையாது என்று சிறிசேன ஏற்கனவே மறுப்புத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இது குறித்துச் சட்டமா அதிபரை நடவடிக்கை எடுக்குமாறு கேட்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மலேசியா சென்று திரும்பிய பின் அறிக்கை

தாம் மலேசியாவுக்குச் செல்லவுள்ளதாகவும், அங்கிருந்து திரும்பியதன் பின்னர், கட்சியின் இன்றைய நிலைமை குறித்து ஆராயப்பட்ட அறிக்கையொன்றை வெளியிடுவார் என்றும் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். இப்பொழுது அமைச்சரவையில் ஒரே ஒருவரைத் தவிர வேறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் காணப்படவில்லையென்பது குறித்து, எல்லோருமே கதைக்கிறார்கள் என்று ராஜபக்ச தெரிவித்தார். இவ்வாறான ஒரு நிலைமை முன்பு ஒருபோதுமே நிகழ்ந்ததில்லையென்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில் அமைப்பாளர் பதவிகளில் இருந்து நீக்கப்பட்ட, அவருக்கு விசுவாசமான அமைப்பாளர்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட மகிந்த தரப்புக் குழுவினர், கடந்த வியாழனன்று பத்தர முல்லையில் நெலும் பொக்குன வீதியிலுள்ள தமது பணிமனையில் கூடி ஆலோசனைகளை நடத்தியிருந்தனர்.

மகிந்த ராஜபக்சவின் தலைமையில் புதிய கட்சியொன்றை அமைப்பதற்கு அவர்கள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்கள். வேறு ஒரு சொல்லையும் சேர்த்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியென்று அதனை அழைப்பார்களா என்பது இன்னமும் தெளிவில்லாமலுள்ளது. இந்தக் குழுவின் தலைவராக பசில் ராஜபக்ச உள்ளார். டலஸ் அழகப் பெரும, பவித்திரா வன்னியாராட்சி, ரோகித்த அபேகுணவர்த்தன, ஜி.எல்.பீரிஸ், மகிந்த யாப்பா அபேவர்தன ஆகியவர்கள் ஏனைய உறுப்பினர்கள்.

கட்சியின் இன்றைய உள்விவகாரங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்ததன் பின்னர், ராஜபக்ச விசுவாசிகளான அடிநிலை சபைகளின் உறுப்பினர்கள் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்வதில்லையென்று முடிவெடுத்திருப்பதை உத்தேசித்து குழு மேற்படி முடிவுக்கு வந்துள்ளது.

### பொது முன்னணி உருவாகும்

ஏனைய எதிர்த்தரப்புக் கட்சிகளுடனும் கலந்துரையாடல்களை நடத்துவதென்றும், அதன் மூலம் பொது முன்னணி ஒன்றை அமைப்பது என்றும் குழு தீர்மானித்தது. இந்தப் பொது முன்னணி செயற்படும் அதேநேரம், நாடாளுமன்றத்தில் கூட்டு எதிர்க்கட்சியானது தன் பங்கினைத் தொடர்ந்து ஆற்றிவரும் என்று கருதப்படுகின்றது. புதிய கட்சியொன்று அமைக்கப்படுவது தொடர்பாக செப்ரெம்பர் 4ஆம் திகதியே முறையாக அறிவிக்க வேண்டும் என்று ராஜபக்ச விசுவாசிகளில் பலமிக்க ஒரு பகுதியினர் விருப்பம் தெரிவித்தனர். தங்களின் குழுவானது, நாடாளுமன்றத்தில் தனியான ஓர் அமைப்புக்கான அங்கீகாரத்தைக் கோரி

> ராஜபக்ச ஆதரவாளர்கள் தரப்பில் நடைபெற்று வரும் நகர்வுகள் தொடர்பாக, குறிப்பாக பல்வேறு நடவடிக்கைகள் தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேன மிக விழிப்புடனும் அவதானத்துடனும் இருந்து வருகின்றார்.

வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிலங்கா சுதந்திரக்கட்சி இரண்டாக உடையப் போவது நிச்சயம்; ராஜபக்ச மலேசியாவில் இருந்து திரும்பிய பின் அறிக்கை

# நாடாளுமன்றில் தனியாக இயங்க யோசனை; எதிர்க்கட்சித்தலைவர் பதவியும் கோரப்படும்?

**இரண்டாகப் பிளவுபடும் திசையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி நகர்கிறது. வருடாந்த மாநாட்டில் நிலைமை தெளிவாகும்**

நிற்பதற்கும், நகர்வுகள் காணப்படுகின்றன. அந்தவகையில் நாடாளுமன்றத்தில் அது மிகப்பெரிய கட்சிகளில் ஒன்றாக இருக்கும் என்பதால், பிரதான எதிர்க் கட்சியாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்படும் என்று தெரிகின்றது.

விவாதிக்கப்பட்ட இன்னுமொரு விடயம் என்னவென்றால், அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட காணாமற்போன நபர்கள் தொடர்பான பணிமனையை நிறுவும் சட்ட வரைவு தொடர்பானதாகும். ஜனதா விமுக்தி பெரமுனவால் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தங்களை ஏற்றுக்கொள்ளவிருப்பதாக அரசு இப்போது அறிவித்துள்ளது. சபையில் நிலவிய குழப்பகரமான சூழ்நிலையால் குறித்த திருத்தங்கள் சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படமுடியாமல் போயிருந்தது. திருத்தங்களில் ஒன்று, சட்டத்தை எதிர்த்து தேவையானால் உயர்நீதிமன்றத்துக்கு செல்வதற்கான வழி இருக்கவேண்டும் என்பதாகும்.

கூட்டு எதிர்க்கட்சியினர், இந்த சட்டவரைவினால் ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் விளக்குவதற்கு சிறிய குழுக் கூட்டங்களை நடத்துவதற்கும் தீர்மானித்துள்ளனர்.

ராஜபக்ச ஆதரவாளர்கள் தரப்பில் நடைபெற்றுவரும் நகர்வுகள் தொடர்பாக, குறிப்பாக பல்வேறு நடவடிக்கைகள் தொடர்பாகச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேன மிகவிழிப்புடனும் அவதானத்துடனும் இருந்து வருகின்றார். இதில் ஒன்று, பல அமைப்பாளர்கள் கட்சிப் பதவிகளில் இருந்து வெளியேற்றப்பட்டதன் பின்னர், மேலும் சிலர் பதவிகளைத் துறந்து வரும் விடயமாகும். கட்சித் தலைவர்களுடன் அவர் அடிக்கடி நடத்திவரும் சந்திப்புக்களை சமீப காலத்



தில் நிறுத்தி வைத்திருப்பதானது, வரப்போகின்ற கட்சியின் வருடாந்த மாநாட்டில் பல ஆச்சரியங்களுக்கு வழிவகுப்பதாக இருக்கும் என்று எதிர்வு கூறப்படுகின்றது. ஜனாதிபதியுடன் இப்போது பஜட் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் சங்கிலித் தொடராகக் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருபவர்களில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரரணதுங்க, கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த சேனாநாயக்க, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர ஆகியவர்கள் அடங்குவர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இருதரப்பினருக்கும் இடையிலான முரண்பாடுகள் மேலும் முற்றி வெடிக்கும் நிலையொன்று உருவாகி வருவதில் சந்தேகம் அதிகமில்லை. குறிப்பாக வரப்போகும் கட்சியின் வருடாந்த மாநாட்டை ராஜபக்ச தரப்பினர் புறக்கணிக்க இருப்பது இதனைத் தூண்டும்.

குருநாகலில் நடைபெறவிருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் மக்கள் வருகை குறைவாக இருக்காது. நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் கூட்டங்களை பஸ்கள் மூலமாகக் கொண்டுவந்து சேர்ப்பதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இரு தரப்பினரும் எவ்வாறு வெவ்வேறு வழிகளில் செயற்படப் போகின்றார்கள் என்பதே இப்போது எதிர் நோக்கப்படும் பிரச்சினை. நாடாளு மன்றத்தில் தாங்கள் தன்வழியே செயற்படப்போகிறார்கள் என்று அறிவிப்பாளர்களானால் கட்சி மேலும் பிளவுபடுவதற்கான சூழ்நிலை தவிர்க்க முடியாததாகி விடும்.

அவ்வாறு முரண்பட்டுச் செயற்படுபவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்படும் பட்சத்தில், சட்டப் பிரச்சினைகள் தலைதூக்கும் நிலை இருக்கின்றது. நிச்சயமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒரு பாரதூரமான நெருக்கடியை சந்திக்கவிருப்பது என்னவோ சந்தேகமில்லை.

## காலத்துக்கு ஏற்ப நாமும் மாறுவது நன்மை தருமொன்றே

நல்லூரில் இந்தமுறை திருடர்கள், முடிச்சுமாறிகளின் தொல்லை பெருமளவில் குறைவு. முன்னைய ஆண்டு களைவிட இந்த ஆண்டின் வருடாந்தத் திருவிழாக்களின்போது சங்கிலி அறுப்பு, தாலிக் கொடி களவு போன்ற சம்பவங்கள் இடம்பெற்றதாக பெருமளவில் செய்திகள் பத்திரிகைகளில் வெளிவரவில்லை– என்றார் எனது மனைவி. உண்மைதான்; பொலிஸ் துறையினர் பெரியஅளவில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். போதாதற்கு ஆலய வீதிகளில் பல இடங்களிலும் கண்காணிப்புக் கமெராக்கள் பொருத்தப்பட்டன. இதனால் திருட்டுக் கோஷ்டியினர் உசாராயிருந்திருக்கலாம் என்றேன் நான்.

நீங்கள் விளக்கமில்லாமல் கதைக்கிறீர்கள். இப்போதெல்லாம் எமது பெண்கள் நகை விடயத்தில் முன்னெச்சரிக்கையோடு இருக்கிறார்கள். பொது நிகழ்வுகள், மக்கள் பெருமளவில் கூடும் இப்படியான திருவிழாக்கள் போன்றவற்றுக்குப் போகும் எங்களது பெண்கள், 'ரோல் கோல்ட்' நகைகளை அணிந்து செல்லப் பழகிக் கொண்டு விட்டார்கள். இது திருட்டு முயற்சியில் ஈடுபடுவோருக்கும் இப்போது நன்றாகத் தெரியும். அதனால் தான் பெரும் பிரயத்தனப்பட்டு, ஏமாறும் தரப்பினரை சனக்கூட்டத்தின் மத்தியில் இலக்கு வைத்து நகர்ந்து, ஒரு மாதிரி கழுத்தில், கையில் இருக்கும் நகைகளை தருணம் பார்த்து உருவிக் கொண்டாலும், நகையைப் பறி கொடுத்த பெண் உசாரடைந்து தம்மை அடையாளம் காட்டிக்கொடுத்து விடக்கூடாதே என்ற பதற்றத்தில் மேற் கொள்ளும் முயற்சி இது. சரி, நல்ல காலத்துக்கு முயற்சி திருவினையாக்கி எந்தவிதப் பாதிப்பும் இல்லாமல் நகையை அபேஸ் செய்து கொண்டாலும், அந்த நல்லூரான் கருணை வைத்து அது 'ரோல் கோல்ட்' இல்லாத அசல் தங்க நகையாக இருக்க அருள்பாலிக்க வேண்டுமே என்ற வேண்டுதலுடன் மேற்கொள்ளப்படும் முயற்சியாக இந்த நகை அறுப்பு இன்று மாறிவிட்டது என்றார் எனது மனைவி.

இந்தச் சூட்சுமம், வாசகர் கடித வாசகர்களுக்கும் தெரிந்திருக்கவேண்டும் என்பதற்காகவே இதனை இங்கு எழுதுகிறேன். நல்லூரைத் தொடர்ந்து செல்வச்சந்நிதி, வல்லிபுர ஆழ்வார் கோயில், துர்க்கையம்மன் கோயில் எனப் பெருந்திருவிழாக்கள் தொடரப் போகின்றன. நானோ எனது மனைவியோ நல்லூரானின் கொடி ஏறிய நாளிலிருந்து இற்றைவரை நல்லூர் கோயில் பக்கமே போகவில்லை. அதற்காக நல்லூரான் கோபித்துக் கொள்ளவா போகின்றான்?

ஆண்டாண்டு காலமாய் நல்லூரில் குடிகொண்டிருக்கும் கந்தனை, அவனது வருடாந்தப் பெருந் திருவிழாக்கள் முடிந்து, அவன் ஓய்வாய் இருக்கும் சமயம், எமக்கும் ஓய்வு கிடைக்கும் சமயம் சென்று ஆறுதலாக ஆறு தலையுடை யானை வணங்கிப் பணிய எண்ணியுள்ளோம்.

ப.பார்த்தீபன். ஊரெழு.

## தரமானவை வாசகர்களை மகிழ்விக்கும்

ஓகஸ்ட் 31ஆம் திகதியிட்ட தங்கள் பத்திரிகையில், தேவி பரமலிங்கம் அவர்களின் 'ஆக்க இலக்கியமும் சிருஷ்டி இலக்கியமும்' என்ற கட்டுரையை மிகவும் இரசித்துப் படித்தேன்.

கட்டுரை ஆசிரியர் தந்துள்ள பட்டியலில் அன்னாருடைய பெயரும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். தவறவிடப் பட்டமைக்கு தன்னடக்கம் தான் காரணம் என நினைக்கின்றேன்.

இவ்வாறான கட்டுரைகளில் அச்சுப்பிழைகளைக் கவனிக்க வேண்டியது மிக அவசியம். விளக்கமற்ற சொற் பிரயோகங்களையும் கட்டுரையாளர் தவிர்ப்பது நல்லது. மற்றப்படி மிக அருமையான கட்டுரை. வாழ்த்துக்கள்!!!

ப. குகேந்திரதாசன்
பொற்பதி வீதி.
கொக்குவில்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் [illegible] விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கைது

## ஐ.எஸ். தீவிரவாதிகள் மூவர் மலேசியாவில்

கோலாலம்பூர், செப்.2
மலேசியாவில் அமைந்துள்ள பட்டுக் குகை முருகன் கோயிலில் குண்டு வெடிப்பு நிகழ்த்தத் திட்டமிட்டிருந்த 3 ஐ.எஸ். தீவிரவாதிகள் அதிரடியாகக் கைது செய்யப்பட் டுள்ளனர். மலேசிய சுதந்திர தினத்துக்கு முந்திய தினமான கடந்த செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முருகன் கோவில், கேளிக்கைப் பூங்கா மற்றும் பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் குண்டுவெடிப்பு நிகழ்த்தத் திட்டமிடப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தை அறிந்த சிறப்பு அதிரடிப் படையினர் கடந்த செவ்வாய்க்கிழமை மூவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களிடம் இருந்து துப்பாக்கி, தோட்டாக்கள், கிரனேட் மற்றும் வெடிபொருள்கள் மீட்கப் பட்டன. அத்துடன் சிரியாவில் உள்ள ஐ.எஸ். அமைப்புடன் இவர்களுக்கு நேரடித் தொடர்பு இருப்பது உறுதி செய்யப்பட்டது.

முன்னதாக மலேசியாவில் மதுபானச் சாலையில் இடம் பெற்ற கிரனேட் வீச்சு வெற்றிகரமான தாக்குதல் எனப் பகிர்ந்துள்ள தகவலைப் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

இதனால் பொலிஸார் அதிக எச்சரிக்கையுடன் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இஸ்லாமிய ஆதிக்கம் நிலைத்த மலேசிய நாட்டில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதையிட்டுப் பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர்.

அத்துடன் ஆசியாவில் இருந்து போராளிகளை எதிர் பார்ப்பதாக ஐ.எஸ். அமைப்பு பரப்புரை செய்தமையை அடுத்துப் பொலிஸார் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளனர்.

(த-ரி4)

## இஸ்ரேலில் குடி

### முதற் கட்டமாக 285 வீடுகள் நி



ஜெருசலேம், செப்.2
இஸ்ரேலில் குடியேற்றங்கள் [illegible] வடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருவதாகச் சமாதானக்கண்காணிப்புக் குழு தகவல் வெளியிட்டுள்ளது. இதன் அடையாளமாக, மேற்குப் பகுதியில் 285 வீடுகளுக்கான கட்டுமானங்கள் நடைபெற்று வருவதாகவும் அந்தத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, ஒபரிம் பகுதியில் சேதமடைந்துள்ள 179 வீடுகளை திருத்தியமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இஸ்ரேஸ்-பலஸ்தீனம் இடையிலான சமாதான நடவடிக்கையை அடுத் களுக்கான வீடுகள் வருவதாக அமெரிக்க சமாதான அவதானிப் செவ்வாய்க்கிழமை



## நிலநடுக்க இடிபாடுகளு திருமணம் செய்த தம்ப

ரோம், செப்.2
இத்தாலியில் இடம்பெற்ற நிலநடுக்க இடிபாடுகளுக்கு மத்தியில் தம்பதியர் தமது திருமணத்தை நடத்தி அனைவரது வரவேற்பையும் பெற்றுள்ளனர். ரமோன்-மார்ரினா ஆகிய இருவர் கடந்த ஒரு வருட காலமாக திருமணத்துக்குத் திட்டமிட்டு வந்தனர். இந்த நிலையில், எதிர்பாராத விதமாக இத்தாலியில் நிலஅதிர்வு ஏற்பட்டுக் கடும் சேதத்தை விளைவித்தது.

அவர்களது திருமணம் நடைபெறத் திட்டமிடப்பட்ட ஆலயம் 16ஆம் நூற்றாண்டு காலத்தில் கட்டப்பட்டது அதிர்வால் முற்றாக அ இருந்தது. ஆனால் தம பகுதியில் தமது திருமண எமது பகுதி மக்களை றோம். வெளிப் பகுதி ணத்தைக் கொண்டாட எமது மகிழச்சியை இ விரும்புகின்றோம் எ தெரிவித்தனர். நில அ பேர் உயிரிழந்ததுடன் 500 பேர் இடம் குறிப்பிடத்தக்கது.





அமெரிக்க மாநிலமான நெவெடாவில் அமைந்துள்ள பாலைவனப் பகுதியில் வருடாந்த நெருப்பு விழா நடைபெறவுள்ளது. பாலைவனத்தின் ஒரு பகுதியில் கலைப் படைப்பாளர்ச பிரமாண்டமான படைப்புகளை உருவாக்குவர். ஒற்றுமை, சமூகம், கலாசாரம் ஆகியவற்றின் அடிப்படையில் இது நடத்தப்படுகின்றது. கடந்த மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட இ இம்மாதம் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியேற்றங்கள்

ர் நிர்மாணிப்பு



ைய அடுத்து குடியேற்றங் வீடுகள் அமைக்கப்பட்டு மெரிக்காவைச் சேர்ந்த வதானிப்புக் குழு கடந்த கிழமை தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த வருடத்தில் 2 ஆயிரத்து 623 குடியிருப்புகளைஅமைப்பதற்கு, அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இரு தரப்பினர் தொடர்புடைய நிலப் பகுதியில் குடியிருப்புகளை அமைப்பதில் துல்லியத் தன்மையுடன் செயற்படவேண்டும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீண்ட காலமாக இடம் பெற்று வரும் மோதலில், அண்மையில் ஏற்பட்ட புரிந்துணர்வு உலக நாடுகளிடம் பாராட்டைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)



# படகில் பிறந்தன இரட்டைக் குழந்தைகள்

## பெண்ணொருவர் அகதியாக லிபியாவுக்குச் சென்றவேளை

ரோம், செப்.2

லிபியக் கடற்கரையில் தரையிறங்கிய அகதிகளில், பிறந்து 5 நாள்களேயான இரட்டைக் குழந்தைகளும் வந்திறங்கியமை உலகத்தை நெகிழ்ச்சிக்குளாக்கியது.

கடந்த திங்கட்கிழமை லிபியாவில் தரையிறங்கிய 6 ஆயிரத்து 500 அகதிகளுள், பிறந்து 5 நாள்களேயான இரட்டைக் குழந்தைகளும் உள்ளடங்குவர்.

மத்திய தரைக்கடலினூடான பயணத்தின்போது இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. இவர்கள் லிபியாவில் தரையிறங்கியவுடன் அகதிகளைப் பராமரிக்கும் விசேட வைத்தியக் குழு தாயையும், குழந்தைகளையும் இனம் கண்டு, அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்தது. மோசமான வானிலை, கால நிலைச் சூழலில் பிறந்த குழந்தைகள், பயணித்தமையால் அவர்களுக்கு நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளது என மருத்துவர் ஒருவர் தெரிவித்தார்.

குழந்தையின் தாயார் தனியாகப் பயணித்தார் என்றும், போதிய பராமரிப்பு வழங்கப்படவில்லை எனவும் அந்த மருத்துவர் தெரிவித்தார்.

சாதாரண மரப் படகுகள், இறப்பர் படகுகள் ஆகியவற்றில் பயணிப்பதால், பலவிதமான நோய்களுக்கு மக்கள் ஆளாகியுள்ளனர். குறிப்பாக இது சிறுவர்களில் அதிக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என மருத்துவர் குழு கவலை தெரிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை வந்திறங்கிய எண்ணிக்கையே மிக அதிகளவானது என அகதிகளை மீட்கும் பணியில் ஈடுபட்ட மீட்புப் படை அதிகாரி தெரிவித்தார். ஏடன் கடலைக் கடந்து ஐரோப்பாவை அடைவதற்கு, துருக்கி -ஐரோப்பிய ஒன்றியம் இணைந்து தடை விதித்ததை அடுத்து, ஆபத்தான மத்திய தரைக்கடல் பயணத்தை அகதிகள் மேற்கொண்டு வருகின்றனர். இதனை அடுத்து கிரீசில் ஒரு லட்சத்து 60 ஆயிரம் அகதிகளும், இத்தாலியில் ஒரு லட்சத்து 5 ஆயிரம் அகதிகளும் இந்த ஆண்டு மாத்திரம் தரையிறங்கியுள்ளனர். (த-ரி4)

# 13 இந்தியர்களுக்கு சீகா வைரஸ் தொற்று

சிங்கப்பூர் சிற்றி, செப்.2

சிங்கப்பூரில் பணிபுரியும் இந்தியத் தொழிலாளர் 13 பேருக்குச் சீகா வைரஸ் தொற்று இருப்பதாக இந்திய அயலுறவுத்துறை அமைச்சு நேற்று முன்தினம் தெரிவித்தது.

இந்த வார ஆரம்பத்தில் கட்டடத் தொழிலாளர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட சீகா வைரஸ் சோதனையில் சிலர் இனம் காணப்பட்டுள்ளனர். இதனால் நுளம்பு பரவும் பகுதிகளில் வசிக்கும் ஏனைய தொழிலாளர்கள் தொடர்ந்து சோதனையிடப்பட்டனர். இதனையடுத்து, தொற்று உடையவர்களின் எண்ணிக்கை 115 ஆக உயர்வடைந்தது. இவற்றில் சிங்கப்பூருக்குத் தொழில் புரியச் சென்ற இந்தியர்கள் 13 பேரும் அடங்குவர்.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் நாடுகளைச் சேர்ந்த 3 லட்சத்து 60 ஆயிரம் கட்டடத் தொழிலாளர்கள் சிங்கப்பூரில் பணிபுரிகின்றனர். அவர்கள் தங்கும் இடங்களில், போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படாமையால், ஜன்னல்களைத் திறந்து உறங்கவேண்டிய சூழல் ஏற்பட்டது எனத் தெழிலாளர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் வெளிநாடுகளில் இருந்து வரும் தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு வசதிகளை செய்து கொடுக்கக் கட்டுமான நிறுவனங்கள் தவறிவிட்டன என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. (த-ரி4)





# பதவி நீக்கப்பட்டார் பிரேசில் ஜனாதிபதி

## 75 வயதான பொருளாதார நிபுணர் புதிய ஜனாதிபதியானார்

பிரேசிலியா, செப்.2

பிரேசில் ஜனாதிபதி டில்மா றொசொப் நிறைவேற்று அதிகாரத் தரப்பினரால் வாக்குரிமை மூலம் ஜனாதிபதிப் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இதனை அடுத்து ரெம்மர் என்ற 75 வயதான பொருளாதார நிபுணர் புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ளார். டில்மா நிதி மோசடியில் ஈடுபட்டதை அடுத்து ஜனாதிபதி



பதவியில் இருப்பதா? இல்லையா? என்ற கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் டில்மா வெளியேற்றப்பட்டுள்ளார்.

புதிய ஜனாதிபதி ரெம்மர் தெரிவிக்கையில்,

பிரேஸிலில் 12 மில்லியன் மக்கள் வேலையற்றவர்களாக இருக்கின்றனர். அவற்றைக் கருத்தில் கொண்டு செயற்படவேண்டும்- என்றார். நாட்டில் பெரிய அளவிலான நிதி மோசடி இடம் பெற்றதால் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் கூறினார். ஒலிம்பிக் போட்டிகளின் வெற்றி அரசின் திட்டமிடுதலால் மட்டுமல்ல, மாறாக மக்களின் ஒத்துழைப்புமே காரணம் எனப் பலர் கருத்து பகிர்ந்துள்ளனர். பிரேசிலின் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2018 ஆம் ஆண்டு நடைபெறவுள்ளது. எதிர்வரும் தேர்தலில் டில்மா போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிலையில் டில்மாவின் அரசியல் வாழ்வில் ஏற்பட்ட வீழ்ச்சி இது என அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர். (த-ரி4)

# களுள் ம்பதியர்

ப்பட்டது என்பதால், நில ற்றாக அது சேமடைந்து னால் தம்பதியர் ஆலயப் திருமணத்தை நடத்தினர். க்களை நாம் நேசிக்கின் ப் பகுதியில் எமது திரும ண்டாட விரும்பவில்லை. சியை இங்கேயே பகிர றாம் எனத் தம்பதியர் . நில அதிர் வில் 291 ந்ததுடன், 2 ஆயிரத்து இடம்பெயர்ந்தமை கது. (த-ரி4)



ப்பாளர்கள் திரண்டு ப்பட்ட இந்த விழா, (த-ரி4)

# 1,674 மக்களுக்கு ஒரு மருத்துவர்

## இந்திய நிலமை இது என்கிறது அந்த நாட்டு சுகாதார அமைச்சு

புதுடில்லி, செப்.2

இந்தியாவில் ஒரு மருத்துவருக்கு ஆயிரத்து 600இற்கு மேற்பட்ட பொது மக்கள் என்ற விகிதத்தில் இருப்பதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. 2014 ஆம் ஆண்டு அறிக்கையின் அடிப்படையில், 7 லட்சத்து 40 ஆயிரம் மருத்துவர்கள் கடமையில் உள்ளனர் என்றும், ஒரு மருத்துவருக்கு ஆயிரத்து 674 பேர் என்ற எண்ணிக்கையில் இருப்பதாகவும், இந்த நிலை வியட்நாம், அல்ஜீரியா மற்றும் பாகிஸ்தானை விட மோசமான நிலை எனவும் இந்திய சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் 55 சதவீத மருத்துவர்கள் தனியார் கல்லூரிகளில் இருந்து பட்டம் பெறுபவர்களாவர். அதாவது வருடாந்தம் 55 ஆயிரம் மருத்துவர்கள் தனியார் கல்லூரியைச் சேர்ந்தவர்களாவர். அத்துடன் தனியார் கல்லூரிகளில் மருத்துவப் படிப்புக்கு அதிக தொகை நன்கொடையாகப் பெறப்படுகின்றது. குறிப்பாக தமிழ் நாட்டில் ஒருவர் மருத்துவராவதற்கு, 2 கோடி இந்திய ரூபா அறவிடப்படுகின்றது என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆனால் உலகின் ஏனைய நாடுகளை விட இந்தியாவில் அதிகளவான மருத்துவக் கல்லூரிகள் இருப்பதாக 2014 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-ரி4)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீடு கட்டுவதற்குரிய மனையடி சாஸ்திரப் பலன்

மனையடி சாஸ்திரப் பிரகாரம் வீடு கட்டுவதற்கும் வீட்டுக்குள் அறைகள் கட்டுவதற்கும் அந்த வீட்டின் உரிமையாளனால் காலடி அளந்த தன் பேரில் அடியைக் கண்டு அறிந்துள்ள அகலத்துக்கும் நீளத்துக்கும் பலன்களை அறியவும்.

6- அடி நன்மை, 7- அடி தரித்திரம், 8- அடி நல்ல பாக்கியம் தரும், 9- அடி கெடுதல் தரும், 10- அடி ஆடுமாடு சுபிட்சம், 11- அடி பால்பாக்கியம், 12- அடி விரோதம், செல்வம் குறையும், 13- அடி ஆரோக்கியம் குறைவு, 14- அடி சஞ்சலம், மனக்கவலை நஷ்டம், 15- அடி காரியபங்கம், பாக்கியம் சேராது, 16- அடி மிகுந்த செல்வமுண்டு, 17- அடி அரசனைப்போல் பாக்கியம் சேரும். 18- அடி அமர்ந்த மனை பாழாம், 19- அடி மனைவி, புத்திரர், கவலைதரும், 20- அடி ராஜயோகம், 21- அடி பசுக்களுடன் பால் பாக்கியம் தரும், 22- அடி எதிரி அஞ்சுவான், மகிழ்ச்சி 23- அடி வியாதிகளுடன் கலங்கி நிற்பான், 24- அடி வயது குன்றும், மத்திம பலன். 25- அடி தெய்வ கடாட்சம் இல்லை, 26- அடி இந்திரனைப்போல் வாழ்வார், 27- அடி மிக்க செல்வ சம்பத்துடன் வாழ்வார், 28- அடி செல்வம் சேரும், 29- அடி பால்பாக்கியம், செல்வம் தரும். 30- அடி லக்ஷ்மி கடாட்சம் பெற்று வாழ்வார், 31- அடி சிவ கடாட்சத்துடன் நன்மை பெருகும், 32- அடி முகுந்தனருள் பெற்று வையகம் வாழ்வார். 33- அடி நன்மை, 34- அடி விட்டோட்டும், 35- அடி தெய்வகடாட்சமுமுண்டு, 36- அடி அரசரோடு அரசாள்வார், 37- அடி இன்பமும் லாபமும் தரும், 38- அடி பேய் பிசாசு குடியிருக்கும், 39- அடி இன்பம் சுகம் தரும், 40- அடி என்றும் சலிப்புண்டாகும், 41- அடி இன்பமும் செல்வமும் ஓங்கும், 42- அடி லக்ஷ்மி குடியிருப்பாள், 43- அடி சிறப்பில்லை, தீங்கு ஏற்படும், 44- அடி கண் போகும், 45- அடி துர்புத்திரர் உண்டு, 46- அடி வீடு ஓட்டும், 47- அடி எந்நாளும் வறுமை தரும், 48- அடி வீடு தீப்படும், 49- அடி மூதேவி வாசம், 50- அடி பால்பாக்கியம் ஏற்படும், 51- அடி வியாஜ்யம், 52- அடி தான்யமுண்டு, 53- அடி வீண்செலவு, 54- அடி லாபம் தரும், 55- அடி உறவினர் விரோதம், 56- அடி புத்திரர் உற்பத்தி, 57- அடி புத்திர அற்பம், 58- அடி விரோதம், 59- அடி சுப தரிசனம், 60- அடி பொருள் விருத்தி உண்டு, 61- அடி விரோதமுண்டு 62- அடி வறுமை தரும், 63- அடி இருப்பு குலையும், 64- அடி நல்ல சம்பத்து தரும், 65- அடி பெண் நாசம், 66- அடி புத்திரபாக்கியம், 67- அடி பயம், 68- அடி திரவிய லாபம். 69- அடி அக்கினி உபாதை, 70- அடி அன்னியருக்கு பலன் தரும், 71- அடி இராசியுப்பிரியம், 72- அடி வெகுபாக்கியம், 73- அடி குதிரை கட்டி வாழ்வான், 74- அடி பிரபல விருத்தி, 75- அடி சுகம், 76- அடி புத்திர அற்பம், 77- அடி யானை கட்டி வாழ்வான், 78- அடி புத்திர அற்பம், 79- அடி கன்று காலி விருத்தி, 80- அடி லக்ஷ்மிவாசம், 81- அடி இடி விழும், 82- அடி தோசம் செய்யும், 83- அடி மரண பயம், 84- அடி சௌக்கிய பலன், 85- அடி சீமானாவான் 86- அடி இம்சை உண்டு, 87- அடி தண்டிகை உண்டு, 88- அடி சௌக்கியம், 89- அடி பலவீடுகள் கட்டுவான், 90- அடி யோகம், பாக்கியம் தரும், 91- அடி வித்துவாம்ச முண்டு, 92- அடி ஐஸ்வரியம், 93- அடி தேசாந்திரம் வாழ்வான், 94- அடி அன்னிய தேசம் போவான், 95- அடி தனவந்தன், 96- அடி பிறதேசம் செல்வான், 97- அடி கப்பல் வியாபாரம், விலை மதிப்புள்ள வியாபாரம் போவான், 98- அடி பிறதேசங்கள் போவான், 99- அடி இராஜ்ஜியம் ஆள்வான், 100- அடி 6 சுகத்துடன் வாழ்வான்.



அவரவர்கள் பிறந்த ராசிக்கு வாசற்கால் வைக்கும் திக்குகள் விவரம்.

ரிஷபம். மிதுனம், கடக ராசியில் பிறந்தவாகளுக்கு வடக்கு வாயில் வீடு சிறந்தது.

சிம்மம், கன்னி, துலாம் ராசியில் பிறந்தவர்களுக்கு கிழக்கு வாயில் வீடும், தெற்கு வாயில் வீடும் சிறந்தது.

விருச்சிகம், தனுசு, மகர ராசியில் பிறந்தவர்களுக்கு தெற்கு வாயில் வீடு சிறந்தது.

கும்பம், மீனம், மேட ராசியில் பிறந்தவர்களுக்கு தெற்கு வாயில் வீடு சிறந்தது.

**வீடு கட்ட வேண்டிய மாதங்கள்**

வைகாசி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை, உத்தமம்.

# படித்த இளைஞர்களும் தங்களை விவசாயத்தில் ஈடுபடுத்தக்கூடிய வாய்ப்பு

ப.அருந்தவம்

*(நேற்றைய தினம் வெளியான "எதிர்காலத்தில் பிரபல்யமாகும் மண்ணின்றிய விவசாயம்" என்ற கட்டுரையின் தொடர்ச்சி)*

தானியங்கி முறையில் செடிகளுக்குத் தேவையான நீரைப் பாய்ச்சுவதால் களைகளை அகற்றவேண்டிய தேவையும் இல்லாததால் தோட்டப் பராமரிப்புக்கு இரண்டு நபர்கள் மட்டும் போதுமானது. விவசாயப் பணிகள் குறைவாக உள்ளதனால் தற்போதைய சூழலில் மிகவும் இலாபகரமாக இருக்கும்.

**பல்வேறு நன்மைகள் தரும்**

மிகக் குறைந்த இடம், மிகக் குறைந்த நீர், மிகக் குறைந்த நேரக்கவனிப்பு, மிகக்குறைந்த உடலுழைப்பு, மிகக் குறைந்த உற்பத்திச்செலவு (ஆரம்ப மூலதனம் தவிர) களைகள் அகற்ற வேண்டிய தேவையில்லை. குறைந்த நாள்களில் மிக விரைவான அறுவடை, பூச்சி, நோய்த்தாக்கம் குறைவு. எனவே பூச்சி கொல்லிகளுக்கான செலவு தேவைப்படாது. இம்முறைமூலம் போகமல்லாத காலத்திலும் விளைவு பெறமுடியும் என ஒன்றுக்கு மேற்பட்ட நன்மைகளை இம்முறைப் பயிர்ச்செய்கை தருவதால் எதிர்காலத்தில் இம்முறையையே பலரும் நாடுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

**இன்று மண்ணின்றிய விவசாயம்**

அபிவிருத்தியடைந்த நாடுகளில் இன்று மண்ணின்றிய பயிர்ச்செய்கை சிறப்பாக நடைபெறுகிறது. ஜப்பானில் தோஷிபா எனும் கம்பனி தமது பிரதேசத்தில் உபயோகமில்லாத சேமிப்புக்கிடங்குகளில் இந்த விவசாயத்தை நடத்துகின்றது. முற்றிலும் அடைக்கப்பட்டு வெளிக்காற்று, வெப்பம், சூரியஒளி எதுவும் வராத இடத்தில் எல்லாமே செயற்கையாக உருவாக்கி, விவசாயம் செய்யப்படுகிறது. இதேபோல் யூரேஃபிரெஸ் எனும் காய்கறி உற்பத்தி நிறுவனம் அரிசோனா பாலைவனத்தில் கூட பல ஏக்கர் நிலத்துக்குச் சமனாக வேளாண் முயற்சியை மேற்கொண்டு தக்காளி, வெள்ளரி, மிளகாய் போன்ற பயிர்களைப் பயிரிட்டு அதிக விளைவு பெறுகின்றது.

மத்தியகிழக்கு நாடுகளில் மிகுந்த வரவேற்புடன் இந்த விவசாயம் நடைபெறுகிறது.

**செங்குத்து விவசாயமும் இல்லப்பயிர்ச் செய்கையும்**

அடுக்குமாடி வடிவில் அமைக்கப்பட்ட இல்லங்களிலும் ஒவ்வொரு தளத்திலும் போசணை ஊடகம் நிரப்பப்பட்ட தொட்டிகள் அமைக்கப்பட்டு, பல ஏக்கர் நிலத்துக்குச் சமனான இடப்பரப்பில் விவசாயம் செய்யப்படும்.



இதன்மூலம் எங்கெல்லாம் எக்காய்கறிகளுக்குக் கேள்விமானமுண்டோ, அங்கெல்லாம் இவ்வாறான இல்லங்களில் குறித்த பயிர்களைச் செய்து விளைவை விற்பனை செய்யமுடிகிறது. இப்போதெல்லாம் விற்பனை நிலையம் ஓர் இடத்திலும் உற்பத்தியிடம் வேறோர் இடத்திலும் காணப்படுகிறது. எதிர்வரும் காலங்களில் விற்பனையிடத்திலேயே (நகரத்தில் கூட) அடுக்குமாடி இல்லங்களில் விவசாயம் மூலம் உற்பத்தியான உடன் விளைவுகளை மக்கள் பெறக்கூடிய நிலை ஏற்படும்.

**இவ்வாறான இல்லங்களில் ஆளுகை**

சுத்தமான முறையில் பயிர்ச்செய்கை முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதனால் பயிர்களை நோய்ப் பீடைகள் அணுகாது. இதேபோல மண் மூலம் பரவும் நோய்களும் ஏற்படாது. எனவே பூச்சிநாசினிகள், நோய்க்கிருமிகள் அற்ற விளை பொருள்களை மக்கள் நுகர்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஆளுகையில்லங்களில் முகாமைத்துவம் பேணப்படுவதால் பருவகாலங்களில் மட்டுமன்றி, வருடம் முழுவதும் விவசாய விளை பொருள்களைப் பெறக்கூடிய நிலை ஏற்படும். இதேபோல் பருவகால சீர்கேடுகளான புயல், வெள்ளம், வறட்சி காலம் தவறிய மழைப்பொழிவு போன்றவற்றாலும் பயிர்கள் பாதிப்படையாது.

**சூழல் நேயப் பயிர்ச் செய்கைத் திட்டம்**

எதிர்காலத்தில் இந்தப் பயிர்ச் செய்கைத் திட்டம் இல்லங்களுக்குத் தேவையான ஒளி, காற்றோட்டம் என்பவற்றைச் செயற்கையாக வழங்கத் தேவையான மின்சாரம், சூரிய ஒளிப்படல்களைப் பயன்படுத்தியும் இங்கு பயிர் செய்து எஞ்சும் பயிர் மீதிகள், பயிர்க் கழிவுகள் என்பவற்றை எரித்து மின்சாரம் பெறுகின்ற வாய்ப்புக்கள் ஏற்படும். மேலும் நகர்ப் புறங்களிலிருந்து வெளியேறும் கழிவு நீரான்து சுத்திகரிக்கப்பட்டு இந்தத் தாவரங்களுக்கான நீர்த் தேவையை ஈடுசெய்யும் வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

**இன்றைய இளைஞர்களின் ஆதங்கத்துக்கு முடிவு**

இன்றைய இளைஞர்கள் மண்ணில் இறங்கி வேலை செய்வதையும், மண்வெட்டியைக் கையால் பிடிப்பதையும் கேவலமாக எண்ணுகின்றனர். இதனால் ஆயிரமாயிரம் இளைஞர்கள் படித்துவிட்டு வேலையில்லாப் பட்டாளத்தில் சேருகின்றனர். எனவே இவர்கள் எதிர்காலத்தில் ஏர் பூட்டாது, மண்வெட்டி பிடிக்காது, மண்ணில் கை படாது நடக்கும் இந்த வேளாண் முயற்சியில் தங்களை இணைத்துக் கொள்ளும் வாய்ப்புமுண்டு.

(தொடரும்)



# வடபகுதியில் பிரகாசமாக மாறுமா தென்னைச் செய்கையின் எதிர்காலம்?

ஈஸ்வரன் சற்குணன்

இலங்கையின் வடபகுதியில் தென்னைப் பயிர்ச்செய்கையானது மீளவும் புத்துருவாக்கப்பட்டு வருகின்றது. இதில் வடபிராந்திய தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையும் கணிசமான பங்களிப்பைச் செய்து வருகின்றது. இந்தச் சபையினால் வழங்கப்படுகின்ற விசேட மானியத் திட்டங்கள், பயிற்சி வகுப்புக்கள், பீடைநோய்க் கட்டுப்பாட்டு முறைகள், கடன் வசதிகள், பொருட்காட்சிகள், பயிற்சிப் பட்டறைகள் போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம். இவை எல்லாவற்றுக்கும் மைல்கல்லாக ஆடி மாதம் 9ஆம் திகதி பளைப் பகுதியில் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் புதிய கட்டடத் தொகுதிக்கு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நவீன் திசாநாயக்கவால் வைக்கப்பட்ட அடிக்கல்லானது வடபகுதி தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு ஓர் ஊக்குவிப்பாக அமையும். அந்தக் கட்டடத் தொகுதியில் அமையவிருக்கும் தென்னை ஆராய்ச்சி நிலையத்தின் ஒரு பகுதியானது சிறுதோட்ட, பெருந் தோட்ட தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். அதிக தென்னந்தோட்டங்கள், தென்னைப் பயிர்ச் செய்கை சபையினரின் வழிகாட்டலின் பிரகாரம் செயற்பட்டாலும், அந்தத் தோட்ட உரிமையாளர்களால் தென்னையை நடுவதிலுள்ள கரிசனையிலும் பார்க்க அதனை வளர்த்தெடுப்பதிலுள்ள அக்கறை குறைவாகவே உள்ளது. அதாவது உரிய முறையில் பசளையிடுதலோ, நீர் பாய்ச்சுதலோ குறைவு.

பொதுவாக ஏற்கனவே கொள்வனவு செய்த ஓர் ஏக்கர் காணியைத் துப்புரவு செய்து, குழாய்க்கிணறு அமைத்து, முட்கம்பி வேலியிட்டு தென்னம்பிள்ளையை நடுவதற்கு ஏறத்தாழ இரண்டரை இலட்சம் ரூபா செலவாகும். இதை விட மாதாமாதம் பராமரிப்புச் செலவாக 10, 000 ரூபா தொடக்கம் 15, 000 ரூபா வரை செலவாகும். ஆனால் தென்னை காய்த்துப் பயன் தருவதற்கு ஏறத்தாள ஆறு வருடங்களாகும். இலங்கையில் சராசரியாக ஒரு தென்னைமரம் வருடத்துக்கு 93 காய்களையே தரும். இலங்கையின் தென்னைக்குரிய சாதகமான வரைபட அமைப்பின்பிரகாரம் (Land Suitability Map For Coconut) தென்னை செய்யும் இடமானது $S_1, S_2, S_3, S_4, S_5$ எனப் பிரதானமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதைத் தீர்மானிப்பதில் மண்ணில் உள்ள போசணைத் தன்மை, மண்ணின் வகை, மழை வீழ்ச்சி கிடைக்கும் தன்மை, போன்றவையே பிரதான மாணவையாகும். வடமாகாணத்தில் இன்னமும் தென்னை ஆராய்ச்சி நிலையத்தால் Land Suitability Map செய்யப்படவில்லை. தென்னைப் பயிர்ச் செய்கைக்குச் சாதகமான இடமாகிய குருநாகல், புத்தளம், மாறவில போன்ற இடங்களின் இட அமைவானது $S_1, S_2$ போன்று இருந்தாலும் எமது வடபகுதியானது உலர் வலயத்தில் இருப்பதனாலும் மணற்தன்மையான அல்லது இருவாட்டி மண்ணே இருப்பதனாலும் பெரும்பாலும் $S_3, S_4, S_5$ இற்கே சாத்தியத்தன்மை உள்ளது. ஆகையால் சராசரித் தேங்காய் உற்பத்தி முறையே 78, 62, 31 ஆக $S_3, S_4, S_5$ இல் காணப்படும். இவ்வாறு பார்க்கையில் ஒரு ஏக்கர் தென்னைச் செய்கையாளருக்கு கையும் கணக்கும் சமனாக வரும் போல்தான் தெரிகிறது.

ஒரு தென்னந்தோட்டம் செய்யும் விவசாயி தனியே தென்னையை மட்டும் செய்யாமல் அதனுடன் இணைந்த ஒருங்கிணைந்த பண்ணையை மேற்கொண்டால்தான் நிச்சயமாக அவருக்கு இலாபம் கிடைக்கும். ஒருங்கிணைந்த பண்ணையானது அவருடைய தோட்டத்தின் மண்தன்மை, நீரின் இயல்பு, நீர் கிடைக்கும் அளவு, தென்னையின் வயது என்பவற்றுக்கு அமைவாகவே திட்டமிடப்படல் வேண்டும்.

> எமது உணவு முறையில் தேங்காய்ப் பால் கணிசமான இடத் தைப் பெறுகின்றது. இதில் தேங்காய்த் துருவலைக் கைகளினால் பிழிவதால் ஏறத்தாழ 65 வீதமான பால் பெறப்படுகின்றது. இதற்காகப் பொருத்தமான பிளண்டர் (Blander) போன்ற இலகு இயந்திரங்களைப் பாவிப்பதால் தேங்காய்ப் பாலின் வீண்விரயத்தை தவிர்ப்பதன் மூலம் எமதுநுகர் வைக்குறைத்து ஏற்றுமதியை அதிகரிக்கலாம்.

தென்னைகளுக்கிடையில் மரக்கறிச் செய்கை தொடக்கம் மரமுந்திரிகைச் செய்கை வரையும் செய்யலாம். ஆடு, மாடு, கோழி, பன்றி போன்ற கால்நடை வளர்ப்பையும் மேற்கொள்ளலாம். இதன் மூலம் தென்னந் தோட்டத்தின் ஓர் ஏக்கருக்கான விளைச்சலை அதிகரிக்கச் செய்யலாம். இவ்வாறான செயற்றிட்டங்கள் மூலம் விவசாயியின் வருமானத்தை அதிகரிப்பதும், விவசாயியின் உற்பத்திச் செலவீனத்தைக் குறைப்பதற்கான மானியத் திட்டத்தை வழங்குவதும்தான் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் இலக்குகளில் ஒன்றாகும்.

நாம் ஏ-9 அல்லது ஏ-32 சாலையால் பயணிக்கும்போது போரினால் அழிவுற்ற பல தென்னந்தோட்டங்கள் புனரமைக்கப்பட்டு வருவதைப் பார்க்கக்கூடியதாக உள்ளது. இந்தப் பகுதியில் உள்ள காணிகளின் விலைகளும் கிடுகிடுவென அதிகரித்து வருகின்றன. நெடுஞ்சாலைப் பகுதியைத் தவிர உட்புறமாக அதிகளவு புதிய தென்னந் தோட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு எல்லோரும் தென்னைச் செய்கையில் ஈடுபட்டால் இன்னும் 6,7 வருடங்களில் தேங்காய் உற்பத்தி கணிசமான அளவுக்கு அதிகரித்துத் தேங்காயின் விலையில் வீழ்ச்சி ஏற்படலாம் எனப் பல தோட்டச் செய்கையாளர்கள் கருத இடமுண்டு. ஆனால் அவ்வாறான ஒரு நிலை ஏற்படாமல் தேங்காய் விலையில் ஒரு ஸ்தீரணத் தன்மையை எதிர்காலத்தில் ஏற்படுத்துவதற்கா கவும் அந்நியச் செலாவணியை சம்பாதிப்பதற்காகவும் வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்காகவும் புலம்பெயர்வாழ் தமிழர்களின் பங்களிப்புடன் இங்கிருந்து தேங்காயை அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு அனுப்புவதற்கான செயற்றிட்டங்கள், பேச்சுவார்த்தைகள், கள ஆய்வுகள், திட்டமுன்மொழிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.



நாம் தேங்காயை இங்கிருந்து நேரடியாக வெளிநாடுகளுக்கு அனுப்புவது மிகவும் சிரமம். ஆனால் அதை பல்வேறுபட்ட வடிவங்களில் மாற்றி அனுப்பினால் எமக்கு அந்நியச் செலாவணி மட்டுமல்லாமல் பெண் த்லைமைத்துவக் குடும்பங்களுக்கும் விசேட தேவைக்குட்பட்டவர்கள் போன்ற பலருக்கும் நேரடி வேலை வாய்ப்புக்கள், கிடைப்பது மட்டுமல்லாமல் பகுதிநேர வேலை வாய்ப்புக்கள் மற்றும் மறைமுகமான வேலை வாய்ப்புக்களும் பலருக்கு ஏற் படுத்தப்படும்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் தொழில் புரியும் எமது நாட்டவர்கள் ஒரு தொழிலில் மட்டும் தங்கியிராமல் பல தொழில்களை செய்வதனாலேயே அவர்களின் வாழ்க்கைத் தரம் அதிகரித்துக் காணப்படுகின்றது. அத்துடன் அங்கு பெரும்பாலான தொழில் முறைகளுக்கு மணித்தியால அடிப்படையிலேயே பணம் வழங்கப்படுகின்றது. அவ்வாறே தென்னைசார் கைத்தொழில் துறையானது அதிகளவில் வளர்ச்சியடையுமேயானால் பல பகுதிநேர வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படும். இதன் மூலம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பலர் பயன்பெறக் கூடியதாக இருக்கும்.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் கொப்பராவில் இருந்து தயாரிக்கப்படும் தேங்காயெண்ணைக்கான கேள்வி மிகவும் குறைவு. ஏனெனில் அதன் தரம் குறைவு, நீண்டகால பாவனைக்குட்படுத்த முடியாமல் பாண்டல் தன்மை ஏற்படும். இதனால் அந்த நாடுகளில் தேங்காய்களில் இருந்து தயாரிக்கப்படும் Virgin (வேஜின்) தேங்காய் எண்ணைக்குப் பெரும் கிராக்கி நிலவுகின்றது. அதுவும் ஆசிய நாடுகளில் இருந்து ஏற்றுமதியாகும் வேஜின் தேங்காய் எண்ணெயின் தரம்தான் முன்னணியில் திகழ்கின்றது.

பொதுவாக ஒரு லீற்றர் வேஜின் தேங்காய் எண்ணெய் தயாரிப்பதற்கு 10 தொடக்கம் 15 தேங்காய்கள் தேவைப்படும். வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 2 கொன்ரெயினர் (Container) வேஜின் தேங்காய்எண்ணெய்தேவைப்படும். பொதுவாக ஒரு Container, 18.4 Mt வேஜின் தேங்காய் எண்ணெய் கொள்ளக்கூடியது. ஆகையால் வேஜின் தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கு ஏறத்தாழ 5.5 இலட்சம் தேங்காய்கள் ஒரு மாதத்துக்குத் தேவைப்படும். இந்த 5.5 லட்சம் தேங்காய்கள் உற்பத்தி செய்ய எம்மால் முடியுமா என்பதையும் சிந்திக்க வேண்டும். இவ்வளவு தேங்காய்களை நாம் வேஜின் தேங்காய் எண்ணெய் உற்பத்திக்குப் பாவித்தால் எமது உள்ளூர் நுகர்வுக்குத் தேங்காய்கள் போதுமா?

ஒரு வருடத்தில் எமது நாட்டின் தேங்காய் உற்பத்தி ஏறத்தாழ 2900 மில்லியனாகும். இதில் ஏறத்தாழ 70 வீதம் உள்ளூர் நுகர்வுக்காக உபயோகிக்கப்படுகின்றது. அதாவது தனிநபர் ஒருவரின் சராசரி நுகர்வு வருடத்துக்கு 196 தேங்காய்களாகும். வடபகுதியின் நிலையும் இதுதான். எமது உணவு முறையில் தேங்காய்ப்பால் கணிசமான இடத்தைப் பெறுகின்றது. இதில் தேங்காய்த் துருவலைக் கைகளினால் பிழிவதால் ஏறத்தாழ 65 வீதமான தான் பால் பெறப்படுகின்றது. இதற்காகப் பொருத்தமான பிளண்டர் (Blander) போன்ற இலகு இயந்திரங்களைப் பாவிப்ப தால் தேங்காய்ப் பாலின் வீண்விரயத்தைத் தவிர்ப்பதன் மூலம் எமது உள்நாட்டு நுகர்வைக் குறைத்து ஏற்றுமதியை அதிகரிக்கலாம்.

கட்டுரையாளர்: பண்ணைத்திட்டமிடல் அதிகாரி தென்னைப்பயிர்ச் செய்கைச் சபை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வர்ணம் தீட்டுவோம் வாங்க.....





ராகவி ராஜ்குமார்,
தரம் -1E
யா/இந்து ஆரம்ப பாடசாலை.

உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமைகளில் இந்தப் பகுதியில் வெளியிடப்படுகின்றன.

# வரலாற்றில் இன்றைய-தினம்

1666 - லண்டனில் ஏற்பட்ட தீயில் 3 நாள்களில் சென் போல்ஸ் மாதா தேவாலயம் உட்பட 10,000 வரையான கட்டடங்கள் நாசமாகின.

1752 - ஏனைய ஐரோப்பிய நாடுகளில் இரண்டு நூற்றாண்டுகளாக கிரகோரியன் நாள்காட்டி பின்பற்றப்பட்டு வந்த நிலையில் பெரிய பிரித்தானியாவிலும் அது நடைமுறைக்கு வந்தது.

1789 - அமெரிக்காவில் திறைசேரித் திணைக்களம் தொடங்கப்பட்டது.

1806 - சுவிற்சர்லாந்து கோல்டூ நகரில் ஏற்பட்ட மண் சரிவில் 457 பேர் வரை உயிரிழப்பு.

1807 - நெப்போலியனிடம் டென்மார்க் கடலணி சரணடைவதைத் தடுக்கும் முகமாக றோயல் கடற்படையால் கொபன் ஹேகன் மீது தீக்குண்டுகளும், பொஸ்பரசு ஏவுகணைகளும் வீசப்பட்டன.

1859 - சூரியப் புயல் தாக்கத்தால் மின் தந்தி சேவை பாதிப்பு.

1945 - வியட்நாம் ஜனநாயகக் குடியரசாக வியட்நாம் சுதந்திரப் பிரகடனம் செய்தது.

1985 - முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஆலாலசுந்தரம் மற்றும் வி.தர்மலிங்கம் ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

1987 - மே மாதம் செஞ்சதுக்கத்தின் மேலாக விமானத்தில் பறந்த 19 வயதான விமானி மத்தியஸ் றஸ்ற்றிற்கு எதிரான விசாரணை தொடங்கியது.

2003 - ஐ.நா.சபையின் அமர்வில் கலந்து கொள்வதில் ஜனாதிபதிக்கும் அரசுக்குமிடையே முறுகல்.
- புலிகள் மீதான தடை நீக்கம், இடைக்கால நிர்வாகத்தை எதிர்த்து கொழும்பில் பிக்குமார் மாநாடு.
- உகண்டாவில் 39 சிவிலியன்கள் வெட்டிக் கொலை.

2006 - இராணுவத் தளபதி சரத் பொன்சேகா யாழ். போர் முனைப் பகுதிக்கு வருகை.

# ஏழைகளுக்கு உதவுவோம்

ஒரு வறிய குடும்பத்தில் தாய் பார்வதியும், மகன் ராமுவும், தாத்தாவான கந்தப்பனும் வாழ்ந்து வந்தனர். அவர்கள் அல்லும் பகலுமாக மண் பொம்மைகள் செய்து உழைத்து வந்தனர். அந்தக் குடும்பத்தில் ராமுவும், கந்தப்பனும் உழைத்தால்தான் அன்று வீட்டில் அடுப்பெரியும். மண் பொம்மைகளைச் செய்து எடுத்துக் கொண்டு ஆளுக்கொரு பக்கம் கடைகளைத்தேடிச் செல்வார்கள். அவ்வாறு சென்று விற்றுவரும் வருமானத்தில் வாழ்க்கையை ஓட்டிச் சென்றனர். இவ்வாறு கடைகடையாக ஏறி வரும் போது ஓரளவு வருமானத்தையே பெற்றுக்கொள்வார்கள். இதனைக் கொண்டு வந்து தாயிடம் கொடுக்க, அவரும் அதற்கு ஏற்றால்போல் சமைத்து அன்றைய பொழுதைப் போக்குவாள். இவ்வாறுதான் அவர்களது நாள்கள் நகர்ந்தன.

வழமைபோல ராமு தனது மண் பொம்மைகளை எடுத்துக் கொண்டு அருகில் இருக்கும் சந்திக் கடைக்குச் சென்று கொண்டிருக்கையில், அவனைப் படிப்பித்த ஆசிரியர் கார்த்திகேசு எதிர்கொண்டார். "ராமு ஏன் படிப்பை நிறுத்தினாய்? நீ நன்றாகப் படிப்பவனாச்சே" என்று கேட்கையில், அவன் தனது வீட்டுக் கஷ்டத்தால் இவ்வாறு பொம்மை விற்கிறேன் என்பதை எடுத்துக் கூறிவிட்டு, தனது கையில் இருக்கும் பொம்மை ஒன்றை நீட்டி வாங்குமாறு கூறினான். ஆசிரியரின் கண்கள் கலங்கின.



"ராமு நீ நன்கு படிக்கக் கூடிய மாணவன். நீ இந்தத் தொழிலை விட்டு விட்டுப் படிப்பில் அக்கறை காட்டினால் உன் குடும்ப வறுமை ஒருநாள் நிச்சயம் தீரும்" என்று புத்திமதி கூறினார். இதற்கு ராமு "இல்லை சேர்! நான் பாடசாலைக்குச் சென்று விட்டால் எங்கள் குடும்பத்தை யார் பார்ப்பது?" என்று கேட்டான். "நான் உன் படிப்புக்கு உதவி செய்கின்றேன்; உன் குடும்ப வறுமையைப் போக்கவும் ஒரு வழி செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு அந்த ஆசிரியர் சென்று விட்டார்.

இதனைத் தாத்தாவிடம் போய் ராமு கூறினான். "ராமு! நீ தொடர்ந்து படி. நான் நாலுதெரு சென்றாவது பொம்மைகளை விற்றுக் குடும்பத்தைப் பார்க்கி றேன். நீ அந்த ஆசிரியர் கூறியவாறு படி" என்று கூறினார் தாத்தா.

அடுத்தநாள் ராமுவீட்டுக்கு கார்த்திகேசு ஆசிரியர் வந்து ஒரு பெரிய கடை முதலாளி ஒருவரை அறிமுகம் செய்து, "இவர் எனக்குச் சொந்தக்காரர். இவர் உன் தாத்தாவின் கை வண்ணத்தால் ஆன பொம்மைகளை நல்ல விலைக்கு வாங்குவார். நீ உன் படிப்பின் மூலமே உன் குடும்பத்தின் நிரந்தர வறுமையைப் போக்க முடியும்" என்று கூறிப் பாடசாலைக்குச் செல்வதற்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் வாங்கிக் கொடுத்து "உன் படிப்புக்கு நான் பொறுப்பு" எனக்கூறி "நாளை பாடசாலை செல்" என்று சொல்லி விட்டுச் சென்று விட்டார்.

இதனால் ராமுவின் குடும்பத்தவர்கள் மிகுந்த சந்தோசப்பட்டனர். ராமுவின் குடும்ப வறுமை என்றோ ஒருநாள் அவனது படிப்பின் மூலம் தீர்ந்துவிடும் என்பது திண்ணம்.

ராமுவைப் போன்ற மாணவர்களின் கல்வியில் அக்கறைகொண்டு அவர்களுக்கு நாமும் உதவுவோம். அவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றுவோம்.

சரண்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி அலங்காரனே எழுக..! வருக! தமிழர்க்காய் உந்தன் திருவுளம் கனிக..!

காலம் தன்வழி பயணிக்கிறது.நாழிகைகளும் மீள முடியாத பொழுதுகளும் அதனுள்ளாய் மறைந்து ஒழிந்து போகின்றன. தமிழ் மக்களின் வாழ்க்கையும் இன்பங்களிடை புன்னகைத்தும் துன்பங்களுள் உழன்றபடி திரண்டு கனக்கிறது. இன்பங்கள் இனிமை தந்து, மனச்சாந்தமளித்து மறைந்துபோக துன்பங்களின் வலியோ மிகுந்துகொண்டே போகிறது. முரணாக முரண்டுபிடித்துக் கொண்டே யிருக்கிறது.

இந்த நிலையிலே 2009 களின் உயிரழிவுகளும் அது தந்து விட்ட மனச்சிதைவுகளின் முகவரியிடலும் விடுதலையின் வாசலைத் தேடியபடியே இன்னமும் இருக்கின்றன. அழிவு நிலைகளை தூர தேசக் கோடி நின்று வேடிக்கை பார்த்தவர்கள், இலங்கை அரசோடு கூடி நின்று வாழ்வழித்தவர்கள் வாய் மொழி மந்திரமிடல்களையே எப்போதும் உச்சரித்துப் படியிருக்கின்றனர். அவ்வப்போது ஊர்களிடை வந்து உலவி நல்லிணக்கம், சமத்துவம் என்பதான செயல்நிலையற்ற வார்த்தைகளின் செயலியை அமுக்கிவிட்டு அப்பாவி வேசமிட்டு காவி உடை தரித்தவரோடு உறவாடுகின்றனர். உணவு உண்டு இராஜதந்திர உப(அபச்)சாரம் செய்து தங்கள் வழி நகர்கின்றனர்.

உண்மையிலே சொல்லுகின்ற வாய்மொழி வழி இதுவரை தமிழர்களுக்கு எவையும் சாட்டுதல் செய்யப்படவில்லை. மட்டுப்பாடுகளோடு முட்டி மோதித் தங்கள் வன் முகங்களையே இன்முகமாக ஒப்பனையிட்டு வெளிக்காட்டி நிற்கின்றன. தீர்மானங்களும், பிரேரணைகளும் அதற்கான அனுசரணைகளும் தமிழர்களுக்கான கரிசனையாக தெரியவில்லை. மாறாக கால இழுத்தடிப்பின் சுரண்டல்களாகத்தான் தென்படுகின்றன. இந்தச் செயற்பாடுகள் த்மிழர் தரப்பிற்கு வலி மிகுதியின் தூண்டுதலை மீண்டும் மீண்டும் தந்து கொண்டிருக்கும் அம்புகளாகவும் அதிகாரத்தரப்பிற்கு தூண்டுகோலான நெம்புகோலாகவும் தாக்கமுறுகின்றன.தர்க்கமுறுகின்றன். தொடர்தல் என்ற செயன்முறைகளின் வழி தீர்வுகளைத் தீர்க்கமுறச் செய்வதாக தெரியவில்லை...! தமிழர்களுக்கான நியாயங்களை வழங்குவதற்கான மார்க்கங்களை விரைவுறச் செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னிலைப்படுத்தவில்லை...! தனித்து அபிவிருத்தி என்ற மாயைக்குள் அனைத்தையும் அணைத்துவிடும் நிகழ்த்து கலைகள் அரங்கேறுகின்றன்...!

இந்தச் சந்தர்ப்பத்திலே ஐ.நா செயலாளர் நாயகத்தின் இலங்கைப் பயணம் மீண்டுமொருமுறை அரங்கேற்றம் கண்டிருக்கிறது. இலங்கை அரசதரப்பின் அழைப்பினுள் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றது.அரசதரப்பனருடன் கலந்துரையாடல், உறவாடல், தமிழர் தரப்பினருடன் ஒரு பேச்சாற்றல்,வலி வடக்கு ஊர்வலம் என்பதாக முடிவுறத்தப்பட்டுள்ளது.ஆத்மார்த்தமான தமிழர் மீதான கரிசனை என்பது இந்த விஜயங்களில் வெளிப்படப் போவதில்லை. பார்வையிடல்களும், வார்த்தைகளின் வீண் விரயோக சம்பாசனைகளும் எப்போதும் போல கருத்துறப் போவதில்லை.கருத்துருவம் பெறப் போவதுமில்லை.

ஆக, தற்போது இலங்கை வந்துள்ள பான் கீ மூன் தமிழர்களின் உண்மை நிலைமைகளை உள்ளார்ந்து கண்டு கொள்ள வேண்டும்..! கிரகித்துக் கொள்ள வேண்டும்..! நீதி விசாரணைகளையும், தீர்வுகளையும் விரைந்து செயற்படுத்த செயல்முனைப்போடு முன்னகர வேண்டும்..! கால மாற்றங்கள் எப்போதும் ஒருமுகமாக இருப்பதில்லை என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும்..! வலிகளின் தேக்கம் என்பது விரக்தியுற்று புரட்சியின் வழி மிரட்சியுறலாம் என்பது அனுபவம் தந்த பாடங்கள் என்பதை தன் மொழியூடு அறிந்து செற்பட,எழுந்து நடக்க முற்பட வேண்டும்..! காத்திருப்பினுள் தமிழர்களை சாய்ந்திருக்கப் பணித்து தன்வழி நகர்ந்திடக்கூடாது..!

தமிழர்களின் காவல் தெய்வம் நல்லைக் கந்தனவன் அலங்கார உலவல் நிறைவடைந்த தருணங்களில் இந்த ஊர்வலங்கள் தென்பட்டிருக்கின்றன. மக்களின் ஊர் கூடி மகிழ்ந்த சூழல் வீடுகளுக்குள் மீண்டும் முடக்க முறுகிறது. அடியவர் தொல்லை துயர் நீக்கும் கந்தனவன் தன் ஞான மொழி கொண்டு பான் கீ மூனிடம் நல் உபதேசங்களை முனக வேண்டும்..! தமிழருக்காய் மனமிரங்கி இயங்கு நிலை பெற வழி வகை செய்ய வேண்டும்..! வேண்டுகிறோம்..! அலங்காரனே எழுக..! தமிழர்க்காய் உந்தன் திருவுளம் கனிக..!




# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவிக்கு இன்று கொடியேற்றம்

இராசையா ஸ்ரீதரன்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதிபராசக்தியான உமையவள் யாழ்ப்பாணத்திலே தம்மை வழிபடும் அடியார்களின் துன்ப துயரங்களை நீக்கும் பொருட்டு தெல்லிப்பழை நகரினிலே ஸ்ரீ துர்க்கா தேவி அம்பிகையாக எழுந்தருளி அருள்பாலிக்கின்றாள்.

இந்த அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியான ஸ்ரீ துர்க்காதேவி அம்பிகைக்கு இன்று கொடியேற்றம். வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் தாயான துர்க்கை அம்பாளின் துர்முகி ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவம் இன்று முற்பகல் பத்து மணிக்கு துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகின்றது.

அகில உலகத்துக்கும் அன்னையாக விளங்குகின்ற இந்த ஆதிபராசக்தியான ஸ்ரீ துர்க்கா தேவி தெல்லிப்பழை என்கின்ற புனித புண்ணிய நகரினிலே அடியார்க்கருளும் அம்பிகையாக கோயில் கொண்டு எழுந்தருளி அருளாட்சி புரிகின்றாள். மறைந்த தலைவரான அமரர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வழிநடத்தலிலே சிறப்புடன் திகழ்ந்த இந்த அருள் மிகு ஆலயம் இப்பொழுது ஆன்மிகப் பேச்சாளர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனுடைய மேற்பார்வையிலே நல்லமுறையிலே பரிபாலனஞ் செய்யப்பட்டு வருகிறது.

கோலாகலமான முறையிலே இன்று முதல் ஆரம்பமாகின்ற திவ்ய மகோற்சவத் திருவிழா தொடர்ந்து பன்னிரண்டு நாள்கள் நடைபெற்று ஆவணி மாதத்து திருவோண நட்சத்திர நாளிலே இந்த ஆலய முன்றிலில் அமையப் பெற்ற துர்க்காபுஷ்கரணி தீர்த்தத் தடாகத்திலே நிகழும் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுக்கு வரும்.

இந்தக் கோயிலிலே நடைபெறுகின்ற ஒவ்வொரு திருவிழாவும் அம்பிகையின் அலங்கார பவனியாக அழகான சோடனைகளுடன் மலர் மாலைகளாலும் ஆபரணங்களாலும் சாத்துப்படியாகி விசேட மங்கல வாத்தியத்துடனே மங்கலகரமான கோலாகலத்துடன் நிகழ்வது வழக்கம்.

அம்பிகையின் ஆனந்த அற்புத கோலாகலமான அருட்பொலிவுடன் கூடிய திவ்ய திருவிழாக்களைக் கண்டு தரிசிப்பதற்காக யாழ். குடாநாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் அடியார் பெருமக்கள் இந்தத் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்துக்கு வருகை தருவார்கள்.

துர்க்காதேவியின் திவ்ய பேரருட்கடாட்சம் கிட்டுவதற்காக இந்த ஆலயத்துக்கு பல நேர்த்திகள் வைக்கப்படுவதுண்டு. முக்கியமாகத் திருமணம் கைகூடாத இளங்கன்னிப் பெண்கள் தமக்கு விரைவில் விவாகமாக வேண்டும் என்று துர்க்காதேவியை எண்ணி விரதம் நோற்பர். அதிக எண்ணிக்கையில் ஆலயத்துக்கு வரும் பெண் அடியார்கள் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையிலும் தேசிக்காய் மூடியிட்டு நெய் விளக்கேற்றி வழிபாடியற்றுவர்.

இந்தத் தெல்லிப்பழை நகரிலே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் துர்க்காதேவியானவள் "வேண்டுவர் வேண்டுவதை ஈவான் கண்டாய்" என்ற நல்வாக்குப் படி அடியார் கேட்பனவற்றைக் கொடுத்தருளுகின்ற அன்னையாகத் திருவருள் புரிகின்ற அன்புத்தாயின் கருணைத்திறம் சொல்லி முடியாது.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச்சென்னியும்தந்து புனிதப்பிறவியாகிய மனிதப்பிறவியிலே தன்னை நினைந்து வழிபாடியற்றி ஏற்றித் துதிக்கத் திருவருள் புரிபவளும் இந்தத் துர்க்காதேவியேதான்.

தம்மை நினைத்து வழிபாடியற்றும் அடியார்களின் துன்ப துயரங்களை நீக்கியருளும் பொருட்டுத் தெல்லி நகரிலே வீற்றிருக்கும் அன்னை ஸ்ரீ துர்க்காதேவி செவ்வாய்தோசம், நாகதோசம் என்பனவற்றைச் செயலிழக்கச் செய்து திருமணத்தைக் கைகூட்டி வைப்பதால் இந்த மகோற்சவ நாள்களில் அடியார் கூட்டம் அலைமோதும்.

இன்று தொடங்குகின்ற வருடாந்த மகோற்சவத்தில் எதிர்வரும் பதினோராம் நாள் அதாவது ஆவணி 27ஆம் நாள் (12.09.2016) திங்கட்கிழமை பகல் நடைபெறுகின்ற தேர்த்திருவிழா மிக விசேடமானது. அழகான அற்புத வடிவிலமைந்த சித்திரத் தேரிலே அன்னையவள் மங்கல வாத்தியம் முழங்க அடியவர்கள் புடை சூழ திருவீதி வலம் வருகின்ற காட்சி நம் கண்களுக்குப் பெருவிருந்தாகும். பெண் அடியவர்கள் ஒரு புறம் வடம் பிடித்திழுக்க ஆண்கள் அன்புக் கரம் நீட்டி மற்றவடத்தைப்பிடித்து இழுக்க அம்பிகையின் தேரானது ஆடிஅசைந்த வண்ணம் வீதி வலம் வரும் காட்சி அருள்மயமானது.

இந்தத் துர்க்கை அம்பாள் தேரிலே எறி ஆரோகணித்து வருகின்ற காட்சி பக்தி பூர்வமானது. அந்த அழகான சித்திரத்தேர் ஆடிஅசைந்த வண்ணம் அடியார் வடம் பிடித்திழுக்க திருவீதி வலம் வருகின்ற அற்புதமான ஆனந்தம் தருகின்ற ஒரு காட்சி புண்ணியமான புனிதம் நிறைந்த அருட்காட்சியாகும்.

யாழ்ப்பாணத்திலே தெல்லிநகர்த்தேவியாக எழுந்தருளி அருள் புரிகின்ற அன்னை ஸ்ரீ துர்க்கா தேவி அருளே வடிவானவளாக இருப்பதால் எலுமிச்சம்பழ மாலை கட்டிப் போட்டு பக்தர்கள் தங்களது வாழ்வில் சுபிட்சம் தோன்றவும் மங்கலம் நிறையவும் வேண்டுதல் செய்வர். எலுமிச்சம் பழத்தை "அரச கனி" என்று கூறுவார்கள். இதன் மருத்துவப் பயன் அளவிடமுடியாதன. ஆகவே எலுமிச்சம் பழத்தால் மாலைகட்டி அம்பிகையை வந்தித்துச் சிந்தித்துத் தூமலர் தூவித் தொழுதால் எம்முடைய வாழ்க்கை சிறப்புமிகும்.

அது ஒரு புறமிருக்க துர்க்காதேவி ஆலயத்தில் பல்வேறு விதமான தொண்டுகள் இடம்பெறுகின்றன. "மகளிர் இல்லம்" என்று ஓர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டு ஆதரவற்ற அன்புள்ளங்களை ஆதரவு காட்டி அன்புகாட்டி ஆவன செய்கின்ற ஒரு பெருந்தொண்டு இங்கே நடைபெறுகின்றது. அத்துடன் "அருள் ஒளி" என்கின்ற ஓர் ஆன்மிக சஞ்சிகையும் வெளியிடப் பெறுகின்றது. ஆன்மிகஞ்சார்ந்த ஆழ்ந்த கருத்து மிக்க கட்டுரைகளுடனே வெளிவருகின்ற இந்த நூல் மாணவ உலகுக்கு மிகவும் பயன்தரத்தக்கதாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அம்பிகையின் அருள்மயமான தோற்றம் அடியார் குழாத்துக்கு உண்மையான பக்தியையும் நேய உணர்வையும் தருவதோடு அவர்களது உள்ளங்களில் இனம் புரியாத ஆனந்தம் நிறைந்த மகிழ்ச்சியையும் உண்டுபண்ணுகின்றது.

ஆதலால் இன்று ஆரம்பமாகின்ற வருடாந்த உற்சவத்தில் சைவ அடியார்கள் பலரும் கலந்து கொண்டு ஆன்ம ஈடேற்றம் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர். அத்துடன் அம்பிகையின் திருவருள் பரந்து, விரிந்து, சுரந்து நல்வாழ்வைத்தர வேண்டுமென்று திருவடி பணிந்து போற்றிப் பரவி நிற்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"பக்கத்து வீட்டு அக்கா சார்ஜ் போட்டா மொபைல் ரொம்ப சூடாவுதெண்டு என்னட்ட சொன்னாங்க..." பற்றியைக் கழட்டி வச்சிட்டு சார்ஜ் போடுங்க; சூடாகாதெண்டு சொன்னேன்... ரொம்ப நன்றிடா என்று சொல்லிட்டுப் போய்ட்டாங்க...



"ஏன்டி... நம்ம பொண்ணைத் தீர விசாரிக்காமல் ஒரு முட்டாப் பயலுக்குக் கட்டிக் கொடுத்துட்டோமே..."
"எங்கப்பா கூட இப்படித்தாங்க... நமக்கு கல்யாணம் ஆன பிறகு ரொம்ப நாள் புலம்பிக்கிட்டிருந்தாரு..."



"யம்மோவ்... சோத்தில காரமே இல் லம்மா..." "அடேய்... உங்க அப்பா மாதிரியே வருவ போல... அது தயிர் சாதம்டா."



"அன்ரிக்கு டாட்டா சொல்லிட்டு ஒரு முத்தம் கொடு. அவங்க ஊருக்குப் போகறாம்." "மாட்டேன் அவங்க அடிப்பாங்க." "ஏன்டா அப்பிடி சொல் லுறே? நேற்று அப்பா அன்ரிக்கு முத்தம் கொடுக்கிறப்போ அம்மாவை அடிச்சாங்களே..."



# விஜய் படத்துடன் மோதும் சிம்பு படம்

விஜய்க்கு இருக்கும் செல்வாக்குப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அவர் நடித்த படம் வெளியாகும்போது நம் படம் வெளியானால் காணாமல் போய் விடுவோம் என்று பல முன்னணி நாயகர்கள் பயந்து ஒதுங்குவது வாடிக்கை. இந்தச் சூழலில் நடிகர் சிம்பு, விஜய் யுடன் மோதத் தயாராகிவிட்டார் எனத் தகவல் வெளியாகியிருக்கிறது.

கலைப்புலி தாணு தயாரித்த 'தெறி' படத்தைத் தொடர்ந்து தற்போது பரதன் இயக்கத்தில் தனது 60ஆவது படத்தில் நடித்து வருகிறார் விஜய். இந்தப் படத்தில் விஜய்க்கு ஜோடியாக முதல் முறையாக கீர்த்தி சுரேஷ் நடிக்கிறார். திருநெல்வேலியை கதைக்களமாகக் கொண்டு உருவாகி வரும் இந்தப் படத்தை 2017 பொங்கல் அன்று வெளியிடத் திட்டமிட்டுள்ளனர்.

இந்த நிலையில், அதே பொங்கல் தினத்தில் தான் நடித்து வரும் 'அன்பானவன் அசராதவன் அடங்காதவன்' படத்தை வெளியிட சிம்பு திட்டமிட்டிருக்கிறார் எனக் கூறப்படுகிறது.. 'த்ரிஷா இல்லைனா நயன்தாரா' படத்தை இயக்கிய ஆதிக் ரவிச் சந்திரன் இயக்குகிறார்.

மனைவி: "வேலைக்காரி உங்க மேலே விழுற மாதிரி உரசிட்டுப் போறா ... நீங்க பேசாம சிலை மாதிரி நிக்கிறீங்களே..."
கணவன்: "திரும்பி வரட்டும்... பதிலுக்கு நானும் உரசிக் காட்டுறேன் பாரு."

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 6 | 3 |
| 8 | | | 5 | | | 1 | | 9 |
| | 9 | | 6 | | 4 | 7 | | |
| 9 | | | | | 6 | | 4 | |
| | | 7 | 4 | | 2 | 9 | | |
| | 2 | | 1 | | | | | 6 |
| | | 9 | 3 | | 5 | | 7 | |
| 1 | | 4 | | | 8 | | | 2 |
| 7 | 3 | | | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 5 | 1 | 3 | 9 | 8 | 2 | 7 | 6 |
| 7 | 2 | 8 | 4 | 1 | 6 | 3 | 5 | 9 |
| 3 | 9 | 6 | 7 | 2 | 5 | 8 | 1 | 4 |
| 1 | 8 | 2 | 9 | 5 | 3 | 6 | 4 | 7 |
| 9 | 7 | 5 | 8 | 6 | 4 | 1 | 3 | 2 |
| 6 | 3 | 4 | 1 | 7 | 2 | 9 | 8 | 5 |
| 8 | 1 | 7 | 6 | 4 | 9 | 5 | 2 | 3 |
| 2 | 4 | 9 | 5 | 3 | 1 | 7 | 6 | 8 |
| 5 | 6 | 3 | 2 | 8 | 7 | 4 | 9 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரை யான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் [illegible] வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் [illegible] நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் சிறப்பாக இருக்கும். உடல்நிலை திருப்தியளிக்கும். பெண்கள், ஆடம்பர நோக்கில் செயற்படுவர்.

**இடபம்:** பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். குடும்பத்தின் முக்கிய தேவையை நிறைவேற்றுவீர்கள். பணியாளர்கள், பாராட்டும் பரிசும் கிடைக்கப் பெறுவர்.

**மிதுனம்:** பொறுப்புடன் செயற்படுவீர்கள். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். நீண்டநாள் பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர்.

**கடகம்:** உங்கள் சிரமங்களைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள, குறுக்கீடுகளை சரிசெய்ய முயல்வீர்கள். இலாபம் ஓரளவே இருக்கும். பெண்கள், செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம்.

**சிங்கம்:** கடந்த கால உழைப்பின் பலனைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், பணிச்சுமை ஏற்பட்டாலும் வருமானம் குறையாது. நண்பரின் உதவி கிடைக்கும். வாகனப் பயணத்தில், மித வேகம் பின்பற்றவும்.

**கன்னி:** பேச்சில், நேர்மை எண்ணம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் எதிர்பார்த்தபடி கிடைக்கும். இயன்ற அளவில் தான, தர்மம் செய்வீர்கள். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**துலாம்:** நற்செயலில் ஈடுபட்டு நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். உடல் நலனில் அக்கறை தேவை. வெளியூர்ப் பயணத் திட்டத்தில் திடீர் மாறுதல் உண்டாகும்.

**விருச்சிகம்:** அன்றாடச் செயல்களில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும்.

**தனுசு:** உங்களின் நல்ல செயல்களை சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் ஆடம்பர எண்ணத்தைத் தவிர்க்கவும்.

**மகரம்:** திகைப்பு தந்த பணியையும் எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**கும்பம்:** சமூகத்தில் மதிப்பு உயரும். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்தியளிக்கும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள். நண்பர்களுடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**மீனம்:** சோம்பலைத் தவிர்ப்பது அவசியம். கூடுதல் உழைப்பு, தொழில், வியாபார வளர்ச்சிக்கு உதவும். இலாபம் சுமாராக இருக்கும். வாகனப் பயணத்தில் கவனம் தேவை. மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.




பழச்சாறு தயாரிக்கும் கருவி அறிமுகமாகியுள்ளது. பழங்களை கருவியினுள் இடுவதன் மூலம் பழச்சாறைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்தக் கருவியானது பழச்சாறு தயாரிப்பதற்காகவே பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது ஆயிரத்து 400 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.

## நாளை ஆவணி-18

சனிக்கிழமை -03.09.2016
திதி: துதியை பி.ப.04.52
நட்சத்திரம்: உத்தரம் பி.ப.03.12
ராகுகாலம்: 09.05-10.35 வரை
சுபநேரம்: 03.05-04.35 வரை



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | [illegible] | [illegible] | [illegible] | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 500 | 700 | 800 | 700 | 600 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 800 | – | – |
| பாரை | 550 | 500 | 400 | 800 | 600 | 600 | 450 |
| சுறா | 500 | 800 | 500 | 800 | 1000 | 600 | – |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 500 | 400 | 400 |
| விளை | 650 | 500 | 300 | 600 | 500 | 600 | 450 |
| முரல் | 300 | 400 | 300 | 500 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 350 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 600 | 400 | – |
| ஓரா | 400 | 400 | 300 | – | 400 | 200 | 400 |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 200 | 200 | – |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 300 | – | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 300 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 400 | 200 | 170 |
| மதனம் | 150 | 250 | – | 400 | 300 | – | 250 |
| கொய் | 100 | 150 | 50 | 70 | 80 | 100 | – |
| பாலை | 400 | 250 | 300 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 200 | – | 400 | 300 | 400 | – |




# பயத்தம் பருப்பு பிட்டு

**தேவையான பொருள்கள்**
பயத்தம்பருப்பு - ஒரு கப்
நெய் - 1/4 கப்
முந்திரிப்பருப்பு - 10
தேங்காய்த்துருவல் - 2 கை
சீனி - 3/4 கப்
ஏலப்பொடி – தேவையான அளவு

**செய்முறை**
பயத்தம்பருப்பை அரை மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து பின் தண்ணீரை வடித்து, சொரசொரப்பாக ஒரு சிட்டிகை உப்புச் சேர்த்து அரைக்கவும்.
ஒரு நெய் தடவிய தட்டில் அதை பரவலாக பரத்தி 10 நிமிடங்களுக்கு ஆவியில் வேக வைக்கவும்.
ஆறிய பிறகு நன்கு உதிர்த்துக் கொள்ளவும். சீனியை நன்றாகக் காய்ச்சவும்.
ஒரு சொட்டு சீனிப்பாகைத் தண்ணீரில் போட்டால் அதை மெழுகு போல உருட்டும் பதம் இருக்கவேண்டும். அதுவே சரியான பதம்.
ஒரு சட்டியில் நெய்யை ஊற்றி சூடானதும் முந்திரிப் பருப்புகளைப் போட்டு பொன்னிறத்துக்கு வறுத்தெடுக்கவும்.
பிறகு வெந்த பயத்தம்பருப்பைச் சேர்த்து அது நன்கு உதிருதிராக வரும் வரைகுறைந்த தீயில்அதைவறுக்கவும். பிறகு தேங்காய்த்துருவலைச் சேர்த்து மறுபடியும் சிறிது நேரம் கிளறவும். ஏலப்பொடியையும், பாகையும் சேர்த்து நன்கு கிளறி இறக்கவும். பயத்தம் பிட்டுத் தயார்.





# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 40 | 60 | 40 | 30 | 30 | 30 |
| கத்தரி | 40 | 60 | 50 | 60 | 40–50 | 30 | 90 | 25 |
| கரட் | 80 | 120 | 120–140 | 120 | 100 | 120 | 110 | 90 |
| மரவள்ளி | 80 | 90 | 100 | 80 | 70–80 | 60 | 80 | 50 |
| பயிற்றை | 80 | 50 | 100 | 80 | 50 | 60 | 100 | 60 |
| பாகல் | 100 | 80 | 120 | 100 | 100 | 70 | 150 | 60 |
| கருணைக்கிழங்கு | 100 | 120 | 140 | 160 | 100 | 130 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 90 | 120 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 70 | 80 | 60 | 80 | 70 | 100 | 90 | 70 |
| பூசணி | 40 | 35 | 40 | 40 | 30 | 30 | 70 | 40 |
| தக்காளி | 40 | 40 | 40 | 40 | 40–50 | 50 | 120 | 40 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 100 | 80 | 80 | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 20 | 30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 35 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 80 | 80 | 100 | 70–80 | 100 | 200 | 80 |
| புடோல் | 40 | 35 | 30 | 50 | 40–60 | 20 | 70 | 30 |
| கோவா | 100 | 100 | 80 | 120 | 100 | 120 | 90 | 60 |
| வெண்டி | 40 | 60 | 60 | 60 | 40 | 80 | 70 | 30 |
| போஞ்சி | 120 | 160 | 180 | 180 | 180 | 200 | 130 | 180 |
| லீக்ஸ் | 100 | 110 | 110 | 120 | 100 | 140 | 90 | 90 |
| தேங்காய் | 40 | 25 | 40 | 35 | 25–30 | 30 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 100 | 200 | 240 | 180 | 220 | 300 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 120 | 100 | 120 | 140 | 100 | 120 | 200 | 60 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 60 | 120 | 80 | 70–80 | 80 | 80 | 80 |

# காலை எழுந்தவுடன் வெறும் வயிற்றில் சாப்பிடக்கூடாத உணவுப் பொருள்கள்

☆ சோடாவில் கார்போனேட் அமிலம் அதிகம் இருப்பதால், இவற்றை வெறும் வயிற்றில் குடித்தால், அவை வயிற்றில் உள்ள அமிலத்துடன் கலந்து, அதனால் குமட்டல் மற்றும் அசௌகரியத்தை ஏற்படுத்தும்.

☆ தக்காளியை எப்போதுமே வெறும் வயிற்றில் சாப்பிடக்கூடாது. இதற்கு அதில் உள்ள அமிலம்தான் முக்கிய காரணம். இந்த அமிலமானது இரைப்பையில் சுரக்கும் அமிலத்துடன் இணைந்து, அதனால் கரைய முடியாத ஜெல்லை உருவாக்கி, அதனால் வயிற்றில் கற்களைக் கூட உருவாக்கும்.


☆ எப்போதுமே மாத்திரைகளை வெறும் வயிற்றில் எடுக்கக்கூடாது. ஏனெனில், வெறும் வயிற்றில் எடுத்தால், அவை வயிற்றில் உள்ள படலத்தை அரிப்பதோடு, வயிற்று அமிலத்துடன் கலந்து, உடலில் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கிவிடும்.

☆ பொதுவாக ஆல்கஹோல் ஆரோக்கியமற்றது. அதிலும் அதனை காலையில் வெறும் வயிற்றில் குடித்தால், அதில் உள்ள சேர்மங்கள், வயிற்றுப் படலத்தில் எரிச்சலை ஏற்படுத்தும். இப்படியே நீடித்தால், வயிற்றுப்படலம் அரிக்கப் பட்டு, மிகுந்த அபாயத்திற்கு உள்ளாகக் கூடும்.

☆ தேநீர் மிகவும் ஆபத்தான ஒரு பானம். இதனை காலையில் வெறும் வயிற்றில் குடித்தால், அதில் உள்ள காப்ஃபைன் தீவிரமான பிரச்சினைக்கு உள்ளாக்கி விடும். எனவே, ஒரு டம்ளர் தண்ணீர் குடித்த பின் தேநீர் குடிக்கும் பழக்கத்தைக் கொள்ளுங்கள்.

☆ தேநீரைப் போலவே ரீயிலும், காப்ஃபைன் உள்ளதால், இதனை வெறும் வயிற்றில் குடிக்காதீர்கள். சொல்லப்போனால் ரீயில் அமிலம் அதிகமாக உள்ளதால், இதனைக் குடித்த பின் இது வயிற்றுப் படலத்தைப் பாதிக்கும்.

☆ தயிரில் என்ன தான் நல்ல பக்றீரியா இருந்தாலும், இதனை காலையில் வெறும் வயிற்றில் எடுப்பது சிறந்தது அல்ல. இதற்கு அதில் உள்ள நல்ல பக்றீரியாவானது வயிற்றுப் படலத்துடன் சேர்த்து வினை புரிந்து, வயிற்றுப் பொருமலை ஏற்படுத்தி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசிய ஒற்றுமையை ஊக்குவிக்கும் மஞ்சி

சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட்டின் சிறப்புநிலை வர்த்தக நாமமாக விளங்கும் மஞ்சி, அண்மையில் பதுளையில் இடம்பெற்ற மஞ்சியுடன் விளையாட்டுக் கொண்டாட்டம் என்ற விளையாட்டு நிகழ்வுக்கு ஆதரவளித்திருந்தது. இந்த நிகழ்வானது இந்த மாவட்டத்திலுள்ள சிறுவர்கள், உள்ளூரில் வாழும் அனைத்துத் தரப்பு மக்கள் மத்தியிலும் ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றை ஏற்படுத்தும் நோக்குடன் ஒழுங்குசெய்யப்பட்டது.

இந்த நிகழ்வானது ஹாலிஎல த டிலான் பெரேரா அறக்கட்டளையினால் முன்னெடுக்கப்பட்டது. ஏறத்தாழ 3000 பேர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர் எனக் கூறப்படுகின்றது.

5 நாள்கள் வரை இடம்பெற்ற இந்த நிகழ்வில் உள்ளூர்ப் பாடசாலை மாணவர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் ஒருங்கிணைந்து, இந்தப் போட்டி நிகழ்ச்சி வெற்றிகரமாக நடைபெறுவதை உறுதிப்படுத்தினர்.

யூனிட்டி விளையாட்டு நிகழ்வு, நாட்டில் தற்போது முன்னெடுக்கப்படும் குறித்த ஒரு பிரதேசத்திலுள்ள அனைத்து சமூகங்களையும், இனங்களையும் விளையாட்டின் ஊடாக ஒன்றிணைக்கும் முனைப்புகளின் ஓர் அங்கமாக நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுக்கள், தடகள நிகழ்வுகள், கால்பந்துப் போட்டிகள் மற்றும் பல்வகை விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டதுடன், புதுப்பிக்கப்பட்ட தோழமையுணர்வை சிறுவர்கள் மற்றும் வளர்ந்தோரிடையே வலுப்படுத்தும் வகையில் பல்வேறு பட்டறைகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வு குறித்துக் கருத்துத் தெரிவித்த பெருந்தெருக்கள் இராஜாங்க அமைச்சரும், டிலான் பெரேரா அறக்கட்டளையின் தலைவருமான டிலான் பெரேரா, இலங்கையின் சிறப்பு வர்த்தக நாமமாகத் திகழும் மஞ்சி, “மஞ்சியுடன் விளையாட்டுக் கொண்டாட்டம்” நிகழ்வுக்கான அனுசரணையாளராக இணைந்து, குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தை கொண்டுள்ள இந்த தேசிய முனைப்புக்கு ஆதரவளிப்பது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது. மஞ்சியுடன் விளையாட்டுக் கொண்டாட்டம் ஆனது பன்முக இன மத வேறுபாட்டினை கொண்டுள்ள குடும்பங்கள் வசிக்கும் பதுளை பிராந்தியத்தில் ஒற்றுமை, இணக்கப்பாடு மற்றும் சகவாழ்வு ஆகியவற்றினை மேம்படுத்தும் நோக்குடன் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

ஏறத்தாழ 3000 பாடசாலை மாணவர்கள் மற்றும் உள்ளூர் சமூகத்தைச் சேர்ந்த பெற்றோர் கலந்து கொண்டுள்ள இந்த நிகழ்வு மிகவெற்றி பெற்றுள்ளமை குறித்து மிகுந்த பெருமிதம் அடைகின்றோம். மஞ்சி நிறுவனம் இந்த நிகழ்வுக்காக அளித்த ஆதரவு மற்றும் முதலீட்டுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், நாடு பூராகவும் முன்னெடுக்கக்கூடிய வகையில் ஸ்திரமான நீண்டகால முனைப்பு ஒன்றை மேம்படுத்தவும் நாம் எண்ணியுள்ளோம் எனத் தெரிவித்தார். (து)

வணிகம்

## செலான் வங்கிக்கு 1,755 மில். இலாபம்

விரைவாக மாற்றமடையும் மற்றும் சவால்மிக்க வியாபாரச் சூழலுக்கு மத்தியிலும் செலான் வங்கியானது, 2016 ஜுன் 30 ஆம் திகதி முடிவடைந்த ஆறு மாதங்களில் வரிக்குப் பின்னரான இலாபமாக ரூபா 1,755 மில்லியனைப் பெற்றுக் கொண்டதன் மூலம் ஒரு உறுதிமிக்க அரையாண்டு நிதிச் செயலாற்றுகையினை வெளிப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2015 இதே காலப்பகுதியில் ரூபா 1,740 மில்லியனை வரிக்குப் பின்னரான இலாபமாகப் பெற்றிருந்த நிலையிலேயே இவ்வதிகரிப்பினைச் செலான் வங்கி பதிவு செய்திருக்கின்றது என்று கூறப்பட்டுள்ளது.

வட்டி வீதங்களின் அதிகரிப்பின் காரணமாக உருவான ‘சந்தை விலைச்சீராக்க நட்டங்களின் தாக்கங்களுக்கு மத்தியிலும், மைய வங்கியியல் தொழிற்பாடுகளில் ஏற்பட்ட ஆரோக்கியமான வளர்ச்சியே மேற்படி சிறப்பான செயலாற்றலுக்கு வழிவகுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

2016 ஜுன் 30 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆறு மாதங்களுக்கான தேறிய வட்டி வருமானம் ரூபா 5,835 மில்லியனில் இருந்து ரூபா 6,147 மில்லியனாக, 5.34வீதம் அதிகரித்தது.


முற்பணங்களில் ஏற்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட வளர்ச்சி மற்றும் செயற்றிறன் வாய்ந்த விலையிடல் மூலோபாயம் ஆகியவற்றின் பயனாக இந்த வளர்ச்சி பெறப்பட்டது. கட்டணத்தை அடிப்படையாகக் கொண்ட வருமானத்தைப் பலப்படுத்துவது தொடர்பில் செலான் வங்கி தொடர்ந்தும் கூடிய கவனம் செலுத்திச் செயற்படுவதன் விளைவாக, ரூபா 1,191 மில்லியனாகக் காணப்பட்ட இவ்வகை வருமானம் 2016 இன் முதலாம் அரையாண்டில் ரூபா 1,432 மில்லியனாக 20.21 வீத அதிகரிப்பை வெளிப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

2016இன் முதலாம் அரையாண்டில் செலான் வங்கி 7.57வீதத் தேறிய கடன் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ள அதேநேரத்தில், ரூபா 193 பில்லியனாகக் காணப்பட்ட தேறிய முற்பணங்கள் ரூபா 208 பில்லியனாக அதிகரித்திருக்கின்றது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (து)

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச் சந்தை தகவல்கள்

| | | |
|---|---|---|
| | 1/9/2016 | |
| | www.cse.lk | |
| ASPI ▲ 12.08 | 6,540.29 | 6,528.21 |
| S&P SL20 ▲ 12.51 | 3,597.65 | 3,585.14 |
| வியாபாரப்புரள்வு | 588,098,112 | 1,098,199,424 |
| உள்நாடு:- கொள்வனவு | 419,401,280 | 570,394,624 |
| விற்பனை | 498,265,248 | 836,747,840 |
| வெளிநாடு:- கொள்வனவு | 168,696,832 | 527,804,832 |
| விற்பனை | 89,832,856 | 261,451,584 |



147-2/3, K.K.S Road Jaffna - 212221455

| அதிகூடிய பங்குப்புரள்வு | | | | |
|---|---|---|---|---|
| சிலோன் டொபாக்கோ | CTC.N | 880 | 72,105 | 63,452,631 |
| சிலோன் கிரேன் எலெவேட்டர்ஸ் | GRAN.N | 95.1 | 649,174 | 61,617,946 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 153.6 | 342,881 | 52,792,066 |
| ரெக்ஸ்யேட் பேர்வ்ஸ் | TJL.N | 41.2 | 1,128,395 | 45,981,928 |
| அக்ஸஸ் இஞ்சினியரிங் | AEL.N | 27 | 1,406,172 | 37,866,532 |
| டிஸ்டிலரீஸ் | DIST.N | 267 | 122,067 | 32,593,530 |
| களனி கேபிள்ஸ் | KCAB.N | 140 | 131,460 | 18,401,247 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 227.90 | 77,478 | 17,655,170 |
| த்ரீ ஏக்கர் பார்ம் | TAFL.N | 147 | 116,387 | 17,048,532 |
| ஸ்விஸ்ஸ்டெக் | PARQ.N | 72.5 | 215,547 | 15,408,585 |

அறிவித்தல்கள் - கருத்தரங்கு
எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 3.00 – 4.00 (02.09.2016)
அனுமதி இலவசம்
பங்குப்பரிவர்த்தனை-யாழ்கிளை கேட்போர்கூடம்.
147-2/3இ கே கே எஸ் வீதி. (சத்திரச்சந்தி)

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| [illegible] | 295 |
| [illegible] | 210 |
| விலை உழைப்பு | 13.5 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

## நுட்பம்



## மரபணுக்களை மாற்றும் முயற்சியில் விஞ்ஞானிகள்

வழமையாக பெற்றோர்களிலிருந்து சில இயல்புகள் மரபணுக் (டிஎன்ஏ) குறியீட்டின் ஊடாக பிள்ளைகளுக்கு கடத்தப்படும்.

அவ்வாறு கடத்தப்படும் இயல்புகளில் மாற்றம் செய்வதற்கான முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கான ஆராய்ச்சிகள் பக்டீரியா ஒன்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவற்றில் காணப்படும் 62,214 வரையான பரம்பரை அலகுகளை மாற்றீடு செய்வதில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ள அதேவேளை, ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளில் வெற்றியும் கிட்டியுள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

இந்த முயற்சி முழுமையாக வெற்றியளிக்கும் பட்சத்தில் மனிதர்களின் இயல்புகளை இலகுவாக மாற்றியமைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.



## எல்ஜியின் புதிய படைப்பு

சிறந்த தொழில்நுட்பத்தைக் கொண்ட தொடுதிரைக் கைபேசிகளை அறிமுகம் செய்யும் நிறுவனங்களுள் ஒன்றான எல்ஜி நிறுவனம், தனது அடுத்த அங்கமான எல்ஜி வீ 20 எனும் கைபேசியை அறிமுகம் செய்யவுள்ளது.

இந்தக் கைபேசி 5.5 அங்குல அளவு, 2560 X 1440 பிக்சல் தீர்மானம் உடைய தொடுதிரையைக் கொண்டுள்ளது.

பிரதான நினைவகமாக 4ஜிபி ரம், 32/64 ஜிபி சேமிப்பு நினைவகம் என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

இவற்றுடன் 21 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 8 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா, நீடித்து உழைக்கக்கூடிய மின்கலம் என்பனவும் தரப்பட்டுள்ளன.

கூகுளின் புதிய இயங்குதளமான அன்ரொய்ட் 7 இயங்குதளத்தைக் கொண்டு செயற்படவுள்ளமை விசேட அம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடற்படைக்குக்...

அளவீடு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்குத் தீர்வுகாணுவதற்காக நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் காணி உரிமையாளர்கள், மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

கடற்படை முகாம் அமைந்துள்ள பிரதேசத்தினைக் கடற்படையினர் தமது பயன்பாட்டிற்கு வழங்குமாறு கோருகின்றனர். அவ்வாறு வழங்கும் சந்தர்ப்பத்தில் அதற்கு தகுந்த தற்போதைய சந்தைப் பெறுமதியில் இழப்பீடு வழங்குவதாக கடற்படையினர் தெரிவிக்கின்றனர். எனவே இது தொடர்பில் காணி உரிமையாளர்கள் மற்றும் மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதிகளின் கருத்தினை எதிர்பார்க்கின்றோம் என அரச அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர்.

எமது பூர்வீக நிலமே எமக்கு வேண்டும் . எமது பூர்வீகமான கேந்திர முக்கியத்துவம் மிக்க இந்த இடத்தினை மீளப் பெற்றுத்தர வேண்டிய அதிகாரிகள், அதற்கான நடவடிக்கை எடுக்காது எமது நிலத்தைக் கடற்படைக்குப் பெற்றுக்கொடுப்பதில் அக்கறை செலுத்துகின்றனர்.

இந்த இடத்தினை முதலில் சுவீகரிக்கும் கடற்படையினர், எதிர் காலத்தில் இதனை அண்டி துறைமுகம் எனவும், பாதுகாப்பு வலயம் எனவும் மேலும் நிலங்களை அபகரிப்பார்கள். இந்த மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைகளுக்கும் மக்களின் மீள் குடியேற்றத்துக்காகவும் எவ்வளவோ நிலத் தேவைகள் உள்ளபோது, படையினரின் பயன் பாட்டிற்காக, வளமான பிரதேசத்தை வழங்க முடியாது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு பல்கலைக் கழகம் அமைப்பதற்காக நகரை அண்டிய பகுதியில் 100 ஏக்கர் நிலத்தினைப் பெறுவதில் பெரும் நெருக்கடி எதிர் நோக்கப்படும் நிலையில், கடற்படையினருக்கு 617 ஏக்கரை வழங்க முடியாது என மக்களால் கருத்துக்கள் பலமாக முன்வைக்கப்பட்டன.

மகிந்த காலத்தில் இவ்வாறான நெருக்கடிகளை எதிர் கொண்ட தன் விளைவாகவே, நாம் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தோம். மேடைக்கு மேடை வாய்ப் பேச்சில் கூறும் நல்லாட்சி அரசு இந்த மக்களுக்காக சாதித்தது என்ன?வடக்கில் நில அளவீடுகள் தொடர்பிலோ அல்லது சுவீகரிப்பு முயற்சிகள் தொடர்பிலோ எதுவுமே தெரியாது என பிரதமர் கூறுகின்றார். அவ்வாறானால் படையினருக்கு நிலம் அபகரிக்க மாவட்டச் செயலர் முயல்கின்றாரா? எனவும் மக்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்தக் கலந்துரையாடலுக்கு வந்திருந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நில உரிமையாளர்கள் இருவரும் மற்றும் சீன நாட்டவரும் தமது நிலத்துக்கான முழுமையான பெறுமதியினை இழப்பீடாக வழங்கினால், தாம் அந்த நிலத்தை வழங்குவதாகத் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் பிரதேச செயலாளர், காணித் திணைக்கள உத்தியோகத் தர்கள், நில அளவைத் திணைக்களத்தினர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் நில உரிமையாளர்களுடன் கடற் படையினர் ஆகியோரும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவரும் கலந்து கொண்டார். (வ-101)

## இன்று...

அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு யாழ். பொது நூலகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஐ.நா. பொதுச் செயலாளருக்கும் இடையே முக் கிய சந்திப்பு இடம்பெறும். இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவரும் எதிர்க்கட்சித்தலைவருமான இரா.சம்பந்தன், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் பங்கேற்பர்.

இந்தச் சந்திப்பின்போது, "இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தின் அனைத்துப் பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்த அரசுக்குத் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்குமாறு பான் கீ மூனிடம் நாம் எடுத்துரைக்கவுள்ளோம். அத்துடன், இராணுவ ஆக்கிரமிப்பால்வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகளையும் ஐ.நா. செயலாளரிடம் சுட்டிக்காட்டவுள்ளோம்" என்று கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் தெரிவித்தார்.

இந்த முக்கிய சந்திப்பை நிறைவு செய்த பின்னர் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயை ஆளுநர் அலுவலகத்தில் பான் கீ மூன் சந்திக்கவுள்ளார். அவருடன் போரின் பின்னரான வடக்கு மாகாண நிலைமைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து பான் கீ மூன் கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் யாழ். வருகைக்கான நினைவுப் புகைப்படங்களை எடுத்துக்கொள்ள விருக்கும் பான் கீ மூன், வலி. வடக்கு தெல்லிப்பழை வீமன்காமத்துக்கு சென்று, அங்கு மீளக்குடியமர்ந்த மக்களைச் சந்தித்து நிலைமைகளை ஆராயவுள்ளார்.

யாழ். வருகையின் இறுதி அம்சமாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை ஐ.நா. செயலாளர், அவரது உத்தியோகபூர்வ அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண அமைச்சர்களும் பங்கேற்கின்றனர்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதஉரிமை மீறல்கள் தொடர்பில் பன்னாட்டு விசாரணையின் அவசியம் குறித்து இந்தச் சந்திப்பின்போது வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், பான் கீ மூனிடம் வலியுறுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்புடன் ஐ. நா. பொதுச் செயலாளர் பிற்பகல் 2.30 மணியளவில் தனது யாழ். பயணத்தை நிறைவு செய்து கொண்டு விமானத்தில் கொழும்பு திரும்புவார்.

2009ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி ஐ.நா. பொதுச் செயலாளர் இலங்கைக்கு முதல் தடவையாக வருகை தந்தார். தமிழீழ விடுதலைப்புலிகளுடனான போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாக இலங்கை அரசால் அறிவிக்கப்பட்ட நான்கு தினங்களில் பான் கீ மூனின் அந்த வருகை அமைந்திருந்தது. அதன் போது ஹெலியிலிருந்து போர் நடைபெற்ற பிரதேசங்களைப் பார்வையிட்டார். பின்னர் வவுனியா மெனிக்பாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த போரால் இடம்பெயர்ந்த மக்களையும் அவர் நேரில் சென்று சந்தித்தார். ஆனால், அவர் யாழ்ப்பாணத்துக்கு வருவது இதுவே முதல் தடவையாகும்.

(வ-21)

## பரவிப்பாஞ்சான்...

தங்களுடைய போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

பரவிப்பாஞ்சானில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துக் காணி களையும் இரண்டு வாரத்தில் பெற்றுத் தருவதாக எதிர்க்கட்சித் தலைவர் வழங்கிய உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை எனத் தெரிவித்துப் பரவிப்பாஞ்சான் மக்கள் நேற்று முன்தினம் இரவு மீண்டும் கவனவீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்தனர். கிளிநொச்சி மாவட்டச் செயலாளருக்கும் பரவிப்பாஞ்சான் காணி உரிமையாளர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முந்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

'இராணுவத்தினருடைய கட்டுப்பாட்டில் உள்ள பரவிப்பாஞ்சான் மக்களுக்கு சொந்தமான காணிகளை. விடுவிக்குமாறு காணி உரிமையாளர்கள் கடந்த மாதம் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். ஆரம்பத்தில் 4 அரை ஏக்கர் காணி விடுவிக்கப்பட உள்தாக பாதுகாப்பு அமைச்சினால் தெரியப்படுத்தப்பட்டது, இந்த நிலையில் மேலும் 3 கால் ஏக்கர் காணி தற்போது விடுவிக்கப்பட உள்ளன. அதற்கான அனுமதிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. காணி உரிமையாளர்களை அடையாளப்படுத்தும் வேலைத்திட்டத்தில் மாவட்ட செயலகம் ஈடுபட்டுள்ளது என மாவட்ட செயலாளர் மக்கள் மத்தியில் தெரிவித்தார்.


கலந்துரையாடல் நிறைவடைந்து பரவிப்பாஞ்சான் பகுதிக்கு சென்ற மக்கள், கிளிநொச்சி மாவட்டச் செயலாளருடைய கருத்தை ஏற்றுக்கொள்ளாது, பரவிப்பாஞ்சான் பகுதி முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்து போராட்டத்தை ஆரம்பித்தனர்.

15 குடும்பங்களுக்குச் சொந்தமான இன்னும் பத்து ஏக்கா காணி விடுவிக்க வேண்டும். எனவே அந்தக் காணிகளும் விடுவிக்கும் வரை நாம் தொடா கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட உள்ளோம் என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

(வ-21,27)

## மரண அறிவித்தல்

## Dr.அ.நிக்கலஸ்பிள்ளை



பிறப்பு
13 . 08 . 1943

இறப்பு
15 . 08 . 2016

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.அ.நிக்கலஸ்பிள்ளை 15.08.2016 லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகசெட்டி அந்தோனிப்பிள்ளை - அந்தோனியாப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான திரு திருமதி கனகசுந்தரி தம்பதிகளின் அன்பு மருமகனும், Dr. ஒலிவெற்றின் (UK ) அன்புக் கணவரும், காலஞ்சென்ற றோசம்மா, பற்றிமாபுஸ்பம், ஜோசப் மரியநாயகம் (நாதன்), காலஞ்சென்ற ஜோன்வில்லியம் மில்டன், காலஞ்சென்ற வரதராஜா, நோயல் ரகுநாதன் ( UK) , வசந்தி (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இந்திரா, ஞானம், ஜடா, ஆன், மோகன், காலஞ்சென்ற கெலன்மேரி, றெஜிஸ், கருணாகரன், மகிழ்வதி, செல்வதி, பெசி, மாத்தா, சாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 06.09.2016 செவ்வாய்க்கிழமை லண்டனில் நடைபெறும். நாளை (03.09.2016) சனிக்கிழமை பிற்பகல் 6 மணியளவில் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக வெள்ளவத்தை புனித லோறன்ஸ் தேவாலயத்தில் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்படும். 05.09.2016 திங்கட்கிழமை சில்லாலை கதிரமாதா ஆலயத்தில் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக காலை 6 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


DR.OLIVET NICHOLASPILLAI
+44 208 360 2477

தகவல்: நாதன் (தம்பி)
[illegible], சில்லாலை,
பண்டத்தரிப்பு.
077 725 9749

(J/4252)
(11,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



## சலமோன் பாவிலுப்பிள்ளை

(மண்டைதீவு)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், மண்டைதீவு 5ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சலமோன் பாவிலுப்பிள்ளை 31.08.2016 புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சலமோன் - பவுலீனாப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிங்கராயர் மற்றும் அருளம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற லூர்துமேரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுரேஸ் மற்றும் றொடீஸ், ஜதீஸ் (ஆஸ்திரேலியா), கமிலஸ் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காந்திமதி, சிந்தூரி (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான அல்பிரட்டம்மா, பிரான்சிஸ்கம்மா, ஆரோக்கியநாதர் மற்றும் பிலுப்பையா, டேவிட், சந்தியாப்பிள்ளை, திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரசில்டா, றொமில்டா, றொஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (02.09.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் மண்டைதீவு புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

தகவல்:
குடும்பத்தினர்.

(J/4250)
(11,18)

## கண்ணீர் அஞ்சலி



எமது பணிமனையின் பிரதி
பிராந்திய சுகாதார சேவைகள்
பணிப்பாளராக கடமையாற்றும்
**வைத்திய கலாநிதி கு.தேவநேசன்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி பேரின்பராணி ஏகாம்பரநாதன்**
அவர்கள் காலமானதையிட்டு
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம், பிராந்திய சுகாதார சேவைகள்**
**பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**திருமதி**
**மகேஸ்வரதேவி**
**கணேசலிங்கம்**

மலர்வு
18.03.1942

உதிர்வு
03.08.2016

கடந்த 03.08.2016 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (03.09.2016) சனிக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

இளவாலை வடக்கு, இளவாலை. குடும்பத்தினர்.

(சி/25097)(11.17.18.)

## மரண அறிவித்தல்

## திருமதி பகவதி பீதாம்பரம்

(ஓய்வு பெற்ற ஆசிரியை-யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை1980-1994, மருதங்கேணி இந்துதமிழ்க் கலவன் பாடசாலை, உடுத்துறை மகா வித்தியாலயம் 1971-1980, கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலை 1962-1971)

**பிறப்பு**
20 . 07 . 1937



**இறப்பு**
29 . 08 . 2016

யாழ்.மருதங்கேணி தெற்கைப் பிறப்பிடமாகவும் எழுதுமட்டுவாழ்,நாவற்குழி, நல்லூர், வெள்ளவத்தை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் லண்டன், விக்டோரியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி பகவதி பீதாம்பரம் கடந்த (29.08.2016) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையா பீதாம்பரம் (அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் கிருபாகர னின் (லண்டன்) அன்புத் தாயாரும் தர்ஷினியின் (லண்டன்) பாசமிகு மாமியாரும் நிகி லேஷ், கிபிலாஷ்,டீக்ஷா ஆகியோரின் செல்ல அப்பம்மாவும் காலஞ்சென்ற லட்சுமிப் பிள்ளை பொன்னையா அவர்களின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற துரைஐயா, சண்முகநாதன் மற்றும் தெய்வேந்திரராணி(நாவற்குழி) ஆகியோரின் அண்ணியும் சந்திரபவானி (விரிவுரையாளர்-கொழும்பு), பரமசாமி (சமாதான நீதிவான்) ஆகியோரின் சம்பந்தியும் மகாதேவா, சரஸ்வதிப்பிள்ளை, மகாலிங்கம் (லண்டன்), சரோஜினிதேவி, சத்தியராணி, சத்தியதேவி, சிவராசா , காலஞ்சென்ற சேனாதிராசா ஆகியோரின் சிறிய தாயா ரும் காலஞ்சென்ற செல்லையா ஐயாத்துரையின் உடன் பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.09.2016 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனனவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**கிருபா (மகன்) 0044 7411184247, 0044 2072583545**
**தர்ஷி (மருமகள்) 0044 7723410259**

**மாலிபோண், லண்டன்.**

## இருவேறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிணற்றில் நீர் எடுக்கச் சென்றிருந்ததாகவும், நீண்ட நேரம் காணாது தேடிச் சென்ற சமயமே இவ்வாறு சடலமாக காணப்பட்டார் என்றும் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. இதனால் நீர் எடுக்கச் சென்ற சமயம் தவறி கிணற்றுக்குள் வீழ்ந்திருக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வட்டக்கச்சி பகுதியிலும் பெண் ஒருவர், அவரது வீட்டில் சடலமாக மீட்கப்பட்டார் என வட்டக்கச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, வட்டக்கச்சி சில்வா வீதியில் வீட்டில் இருந்து 2 பிள்ளைகளின் தாயான சி. சந்திரபாரதி (வயது 47) என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டார். சம்பவ இடத்திற்குச் சென்ற கிளிநொச்சி நீதிவான் சடலத்தை பார்வையிட்டதுடன், வட் டக்கச்சி மற்றும் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவங்கள் கொலையா அல்லது தற்கொலையா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(வ-101)

## கண்ணீர் அஞ்சலி

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின்
(யாழ்ப்பாணம்) பிராந்திய முகாமையாளர்
**திரு.ஏ.ஜெகதீசன்** அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி பேரின்பநாயகி ஏகாம்பரநாதன்**
அவர்கள் நேற்று (01.09.2016) அன்று காலமாகிவிட்டார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு
அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வடபிராந்திய ஊழியர் தொழிற்சங்கம்,**
**தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, யாழ்ப்பாணம்.**

## வேலை வாய்ப்பு

வேலணை வெள்ளைக் கடற்கரையில் இயங்கும் Hotel ஆன Charty Beach Resort இற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

- **முகாமையாளர் (Hotel Manager)**
- **காசாளர் (Cashier)**

* அனுபவம் மற்றும் வயதிற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.
* ஆங்கில அறிவு அவசியம்
* உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

**Tilko Charty Beach Resort**
**Phone: 077 3438373**
**Email: tilkotilak@gmail.com**

## மூனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் நாட்டையும், இராணுவத்தையும் பன்னாட்டுச் சமூகத்தின் முன்பு காட்டிக்கொடுப்பதற்காகவே இலங்கை வந்துள்ளார். அவரை நாட்டைவிட்டே வெளியேற்ற வேண்டும்.

இவ்வாறு ஐ.நா. பொதுச் செயலாளரின் இலங்கை வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று கொழும்பில் தேசிய சுதந்திர முன்னணி ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்தது.

"பான் கீ மூன் வடக்கு கிழக்குக்கு மட்டுமே சாதகமானவர். அதன் காரணமாக அவர் உடனடியாக இலங்கையை விட்டு வெளியேற்றப்பட வேண்டும்,

ஐ.நா பொதுச் செயலாளர் நாட்டையும், இராணுவத்தையும் பன்னாட்டுச் சமூகத்தின் முன்பு காட்டிக்கொடுப்பதற்காகவே இலங்கை வந்துள்ளார். இதற்கு ஆதரவாக மைத்திரியும் ரணிலும் செயற்படுகின்றார்கள். அமெரிக்காவின் தலையீட்டில் பல நாடுகள் அழிக்கப்பட்டுள்ளன. அவ்வாறானவர்களுக்கு இலங்கையை அடிமைப்படுத்தவே அரசு செயற்படுகின்றது. இதற்காகவே இலங்கைக்கு பான் கீ மூன் வந்துள்ளார்.' என நேற்றையதினம் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட தேசிய சுதந்திர முன்னணியினர் தெரிவித்திருந்தனர்.

(வ-21)

## கலந்துரையாடல்

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவ கல்லூரி மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்தரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.
இதில் நிர்வாகசபை தெரிவு சம்பந்தமான விடயங்கள் ஆலோசிக்கப்பட வேண்டி இருப்பதால் இது தொடர்பாக கலந்துரையாட DAM பட்டதாரிகள், நலன்புவிரும்பிகள் யாவரையும் சமுகம்தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மாணவர் ஒன்றியம்**
**071 5265264,077 9557837**

## MAJESTIC CINEPLEX

A CEYLON THEATRES CINEMA Jaffna

**கார்கிள்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் ப்ளாட்டினம 10.00 a.m / 1.00 p.m

கபாலி 4.00 p.m / 7.00 p.m
Fri/Sat/Sun 9.30 p.m




சில்வர்
10.15 / 1.15 / 4.15 / 7.15

ப்ரொன்ஸ்
10.30 / 1.30 / 4.30 / 7.30

Fri/Sat/Sun 9.30 p.m

விசாரணை ☎ 021- 2227712

facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

## கொண்டாட்டங்களுக்கான வீடு வாடகைக்கு

200 பேர் பங்குபற்ற கூடியதான
கொண்டாட்டங்கள்
நாடாத்த கூடிய புதிய மாடி வீடு
கச்சேரிக்கு அண்மையில் வாடகைக்கு
உண்டு.

**தொடர்பு.0776669C55**

## லொறி விற்பனைக்கு உண்டு

நல்ல நிலையிலுள்ள WPLL XXXX ஆங்கில எழுத்துக் கொண்ட 1/2 தட்டு உடையதும் 10 ரயர் கொண்டதுமான இரு லொறிகள் விற்பனைக்குள்ளன.

**077 320 7739**

## Spoken English

Professionl Spoken English
Coaching Classes
Individual or Group Basis

Call us on
0778-570-307

## வீடு வாடகைக்கு உண்டு

கிளிநொச்சி, கரடிப்போக்குச்சந்தியில் இருந்து உருத்திரபுரம் செல்லும் வீதியில், (A9வீதியில் இருந்து 500 மீற்றர்) 5அறைகள், சமையல் அறை, கார் கராஜ், விறாந்தை உட்பட சகலவசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு. அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கே வழங்கப்படும்.

**077 320 7739**

## சிமெந்து இறக்கும் தொழிலாளர் தேவை

கிளிநொச்சி, கரடிப்போக்குச் சந்தியில் அமைந்துள்ள சிவகுரு ஹாட்வெயர் நிறுவனத்துக்கு சிமெந்து இறக்கும் தொழிலாளர் குழுவாகவோ, தனிநபராகவோ தேவை. வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. தங்குமிட வசதியும், நாள் ஒன்றுக்கு 2000/= இற்கு குறையாத சம்பளமும் வழங்கப்படும்.

**077 320 7739**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமுத்திர...

முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டார். பிரதமருக்குச் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது.
நிகழ்வில் வரவேற்புரையை இந்தியாவின் அயலுறவுத் துறை இராஜாங்க அமைச்சர் ஏ.ஜே.அக்பர் நிகழ்த்தினார். அவர் தனது உரையில் இந்து சமுத்திரத்தின் முக்கியத்துவம், அதன் எதிர்காலம் தொடர்பில் குறிப்பிட்டார். இந்த மாநாடு மிக முக்கியமானது என்பதையும் அழுத்தமாகத் தெரிவித்தார்.
இதனைத் தொடர்ந்து, இந்தியாவின் அயலுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ் ஸ்கைப் தொழில் நுட்பத்தின் ஊடாக மாநாட்டில் இணைந்து கொண்டு உரையாற்றினார்.
"இந்து சமுத்திரம் என்பது வெறுமனே தண்ணீரால் நிரப்பப்பட்ட ஒன்று அல்ல. அது மிகப் பெரிய வரலாற்றைக் கொண்டிருக்கின்றது. இந்தப் பிராந்திய அரசுகளுக்கு இடையில் சமூக பொருளாதார வர்த்தக கலாசாரத்தைக் கொண்ட தளமாகும். இந்த வலயத்தின் எதிர்காலத்தை மிகச் சிறப்பாகக் கட்டியெழுப்புவதற்கு அதனைச் சுற்றியுள்ள அரசுகளின் கடப்பாடு முக்கியமானது. இந்தக் கடப்பாட்டை வலுப்பெறச் செய்வதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பங்களிப்பு மிக முக்கியமானது" என்றார்.
சுஸ்மாவின் உரையைத் தொடர்ந்து, சிங்கப்பூர் அயலுறவுத்துறை அமைச்சர் விவியன் பாலகிருஸ்ணன், "வர்த்தக புரட்சியின் பின்னர் இந்து சமுத்திரத்தின் ஊடாக கப்பல்களில் பொருள்கள் மட்டும் வரவில்லை. அறிவு யோசனைகளும் புதியசிந்தனைகளும்வந்தன. அதனுடன் காலனித்துவமும் வந்தது. இவை கடந்த கால நிகழ்வுகள். தற்போது நாங்கள் அடுத்த 50 வருடங்களைக் கருத்திற்கொண்டு திட்டங்களை வகுக்க வேண்டும். இளைஞர் சமூகத்தின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும். எதிர்காலத்தை கட்டியெழுப்பும் கடப்பாடுகள் ஆட்சியாளர்களின் கையிலேயே காணப்படுகின்றது" - என்றார்.
இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலைகள், கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்கரி கருத்துத் தெரிவிக்கையில், "நான் மாத்திரம் எழும்பி நிற்கக் கூடிய யுகம் இதுவல்ல. அனைவரும் ஒன்றாக இணைந்து நிற்க வேண்டும். இதனாலேயே அனைவருக்கும் வெற்றி கிடைக்கும். இந்தச் செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கு இந்தப் பிராந்தியத்தில் உள்ள அனைவரும் ஒரே குடும்ப உறுப்பினர்கள் என்ற நோக்கில் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.
இறுதியாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரை நிகழ்த்தினார்.
"இந்து சமுத்திரத்தில் நிர்வாக - நீதி கட்டமைப்பு உருவாக்கிக் கொள்வதற்கான அடித்தளத்தை அமைப்பதற்கான இந்து சமுத்திர மாநாடு நடத்தப்பட வேண்டும். இந்து சமுத்திர வலயத்தில் கல்வி மனித வள அபிவிருத்தி ஒத்துழைப்பு சம்பந்தமான செயற்திட்டத்தையும் உருவாக்க வேண்டும்.
இந்து சமுத்திர அரசுகளுக்கு இடையிலான பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற தொடர்பாடலைப் பேணுவதற்கு பொது இணக்கப்பாடு காணப்பட வேண்டும். சுமுகமான வலயப் பாதுகாப்பை உருவாக்கி, ஒவ்வொரு நாடுகளுக்கும் இடையில் அந்த நாடுகளின் நலன்களுக்கான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த வேண்டும்" - என்றார்.
மாநாட்டின் நிறைவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, இந்திய அயலுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் அக்பர் நினைவுப் பரிசு வழங்கிக் கௌரவித்தார்.
இதேவேளை, இந்த மாநாட்டில் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனும் கலந்து கொண்டார். (வ-5)

## இலங்கை...

வில், இந்தியாவின் அயலுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் எம்.ஜே.அக்பர் தலைமையிலான குழுவினர் சந்தித்தனர். இந்தச் சந்திப்பின்போதே, அயலுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு இலங்கை அரசைப் பாராட்டினார்.
இந்து சமுத்திர மாநாட்டில் பங்கேற்பதற்காக அழைப்பை ஏற்றுக் கொண்டமைக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, இராஜாங்க அமைச்சர் எம்.ஜே.அக்பர் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த மாநாட்டில் பங்கேற்பதன் ஊடாக, மாநாட்டுக்கு ஒளியூட்டியுள்ளதாக அக்பர் குறிப்பிட்டார்.
இந்தச் சந்திப்பில் அக்பர் மேலும் தெரிவித்ததாவது, "இலங்கையும் - இந்தியாவும் மிக நீண்ட காலமாக வரலாற்று ரீதியாகத் தொடர்புள்ள நாடுகள். இந்து சமுத்திரத்தில் மிக முக்கியமான நாடுகள். சமுத்திரத்தின் பாதுகாப்பு முக்கியமானது. மேலும் இலங்கை அரசு நல்லிணக்கத்திற்காக மேற்கொள்ளும் பணிகளையும் பாராட்டுகின்றேன்" - என்றார்.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தச் சந்திப்பின் போது, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் எழுகின்ற பிரச்சினைகளைப் பேச்சு மூலம் இணக்கப்பாட்டுடன் தீர்த்துக் கொள்ள முடியும். எதிர்காலச் சவால்களை வெற்றி கொள்வது முக்கியம்" என்று குறிப்பிட்டார்.
இலங்கை - இந்திய இரு தரப்பு உறவையும் வலுப்படுத்துவதற்கு இலங்கை அபிவிருத்திச் செயற்றிட்டத்தில், இந்தியாவின் அரச தனியார் ஒத்துழைப்பு மேலும் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டது.
சுமார் 40 நிமிடங்கள் வரை நீடித்த இந்தச் சந்திப்பில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், பிரதமரின் செயலாளர் சமன் எக்கநாயக்கா, சிங்கப்பூருக்கான இலங்கைத் தூதுவர் நிமல் வீரரட்ண, பிரதமரின் மேலதிக செயலாளர் சமன் அதாவுத, சிறப்புச் செயலர் சன்ரா பெரேராவும் இந்தியத் தரப்பில், இந்திய அயலுறவுத் துறைச் செயலர் ஜெய்சங்கர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ-5)

## நல்லிணக்கம்...

பல பேசப்பட்டன என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது. இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இலங்கை அரசினால் மேற்கொள்ளப்படும் புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் குறித்து பான் கீ மூனிடம் மைத்திரிபால சிறிசேன எடுத்துரைத்தார். அத்துடன், மக்களின் காணிகளை விடுவித்தல், மீள்குடியேற்றம் மற்றும் வாழ்வாதாரத் திட்டங்கள் குறித்தும் ஜனாதிபதி, ஐ.நா. செயலாளரிடம் தெரிவித்தார்.
இதன்போது பதிலளித்த ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன், "கடந்த ஒன்றரை ஆண்டுகளில் இலங்கை அரசு ஐ.நாவுடன் இணைந்து செயலாற்றியது. இன்று காலி சென்ற போது இலங்கை பல்வேறு துறைகளில் அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பில் நேரில் கண்டுகொண்டேன். இந்த நாட்டில் நிலையான அமைதி ஏற்படவேண்டும்"-என்றார்.
இந்த சந்திப்பின் பின்னர் ஜனாதிபதியால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இரவு உணவு விருந்துபசாரத்திலும் பான் கீ மூன் கலந்துகொண்டார்.
இதேவேளை பான் கீ மூன் நேற்று முன்தினம் இரவு கொழும்பு வந்த கையோடு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார். (வ-21)


## மகிந்தவின்...

நடத்தப்பட்டது. மலேசியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு முன்னால் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில், மகிந்தவின் உருவப்படம் பொறித்த பதாதைகள் எரிக்கப்பட்டன.
"போர்க்குற்றவாளி ராஜபக்சவே! மலேசியாவுக்குள் வராதே, உடனே வெளியேறு" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோசமெழுப்பினர். மலேசியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் புலம்பெயர் அமைப்பொன்று இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.
இதேவேளை, தெற்காசிய அரசியல் கட்சிகளின் மாநாட்டில் பங்கேற்பதற்காக நேற்றுக் காலை மலேசியாவுக்கு சென்ற மகிந்தவை, ஆசிய வலய நாடுகளின் அரசியல் பிரமுகர்கள் பலரும் சந்தித்துப் பேச்சு நடத்தினர் . குறிப்பாக சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதியும் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (வ-21)

## மரண அறிவித்தல்

### திரவியம் செல்லக்குமார்

(மெக்கானிக்)



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திரவியம் செல்லக்குமார் கடந்த (31.08.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரவியம்-செல்வம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான முத்துராசா-ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பவுணின் அன்புக் கணவரும் நிஷாந்தினி (சுவிஸ்), நிஷாந்தன்(கனடா), காலஞ்சென்ற றொகாந்தன் மற்றும் றொக்சன், டிபேசன், நிதர்சினி, நிலக்ஸ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் மகாதேவா(சுவிஸ்), நோனி(கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் மதுசா, மிகேல், றொசானி பாசமிகு பேரனும் பொன்றோஸ், யோகம், அன்ரனி, மகேந்திரன் (லண்டன்), தங்கறோஸ், றூபி, மைனா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெயரட்ணம், ஜெயநாதன், காலஞ்சென்ற மணி மற்றும் ராணி ஜெயசிங்கம் (பிரான்ஸ்), மலர், மனோகரன் (பிரான்ஸ்), சுவிலா(சுவிஸ்), ஜெயவதி, அப்புக்காத்து (லண்டன்), ஆகியோரின் மைத்தனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (03.09.2016) சனிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து நாவாந்தறை புனித நிக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திரப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நாவந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனைக்கோட்டை — தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### கார்த்திகேசு குலநாயகம்

பிறப்பு 07.10.1946
இறப்பு 31.08.2016



யாழ் நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும், சோளவத்தையை வசிப்பிடமாகவும், கொழும்பு கொட்டாஞ் சேனையை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு குலநாயகம் (31.08 .2016) புதன்கிழமை கொழும்பில் இறைவனடி சேந்தார்.

அன்னர், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகனும் ,காலஞ்சென்றவர்களான பொன்னையா பராசக்தி தம்பதிகளின் அன்பு மருமகனும்,கமலாதேவி அவர்களின் பாசமிகு கணவரும், நந்தினி(கொழும்பு), பிரதீபன் (லண்டன்), ஜெயந்தினி (கனடா), பார்த்தீபன்( லண்டன்), பாமினி(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற இராஜதுரை, நகுலேஸ்வரி, தயாநிதி,ஆகியோரின் அன்புச் சகோதரரும், மணி வண்ணன்(சுவிஸ்), சுஜிதா (லண்டன்), ஆனந்தலிங்கம் (கனடா), துளசி(லண்டன்), செல்வக்குமார் (பிரான்ஸ்), ஆகி யோரின் அன்பு மாமனாரும், புனிதவதி, காலஞ்சென்ற தியாகராஜா, தணிகாசலம், காலஞ் சென்றவர்களான இராசலட்சுமி, மகேஸ்வரி,மற்றும் பரமேஸ்வரி, அன்னலட்சுமி, விஜய லட்சுமி, ஜெகதீஸ்வரன் ,மவுனசுந்தரம், காலஞ்சென்ற சண்முகநாதன், குமார், சிவபாதம், விஜயலட்சுமி, ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிரிஷாந், தரணிகா, விசாலி, அபிசாலி, அதிரன், சாரங்கன், சானுஜா, அத்விகா, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் (03.09.2016) சனிக்கிழமை மு.ப 08.00 மணி முதல்பொரளை ஜெயவர்த்தன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 04.09.2016 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் இறுதிக் கிரியை நடைபெற்று பின்னர் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வீட்டு முகவரி,**
No.111 4/2,College Str,
Kotahene,Colombo-13.

**தகவல்.**
**மனைவி,மக்கள்**

**இலங்கை. செல்லிடப்பேசி.+94771052439, +94774133158**
**பிரதீபன் (மகன்) பிரித்தானியா.**
**00447947274754**

### திருமதி பேரின்பராணி ஏகாம்பரநாதன்

(இளைப்பாறிய ஆசிரியை-Bsc,வவு/ஓமந்தை மகா வித்தியாலயம், யா/இணுவில் மத்திய கல்லூரி)



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பேரின்பராணி ஏகம்பரநாதன் நேற்று (01.09. 2016) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் ஏகம்பரநாதனின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்பு மனைவியும் Dr.தேவநேசன் (Deputy regional director of health services-Jaffna), ஜெயமோகன்(இந்தியா), ஜெகதீசன்(Regional Manager-National Water supply & Drainage Board-Jaffna), காலஞ்சென்ற செந்தில்நாதன் மற்றும் ஸ்ரீரங்கன் (ஆசிரியர், நடேஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சந்தரதாஸ் (அதிபர்-மானிப்பாய் மெமோரியல் கல்லூரி) அவர்களின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ருக்குமணி (கல்வி அதிகாரி கல்விக்கந்தோர், யாழ்ப்பாணம்), Dr.கேதாரநாதன் (Consultant cardio thoracic surgeon-Royal Melbourne Hospital) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் Dr.வசுமதி (Cousultant Anaesthetist-போதனா வைத்தியசாலை-யாழ்ப்பாணம்), தமயந்தி (இந்தியா), Dr.நளாயினி (பொது வைத்திய நிபுணர் மந்திகை ஆதார வைத்திய சாலை), கலையரசி (சமுர்த்தி உத்தியோகத்தர்-நல்லூர்) ஆகியோரின் மாமியாரும் அபிராமி (மாணவி-வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ஆதிரை,ஆர்த்தி(இந்தியா), ஆர்த்திகன் (மாணவன்-யாழ் இந்தக் கல்லூரி), பாவனன் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் Dr.செல்வநாயகி(Consultant Physician-ஆஸ்திரேலியா), ரவீந்திரன் (பொறியியலாளர்-ஆஸ்திரேலியா) ஆகியோ ரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2016) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**மானிப்பாய் வீதி,**
**மருதனார்மடம்.**
**021 2241514**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

## செரீனா வில்லியம்ஸின் அச்சுறுத்தல் ஆரம்பம்

அமெரிக்க ரென்னிஸ் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் செரீனா வில்லியம்ஸ் நேர் செற்றில் வெற்றி பெற்றார்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரான செரீனா வில்லியம்ஸ் அமெரிக்காவைச் சேர்ந்தவர். இதனால் அமெரிக்கத் தொடரைக் கைப்பற்ற வேண்டும் என்ற கௌரவ நிலை அவருக்கு உள்ளது. இவர் தனது முதலாவது ஆட்டத்தில் ரஷ்யாவின் மகரோவாவை நேற்று எதிர்கொண்டார். மூன்று செற்களில் முதலிரு செற்களையும் முறையே 6:3, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய செரீனா வில்லியம்ஸ் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். (ம)





## பன்னாட்டு ரி-20 தரப்படுத்தல்; மத்தியூஸ் ஒருவருக்கே இடம்

பன்னாட்டு கிரிக்கெட் சபை தனது புதிய தரப்படுத்தலை நேற்று வெளியிட்டது. துடுப்பாட்டம், பந்துவீச்சு, சகலதுறை என மூன்று துறைகளிலுமாகச் சேர்த்து இலங்கையின் சார்பில் மத்தியூஸ் ஒருவரே இடம்பிடித்துள்ளார். அதேநேரத்தில் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த மூன்று வீரர்கள் இடம்பிடித்துள்ளனர்.

துடுப்பாட்டத் தரப்படுத்தலில் கோக்லி முதலிடம் பிடித்துள்ளார். அவர் 820 புள்ளிகளைப் பெற்றுள்ளார். 803 புள்ளிகளுடன் பின்ஞ் இரண்டாவது இடத்திலும், 754 புள்ளிகளுடன் குப்தில் மூன்றாவது இடத்திலும், 741 புள்ளிகளுடன் பிளாசிஸ் நான்காவது இடத்திலும், 735 புள்ளிகளுடன் ரூட் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே வில்லியம்சன், கேல்ஸ், செசாட், கெய்ல், மசகட்சா ஆகியோர் உள்ளனர்.

பந்துவீச்சுத் தரப்படுத்தலில் பத்ரி முதலிடத்தில் உள்ளார். அவர் 743 புள்ளிகளைப் பெற்றுள்ளார். 740 புள்ளிகளுடன் தாகீர் இரண்டாவது இடத்திலும், 735 புள்ளிகளுடன் பும்ரா மூன்றாவது இடத்திலும், 684 புள்ளிகளுடன் அஸ்வின் நான்காவது இடத்திலும், 674 புள்ளிகளுடன் அப்ரிடி ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே அப்பொட், நரைன், மில்னி, பல்க்நெர், நபி ஆகியோர் உள்ளனர்.

சகலதுறை வீரர்களுக்கான தரப்படுத்தலில் 346 புள்ளிகளுடன் சகிப் அல் ஹசன் முதலிடத்தில் உள்ளார். 332 புள்ளிகளுடன் அப்ரிடி இரண்டாவது இடத்திலும், 329 புள்ளிகளுடன் மக்ஸ்வெல் மூன்றாவது இடத்திலும், 276 புள்ளிகளுடன் சாமுவேல்ஸ் நான்காவது இடத்திலும், 274 புள்ளிகளுடன் நபி ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே பிராவோ, மத்தியூஸ், டுமினி, பொரின், சென்வாரி ஆகியோர் இடம்பிடித்துள்ளனர். (ம)

## முர்ரே முன்னேற்றம்

அமெரிக்க ரென்னிஸ் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் நேர் செற் கணக்கில் வெற்றிபெற்ற முர்ரே இரண்டாவது சுற்றுக்கு முன்னேற்றம் கண்டார்.

நடப்பு வருடத்தில் கடைசி கிராண்ட் ஸ்லாம் தொடரான அமெரிக்க ரென்னிஸ் தொடர் அந்த நாட்டின் தலைநகர் நியூயோர்க்கில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்திலுள்ள பிரிட்டனின் முர்ரேயை எதிர்த்து செக்குடியரசு வீரர் ரோசோல் மோதினார்.

முதல் மூன்று செற்களையும் முறையே 6:3, 6:2, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய முர்ரே, 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். (ம)



## சகலதுறை வீரர்களே தோல்விக்குக் காரணம்

### சந்திமல் கண்டுபிடித்தார்



ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான நான்காவது ஒருநாள் ஆட்டத்தில், இலங்கை அணி தோல்வியடைந்து தொடரை இழந்தமைக்கு சகலதுறை வீரர்களின் தடுமாற்றமே காரணம் என அணித் தலைவர் சந்திமல் தெரிவித்தார்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடி 212 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா 114 பந்துகள் மீதமிருக்க இலக்கை எட்டி இலகுவான வெற்றியைப் பதிவு செய்தது. மத்தியூஸ் காயம் காரணமாக விலகிய காரணத்தால் சந்திமல் தலைமைப் பொறுப்பை ஏற்றார். ஆட்டம் முடிந்த பின்னர் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தோல்விக்கு காரணமாக சகலதுறை வீரர்களின் செயற்பாட்டை சந்திமல் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அவர் இந்த ஆட்டத்தில் 5 ஓட்டங்களையே பெற்றார். ஆரம்ப வீரரான பெர்னாண்டோ ஓர் ஓட்டத்தைத்தானும் பெறவில்லை. குசல் மெண்டிஸ் ஒரு ஓட்டத்தையே பெற்றார். குசல் ஜெனித் பெரேரா இலக்குக் காப்பிலும் கோட்டை விட்டதுடன் 6 ஓட்டங்களையே பெற்றுக்கொடுத்தார். இவர்களும் இந்த ஆட்டத்தில் இலங்கை தோல்வியடைய பிரதான காரணமாக அமைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## வெள்ளிப் பதக்கம் தேவையில்லை யோகேஸ்வர் தத்தின் பெருந்தன்மை


பெசிக்குடுகோவ்

ரஷ்ய மல்யுத்த வீரர் பெசிக்குடுகோவ் குடும்பமே வெள்ளிப் பதக்கத்தை வைத்துக் கொள்ளட்டும் என்று யோகேஸ்வர் தத் தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில், மல்யுத்தப் போட்டியில் ரஷ்ய வீரர் பெசிக்குடுகோவ் வெள்ளிப் பதக்கம் வென்றார். 2014 ஆம் ஆண்டு கார் விபத்தில் இவர் சாவடைந்தார். இந்திய மல்யுத்த வீரர் யோகேஸ்வர் தத் வெண்கலம் வென்றார்.

லண்டன் ஒலிம்பிக் தொடரில் ரஷ்யாவின் சார்பாக களமிறங்கியவர்களில் 70 சதவீதமானோர் ஊக்கமருந்தை உபயோகித்தமை கண்டறியப்பட்டது. இதனால் பெசிக்குடுகோவின் குருதிமாதிரி மீண்டும் பரிசோதனை செய்யப்பட்டது. அதில் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து இருந்தமை உறுதியானதையடுத்து, அவரது வெள்ளிப் பதக்கம் பறிக்கப்பட்டுள்ளது. வெண்கலம் வென்ற யோகேஸ்வருக்கு குறித்த வெள்ளிப் பதக்கம் வழங்கப்படும் என்று பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனம் அறிவித்துள்ள நிலை யில், குறித்த பதக்கத்தை பெசிக்குடுகோவ் குடும்பமே வைத்துக் கொள்ளட்டும் என்று யோகேஸ்வர் தத் தெரிவித்துள்ளார். பெசிக்குடுகோவ் மிகச் சிறந்த மல்யுத்த வீரர். ஒலிம்பிக் தொடரில் பதக்கம் வெல்ல அவர் முழுதும் தகுதியானவர். ஒரு வீரராக அவரை மதிக்கிறேன் என யோகேஸ்வர் மேலும் தெரிவித்தார். (ம)


யோகேஸ்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரவெட்டி பிரதேசம் சம்பியன்


யாழ்ப்பாணம், செப். 2
யாழ். மாவட்ட அரச அதிபர் கிண்ணத்துக்காக பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட சதுரங்கத் தொடரில் ஆண்கள் பிரிவில் கரவெட்டி பிரதேச செயலக அணி சம்பியனானது.
கொக்குவில் இந்துக் கல்லூரியில் அண்மையில் இந்தப் போட்டி நடைபெற்றது. கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலக அணி மோதியது. வே.சிவச்செல்வன், சி.நிர்மலன், செ.கார்த்திகேயன், ந.மயூரரூபன், ஜி.சசிக்குமார், எஸ்.சேந்தன், எஸ்.ஜெகஜிம்பன் ஆகியோரைக் கொண்ட கரவெட்டி அணி சம்பியனானது. (ம-422-108)

## ஜனாதிபதி தங்கப்பதக்க கரப்பந்தாட்டம் கிளி. சங்கம் விண்ணப்பம் கோருகிறது

கிளிநொச்சி, செப். 2
கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம், கிளிநொச்சி அணிகளுக்கு இடையே நடத்தும் ஜனாதிபதி தங்கப்பதக்க கரப்பந்தாட்டத் தொடர்கள் இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 22 வயதிற்குட்பட்ட இருபாலாருக்குமான தொடர்களாகவும், இருபாலாருக்குமான திறந்த (வயதெல்லையற்ற) தொடர்களாகவும் ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-426)



இடைக்காடு விளையாட்டுக் கழகம் புதிதாக அமைத்த கரப்பந்தாட்டத் திடலை நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் ஜெயசிங்க இருவரும் இணைந்து கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைத்தனர். (ம-422)



# இடைக்காடு கரப்பந்தாட்டத்தில் இந்து இளைஞர் சம்பியனானது

யாழ்ப்பாணம், செப். 2
இடைக்காடு விளையாட்டு கழகம் நடத்திய கரப்பந்தாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
இடைக்காடு வி.கழக மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதியது. ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் செற்றை 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது ஆவரங்கால் இந்து இளைஞர் அணி.
இரண்டாவது செற்றை 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது ஆவ ரங்கால் மத்தி. சரிவிலிருந்து மீண்ட இந்து இளைஞர் அணி மூன்றாவது, நான்காவது செற்களை முறையே 25:21, 27:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது. (ம-422-108)

## நீண்ட கிரிக்கெட் தொடருக்காக இந்தியாவுக்கு செல்கிறது நியூசி.



நீண்ட தொடர்களில் பங்கு பற்றுவதற்காக நியூசிலாந்து அணி இந்த மாதம் இந்தியாவுக்குச் செல்லவுள்ளது.
மூன்று டெஸ்ட் ஆட்டங்கள், ஐந்து ஒரு நாள் ஆட்டங்கள் கொண்ட தொடர்களில் விளையாடுவதற்காகவே நியூசி லாந்து அணி இந்தியாவுக்குச் செல்கிறது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முத லாவது டெஸ்ட் ஆட்டம் 22 ஆம் திகதி கான்பூரில் ஆரம்பமாகிறது. மீதமுள்ள இரு ஆட்டங் களும் கொல்கத்தா மற்றும் இந் தூரில் நடைபெறவுள்ளன. ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் ஒக்ரோபர் 16 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்த ஆட்டங்கள் முறையே தர்மசாலா, டெல்லி, மொகாலி, ராஞ்சி, விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# வடக்கு வீரர், வீராங்கனைகளின் அடைவுகளில் முன்னேற்றம்

### உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

வடபகுதி வீரர், வீராங்கனைகளின் தனிப்பட்ட பெறுபேறுகள், அடைவுமட்டங்களில் முன்னேற்றம் காணப் படுவதாகத் தெரிவித்தார் வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன்.
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்டப் போட்டிகள் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த போட்டியில் பங்குபற்றும் வீரர், வீராங்கனைகளுக்கு பயிற்சி முகாமொன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கடந்த நான்கு தினங்களாக முன்னெடுக்கப்பட்டது. மூன்றாம் நாளின் நிறைவில் உதயனுக்கு வழங்கிய தனியான நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
நடப்பு வருட தேசியமட்டப் போட்டிகள் நாளைமறுதினம் (இன்று) ஆரம்பமாகின்றன. வடக்கு மாகாணத்துக்கு போதிய பதக்கங்கள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் கொழும்பிலிருந்து 10 வளவாளர்களை அழைத்து அவர்கள் மூலமாக மேலதிகப் பயிற்சிகள் வழங்கியுள்ளோம். தேசியத்துக்குச் செல்லும் 200 வீரர், வீராங்கனைகள் இந்தப் பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர். பயிற்சியாளர்களின் கருத்தின்படி வீரர், வீராங்கனைகளின் அடைவுகளில் படிப்படியான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நுணுக்கங்களைக் கடைப்பிடித்து அதன்படி செயற்பட ஆரம்பித்துள்ளனர்-என அவர் மேலும் தெரிவித்தார். (ம-23)



குறுந்தூர ஓட்டங்களில் பங்கெடுக்கும் வீரர், வீராங்கனைகளுக்கு பயிற்சியாளர் ஆலோசனை வழங்கிய போது...

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப். 2
புத்தூர் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்திய விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டமொன்றில் மயிலங்காடு ஞானமுருகன், நாவாந்துறை சென். மேரிஸ் அணிகள் இன்று மோதவுள்ளன.
விக்னேஸ்வராவின் மைதானத்தில் இரவு 7 மணிக்கு இந்த ஆட்டம் இடம்பெறும். (ம-23)

## பல்கலைகளின் பெருவிளையாட்டு இன்றுமுதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 2
இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன. வயம்ப பல்கலைக் கழகத்திலேயே இந்தப் பெருவிளையாட்டுக்கள் நடைபெறவுள்ளன. ஆண்களுக்கான பளு தூக்கல் போட்டி இன்றும், இருபாலாருக்குமான பூப்பந்தாட்டப் போட்டிகள் இன்றும் நாளையும், பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன. (ம-23)


## சிறந்த தலைவர் யார் டோனியா? கோக்லியா?

### மெக்ராத்தின் தெரிவு

இந்திய அணியின் சிறந்த தலைவர் டோனியா? கோக்லியா? என்ற விவாதங்கள் நடைபெற்றுவரும் நிலையில் இவர்களில் ஒருவரைக் குறிப்பிட்டுத் தெரிவு செய்ய மறுத்துவிட்டார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான மெக்ராத்.
இந்திய ஊடகம் ஒன்றுக்கு மெக்ராத் நேர்காணல் வழங்கினார். அப்போது அவரிடம் டோனி, கோக்லி இருவரில் யாரை சிறந்த தலைவராகக் குறிப்பிடுவீர்கள் என்று கேட்கப்பட்டது. இந்தக் கேள்விக்கு குறிப்பிட்டு ஒருவரைத் தெரிவுசெய்து பதில் வழங்க மெக்ராத் மறுத்துவிட்டார்.
டோனி, கோக்லி இருவரும் சிறந்தவர்கள். டோனி அமைதியான சுபாவம் கொண்டவர். துடுப்புமட்டையில் ஆக்ரோசத்தை வெளிப்படுத்துபவர். மரியாதைக்கு உரியவர். கவனித்துப் பாருங்கள், எந்த ஒரு பந்துவீச்சாளரும் டோனியுடன் வார்த்தை மோதலில் ஈடுபடமாட்டார். ஒவ்வொருவரினதும் மதிப்பைப் பெற்றவர் அவர். ஒரு சிறந்த தலைவர். கோக்லி, டோனியிடமிருந்து முழுவதும் வேறுபட்டவர். அவர் ஆக்ரோச குணம் கொண்டவர். வார்த்தை மோதலில் ஈடுபட்டால் துடுப்புமட்டையால் மட்டுமன்றி வார்த்தையாலும் பதிலடி கொடுக்கக்கூடியவர். இருவரும் சிறந்த தலைவர்கள். இரு வேறுபட்ட தன்மைகளில் ஒவ்வொருவரும் சிறந்து விளங்குகிறார்கள் என மெக்ராத் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து கால்பந்தாட்ட அணியின் தலைவராக நீடிக்கிறார் வெய்ன் ரூனி




இங்கிலாந்து தேசிய கால்பந்தாட்ட அணியின் நட்சத்திர வீரரான வெய்ன் ரூனி, அந்த அணியின் தலைவராக தொடருவது உறுதியானது.

இங்கிலாந்து அணியின் புதிய முகாமையாளராக சாம் அலைஸ்டன் அண்மையில் நியமிக்கப்பட்டார். ரூனி சமீபகாலமாக தடுமாறி வந்ததால், அலைஸ்டன், அணியின் தலைமைப் பதவியை ரூனியிடமிருந்து எடுத்துக் கொள்ளலாம் என்று தகவல்கள் வெளியாகின. ஆனால் அலைஸ்டனின் தெரிவாகவும் ரூனியே அமைந்துள்ளார். இருப்பினும் நீண்ட பரிசீலனையின் பின்னரே அவர் ரூனியைத் தெரிந்துள்ளார்.

ரூனியைத் தெரிந்தெடுத்தது இலகுவான முடிவு அல்ல. நீண்ட பரிசீலனையின் பின்னரே அவருக்கு தலைமைப் பதவியை வழங்கினேன். அவர் அற்புதமான வீரர். அணியின் சக வீரர்களிடம் மரியாதையைப் பெற்றவர். ரூனி அணியை திறமையாக வழிநடத்திச் செல்வார் என்று கருதுகிறேன் என அலைஸ்டன் மேலும் தெரிவித்தார். (ம)

## முகுருசா அதிர்ச்சித் தோல்வி

அமெரிக்கரென்னிஸ்தொடரிலிருந்துவெளியேற்றப்பட்டார் ஸ்பெய்னின் கார்பின் முகுருசா. பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்தில் உள்ள வீராங்கனையான முகுருசாவை எதிர்த்து தரப்படுத்தலில் முதல் 75 இடங்களில் இல்லாத இத்தாலியின் அனட்சியா மோதினார். முதலிரு செற்களையும்7:5, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில்கைப்பற்றிய அனட்சியா 2:0 என்றநேர்செற்கணக்கில் வெற்றி பெற்று முகுருசாவை வெளியேற்றினார். (ம)

## இலங்கை ரசிகர்கள் மீது கண்ணீர்ப்புகைபிரயோகம்



இலங்கைக் கிரிக்கெட் அணியின் ரசிகர்கள் மீது பொலிஸார் நேற்றுமுன்தினம் கண்ணீர்புகைப் பிரயோகம் செய்ததாக அறியவருகிறது.

இலங்கை–ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் நான்காவது ஆட்டம் பல்லேகல மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த மைதானத்தில் 18 ஆயிரம் இருக்கைகளே உள்ளன. இதனால் ஆசன முன்பதிவுக்கு கடும் போட்டி நிலவியது. நுழைவுச்சீட்டு கிடைக்காத ரசிகர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும், பின்னர் அது கைகலப்பாக மாற்றம் பெற்றதாகவும் அறியவருகிறது. இந்த நிலையைச் சமாளிக்க பொலிஸார் ரசிகர்கள் மீது தண்ணீர், கண்ணீர் புகை பிரயோகம் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

V2 TRAVELS 11/09/2016 ஞாயிற்றுக்கிழமை
பருத்தித்துறையில் எமது 5வது கிளை திறப்புவிழாவில் பணப்பரிசு
நீங்கள் வெளிநாட்டுக்கு பார்சல் அனுப்பப்போறீங்களா?
விமானப்பயணச்சீட்டு எடுக்கப்போறீங்களா?
ரூபா 1000/= பணப்பரிசு
UK – 550*/=Kg
DELIVERY IN 3-5 DAYS
முற்பதிவுகளுக்கு - 0768226240

FLC FRENCH LANGUAGE CENTRE "FOR THE BEST FRENCH FOREVER"
FRENCH CLASSES
பிரான்ஸ், கனடா, சுவிஸ், பெல்ஜியம் செல்வோர்க்கான Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
விரிவுரையாளர் : MR. V. J. (Trained in France - 2007)
DELF A1, A2, B1 Exam இல் 100 % சித்தியடையலாம்.
இதுவரை 1125 மாணவர்கள் French கற்றுள்ளனர்.....
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 03. 09. 16 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 12.09.16 Mon@ 3:30 pm.
ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

VCM INSTITUTE
Near the Manogara Junction, K.K.S Road, Jaffna.
A/L 2016 Repeat
இணைந்த கணிதம்
B. ரவீந்திரன் B.Sc
ஆரம்பம் 05.09.2016 திங்கள் காலை 7.00 மணி

A/L 2016 ல் தோற்றிய மாணவர்களுக்கான புதிய கற்கைநெறிகள் ஆரம்பம். 2016 செப்டெம்பர்
Diploma courses
Civil Draughtsmanship - (1 Year Full Time)
Information and Communication Technology (ICT) - (8 Months Full Time)
Computer Certificate Courses (3 - 4 Months Part Time)
NVQ Level 3 (Accredited) Course - Computer Application Assistant (CAA)
Certificate in Microsoft Office
Certificate in Printing Technology
Certificate in AutoCAD 2D & 3D Modeling
மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது. (பதிவு இலக்கம்: P25/0014)
For More Information:
Director,
Jaffna College Institute of Technology,
Vaddukoddai.
Jaffna, Sri Lanka. Tel:0212250975/0213213139

NEW SCIENCE WORLD
Navalar Road-Brown Road Junction, Jaffna
Web : www.physicsocean.com E-mail : info@physicsocean.com
VICTORY MUST
G.C.E (A/L) 2017
To Inquire : 077 336 4055
Day Classes
திங்கள் - வெள்ளி
பௌதிகவியல் – திரு. R. குகன், திரு. R. குமரன்
இரசாயனவியல் – திரு. டயஸ், திரு. K.T. சிவகுமார்
உயிரியல் – திரு. S. பொன்திவாகரன், திரு. V. உமாசங்கர்
இணை.கணிதம் – திரு. S.S. செந்தில்நாஜ்
ஆரம்பம் :- 05.09.2016 திங்கள் மதியம் காலை 7.00 மணி

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
இம்மாதம் நடைபெறவுள்ள பரீட்சைகளுக்கு
சுங்கப்பரிசோதகர் – சனி,ஞாயிறு 11.00-5.00மணிவரை
சமுர்த்தி – சனி,ஞாயிறு 1.00-5.00மணிவரை
சட்டக் கல்லூரி நுழைவு – சனி,ஞாயிறு 1.00-5.00 மணிவரை
வடமாகாண ஆசிரியர் – பிரதி ஞாயிறு 10.00-3.00 மணிவரை
கணக்காய்வாளர் – சனி 1.00-5.00 ஞாயிறு 9.00-4.00
பேராதனை வெளிவாரி நுழைவுக்கான IQ,GK – பிரதி ஞாயிறு 3.00-5.00
இறைவரி,கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் – பிரதி ஞாயிறு 2.00-5.00
T.P 076 6883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி பிரிவு 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (கொமர்ஷல் வங்கியருகில்)

தவறிவிட்டது
அமலநேசன் சாம்றோய் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (903060948V), சாரதி அனுமதிப்பத்திரம் (B859964), காப்புறுதி வரிப் பத்திரம் போன்றவை கடந்த 29.08.2016 திங்கட்கிழமை நல்லூர் சூழலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தந்துதவுங்கள். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
077 217 8575, 077 722 8170

SPOKEN ENGLISH
இம்முறை A/L எழுதியோர் தொழில் புரிவோர் மற்றும் இளைஞர் யுவதிகளுக்கானது
இலகுவழி மூலமான திரு.ஷாம்சனின் 3 மாத பயிற்சிநெறிகள் ஆரம்பமாகின்றன
இறுதிப் பதிவுத்திகதி 03.09.2016
சனி,ஞாயிறு வகுப்புகள்
பிரிவு 1.காலை 8.00 - 10.00
பிரிவு 2.காலை 10.00 - 12.00
பிரிவு 3.காலை 1.00 - 3.00
பிரிவு 4.காலை 3.00 - 5.00
ஒவ்வொரு பிரிவிலும் 20 மாணவர்கள் மட்டும். பயிற்சிநெறிமுடிவில் DIPLOMA சான்றிதழ்
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 021 320 3313 077 1570 486

வேலை வாய்ப்பு
DM International
சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட எமது நிறுவனமானது அலுவலக ரீதியாகவேலை வாய்ப்புக்களை கொடுக்கவுள்ளது.
தகைமை
O/L, A/L படித்தவர்களும் இந்த வருடம் A/L Exam முடித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு
077 0771377,076 8643505

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.